Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 1-9-2005 Issued 1-9-2005

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 17, 2005—தொகுதி 73—எண் 2
Thursday the 17th March, 2005—Volume 73—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

V211, 31'P05
P05.73.2
226640

17-3-2005

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 225-260 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு-மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 261-264 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) மக்களவைத் தலைவர் கூட்டியுள்ள கூட்டத்தில் பேரவைத் தலைவர் கலந்துகொள்வது | 264 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 265 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| கோயம்புத்தூர், காந்திபுரம் மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் வீட்டுவசதிவாரிய வீடுகளைச் செப்பனிடுதல் | 265-268 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—**தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 12 —கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 269-357 |

பக்கங்கள்

5. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் | 269,284, 289-298,301, 302,304-306, 307,308,322, 337,341-344, 346,347,349, 352 |
| டாக்டர் க. பொன்முடி | 285-289, 291-292,293, 294-295,296, 297,298,299,300, 301,303-304, 305,306,309, 310,347 |
| திரு. எம். சுப்பையா பாண்டியன் | 311-319 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 284,319-327 |
| திரு. மே.ப. காமராஜ் | 281,328-333, 334,335,336 |
| திரு. கே.சி. கருணாகரன் | 274,336-341, 343-344 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 344-346, 347-351,352 |
| *திரு. ப. அரசன் | 280,352-357 |

6. **அரசினர் தீர்மானம்—**

| | |
|---|---|
| விதி 32-ஐத் தளர்த்தல் | 357-358 |

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 358


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 4, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 17, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

செல்வம் ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளரிடம் சேரின், அது வேர்முதல் கொழுந்துவரை எல்லா உறுப்பும் பல்வேறு நோய்க்கு மருந்தாகித் தப்பாது பயன்படும் மரத்தையொக்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 181, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

181—

### அரசு கலைக் கல்லூரி

***20234—திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 17

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்பதை அனைவரும் அறிவோம். பெரம்பலூர் பகுதியில் பெரும்பான்மையாக தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கின்றதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டும், மாணவ, மாணவியர்களின் நலனைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே இந்தக் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியிலே அரசு கலைக் கல்லூரி அமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்வாரா என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் ஓர் அரசுக் கல்லூரியும், 6 சுயநிதிக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 7 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தின் அருகிலுள்ள திருச்சி மாவட்டத்தில் 3 அரசுக் கல்லூரிகளும், 9 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் மற்றும் 9 சுயநிதிக் கல்லூரிகளும் ஆக மொத்தம் 21 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பெரம்பலூர் பகுதியில் தற்போதுள்ள கல்லூரிகள், அங்குள்ள மாணவர்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், தேவையின் அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கல மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். அரசு நிதியுதவியின்றி கலைக் கல்லூரி திறப்பது குறித்து தனியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே பெரம்பலூர் பகுதியிலே, அரசு கலைக் கல்லூரி இருக்கிறது என்கின்ற பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். பெரம்பலூர் மாவட்டத்திலே அரியலூர் பகுதியிலே [illegible] கல்லூரி இருக்கிறது. பெரம்பலூர் என்பது

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22640
சென்னை-600 008



2005 மார்ச் 17]

மாவட்டத்தின் தலைநகரமாகும். அங்கே மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அலுவலகம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் போன்ற மிக முக்கியமான அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்ற நிலையில், ஒரு அரசுக் கலைக் கல்லூரி இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்கின்ற கருத்திலே ஏழை, எளிய மக்களினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மாணவர்களினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மீண்டும் மறுபரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க முன்வருவாரா என்று தங்களின் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளைத் திறப்பது என்பது, அந்தந்தப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தே இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏதாவது புதிய கல்லூரிகள் திறக்க வேண்டுமென்றால், பல்கலைக்கழகங்களே விண்ணப்பங்கள், கோரிக்கைகள் அனுப்பினால் அரசு அதைப்பற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182, திரு. ராதாரவி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**182—**

### தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்

***31114—திரு. ராதாரவி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட கலை மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படும் வகையில் தலைமை நிறுவனமாக தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை தலைமை நிறுவனமாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 மார்ச் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க காலத்திலே தமிழை வளர்ப்பதற்காக இயல், இசை, நாடகம் என்ற 3 பிரிவுகளிலே தமிழை வளர்த்தார்கள். இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இயல், இசை, நாடகத்திலே நடுநாயகமாக இருப்பது இசை. இன்றைய தமிழர்கள் தமிழிசையை விட்டுவிட்டு வேறு இசைக்கு, மாற்று மொழி இசைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். உலகத்திலே இருக்கிற இசைகளிலே ஆதி இசை நம்முடைய தமிழ் இசை. தமிழிசையை விட்டுவிட்டு நம்முடைய தமிழர்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே—தமிழிசையை விட்டுவிட்டு மாற்று இசைக்குச் சென்றுகொண்டிருக்கின்ற காரணத்தினாலே—தமிழிசையை வளர்ப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே, ஆதி இசையான தமிழிசையை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா? அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மத்தியிலே வளர்க்க வேண்டும். குழந்தைகள் மத்தியிலே தமிழிசையை வளர்ப்பதற்கு பள்ளிகளிலே இதை ஒரு பாடமாகக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மற்றும் பண்பாடு தொடர்புடைய பணிகளை மேற்கொள்ள கலை, பண்பாட்டு இயக்ககம், அரசாணை நிலை எண் 243, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை, நாள் 23-12-1991-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் என்ற கலை நிறுவனம், கலை பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. அரசாணை எண் 23, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 1-2-1994, மற்றும் அரசாணை எண் 37, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 8-3-2002-ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்டக் கலை மன்றங்கள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. கலைகளை போற்றிப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மாவட்ட அளவில் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் செயல்பட்டு வருகிறது. மாவட்டக் கலை மன்றங்களும்,



2005 மார்ச் 17]

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றமும் தனித்தனிச் சங்கங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், அவை சுயாட்சி அதிகாரம் பெற்றுள்ளதாலும், மாவட்டக் கலை மன்றங்கள் இயல், இசை, நாடக மன்றத்தின் தலைமையின்கீழ் இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதற்கில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. இந்நிலையில் இக்கோரிக்கையை ஏற்க இயலாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாட்டின் பழமையான கலைகளான கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து, பாவைக்கூத்து, வில்லுப்பாட்டு, கிராமப்பாட்டு, நாதஸ்வரம், பரதம், நாடகங்கள் போன்ற கலைகள் எல்லாம் இன்றைக்கு நலிந்துகொண்டு வருகின்றன. அவற்றைக் காப்பாற்றுகின்ற வகையிலும், அதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதத்திலும், இந்தக் கலைகள் எல்லாம் அழிந்து போகாமல், வருகின்ற சந்ததியினருக்கும் அந்தக் கலைகள் தெரிய வேண்டும் என்ற நோக்கத்திலும், அரசு விழாக்களிலும், அரசுத் துறையின் சார்பாக எடுக்கும் எல்லா விழாக்களிலும் தவறாமல், கண்டிப்பாக இந்தக் கலைஞர்களைப் பயன்படுத்தி அந்த விழாக்களில் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா? மேலும், இந்தக் கலைகளை எல்லாம் காப்பாற்றும் விதத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இயல் இசை நாடக மன்றத்திற்கு, அதன் நிர்வாகத்திற்கும், இந்தக் கலைஞர்கள் இறந்துபோனால், அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்வதற்கும் கலைமாமணி போன்ற விருதுகள் கொடுப்பதற்காக எடுக்கப்படும் விழாக்களுக்கு செலவு செய்வதற்கும், நலிந்த கலைஞர்களுக்கு மாதாமாதம் ஓய்வூதியத்தொகை கொடுப்பதற்கும் ஆண்டுதோறும் எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது? இந்தக் கலைகளையெல்லாம் காப்பாற்ற அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கலை, பாரம்பரியம் மிக்க கலைகளைப் பாதுகாப்பதற்காகத்தான் கலை பண்பாட்டுத் துறை இயக்ககத்தின்கீழ்

[2005 மார்ச் 17

இப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கி, அந்தக் கலைஞர்களைப் பாதுகாத்து வருகிறது. கலைமாமணி விருதுகளும் மற்றும் நலிந்த கலைஞர்களுக்கு மாத ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இன்று எத்தனை கலைஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இயல், இசை, நாடகம் மிகப் பிரசித்தி பெற்ற ஒன்று. உலகத்திலேயே தமிழ்நாட்டினுடைய கலாச்சாரங்கள், பாதுகாக்கப்படும் வகையில் இந்த இயல், இசை, நாடகக் கலைஞர்களால் பல்வேறு நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. இப்போதெல்லாம் பார்த்தால் நாடகக் கலை, இயல், இசைக் கலைகள் எல்லாம் நலிவடைந்து கொண்டு வருகின்றன. ஏதோ காரணம் எல்லாம் சொல்கிறார்களேயொழிய, முக்கியத்துவம் தரப்படவில்லை. ஆகவே, மீண்டும் நமது அரசு இந்தத் துறைகளுக்கு நிதியை ஒதுக்கி, அந்தக் கலைஞர்களையெல்லாம் சீரான வகையிலே, மேம்படுத்தும் வகையிலே, கிராமப்புற பாரம்பரிய கலாச்சாரங்களை வளர்க்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்தக் கலைஞர்களுக்கு எல்லாவிதமான ஊக்கமும் இன்றைக்குத் தரப்பட்டு வருகின்றன. அந்த நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. கலைமாமணி விருதும் வழங்கப்பட்டு வருகிறது. அந்தக் கிராமப்புற கலைகளையும் இன்றைக்குப் போற்றிப் பாதுகாப்பதற்காக, ஆண்டுதோறும் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.



2005 மார்ச் 17]

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலமாக பொம்மலாட்டக் கலை அழிந்து விட்டதாகவே தகவல் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, அந்த பொம்மலாட்டக் கலைஞர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, பொருட்காட்சிகளிலே அந்தப் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளையும் மற்றும் எய்ட்ஸ், நமது கிராமம் திட்டம் போன்ற விழிப்புணர்வுகளை பல்வேறு கிராமங்களில் நடத்துகின்ற அந்த நிகழ்ச்சிகளிலே, இந்தப் பொம்மலாட்ட கலைஞர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறிலே இருக்கின்ற புரிசை கிராமத்திலே தெருக்கூத்து கலைஞர்களுடைய நிலையும் நலிவுற்ற நிலையில் இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையிலே அவர்களை அந்தப் பிரச்சாரப் பணியிலே ஈடுபடுத்த அரசு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் அரசு நிகழ்ச்சிகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப்பற்றி சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய அரசிலே இயல், இசை, நாடக மன்றத்தைச் சார்ந்தவர்களை கௌரவிக்கின்றமுகத்தான் மாவட்டங்கள்தோறும் மன்றங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்குப் பாராட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அது எந்த அளவுகோலின் அடிப்படையிலே, இயல் இசை நாடக மன்றத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்தப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன? அவர்களைத் தேர்வு செய்பவர்கள் யார்? யார் அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றார்களோ அவர்களை வைத்துச் செய்யப்படுகிறதா அல்லது அரசு அதிகாரிகள் மூலம் அதற்கான நிர்ணயம் செய்யப்படுகிறதா? எந்த அளவுகோலின் அடிப்படையிலே அவர்களுக்கு அந்தப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன? தமிழகத்திலே இதுவரைக்கும்

[2005 மார்ச் 17

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களை அறிவிக்க முடிந்தால், அறிவிக்கும்படி உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகள், அதற்காகத் தனியாக அந்த இயல், இசை, நாடக மன்றத்திலே இருக்கின்ற தலைவர் மற்றும் உறுப்பினர், செயலாளர்கள் கொண்ட ஒரு தேர்வுக் குழுவின் மூலமாகத் தேர்வு செய்யப்படுகின்றன. எத்தனை கலைஞர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்கான விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மெல்லிசை அதிகமாக எல்லா இடங்களிலும் வந்திருக்கிறது. இந்த மெல்லிசையையும் அதோடு சேர்த்து, அவர்களுக்கெல்லாம் பொதுவாக ஒரு திருவிழா, மாரியம்மன் திருவிழா போன்ற திருவிழாக்கள் நடக்கின்றபோதும், கூழ் வார்க்கின்ற திருவிழா நடக்கின்றபோதும், இந்த மெல்லிசை வைப்பதற்கு—அதேபோல பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்றவை எல்லாம் வைப்பதற்கு போலீஸ் அனுமதிதான் சில நேரங்களிலே கிடைக்கமாட்டேன் என்கிறது. அந்த ஆதரவு கிடைத்தாலும்கூட ஓரளவுக்கு அவர்கள் அந்தக் கலையை வளர்த்துக்கொள்ள முடியும். காவல் துறையிடம் ஆங்காங்கே இவர்கள் அனுமதி கேட்கின்றபோது பொய்க்கால் குதிரை நடத்தும்போது traffic jam ஆகிறது என்று விடமாட்டேன் என்கிறார்கள். அதேபோல மயில் காவடி வருகின்றபோது, 4,5 பேர் மயில் காவடி பிடித்தால் பாதி ரோடு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி அமைச்சர் இதற்கு என்ன பண்ணுவார்?

வினா எண் 183 மற்றும் 184 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 185, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2005 மார்ச் 17]

**185—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***35925—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, மாச்சம்பாளையம், காமராஜ் நகர், பிள்ளையார்புரம், குறிச்சி ஹவுசிங் யூனிட் போன்ற பகுதிகளை உள்ளடக்கியவாறு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், மாச்சம்பாளையம், காமராஜ் நகர், பிள்ளையார்புரம் மற்றும் குறிச்சி வீட்டுவசதி யூனிட் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியவாறு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட காமராஜ் நகர், மாச்சம்பாளையம், குறிச்சி ஹவுசிங் யூனிட், அண்ணா நகர், பிள்ளையார்புரம் போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 50,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றார்கள். இப்பகுதியிலே வசித்து வருகின்ற பெரும்பாலான பொதுமக்கள் அருகில் உள்ள மில்களிலும், தொழிற்சாலைகளுக்கும்தான் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நோய்வாய்ப்பட்டால், அவர்கள் உடலுக்கு வைத்தியம் செய்துகொள்வதற்கு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் ஒரு நாள் leave போட்டுவிட்டுத்தான் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை அந்தப் பகுதியிலே நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி பொதுமக்கள் நலன் கருதி, அவசியம் ஒரு சிறப்புத் திட்டத்திலாவது மேற்கண்ட இடங்களை உள்ளடக்கியவாறு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவாரா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு

[2005 மார்ச் 17

இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற ஆண்டினிலே நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் என்னுடைய தொகுதியிலே, வரவிருக்கின்ற நிதி ஆண்டிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று செய்து கொடுப்பேன் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற அனைத்துத் தரப்புப் பொதுமக்கள் சார்பில், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு எவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும் என்று மத்திய அரசு குறியீடாக வைத்திருக்கிறது? அந்தக் குறியீட்டின்படி, தமிழகத்திலே எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன? புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கிட்டத்தட்ட 1,415 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல, மத்திய அரசினுடைய இலக்கீட்டைப் பார்த்தால்கூட, குறைந்தது 30 ஆயிரம் அளவிற்கு மக்கள்தொகையுள்ள சமவெளிப் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அதேபோல, மலைப்பாங்கான பகுதியிலே, கிட்டத்தட்ட 20 ஆயிரம் மக்கள்தொகை இருந்தால், அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் அமைக்கின்ற ஒரு குறியீடு இருக்கிறது. இன்றைய சூழ்நிலையைப் பார்க்கும்போது—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்; அந்தக் கோரிக்கையின் அடிப்படையைப் பார்க்கும்போது—இப்போதுள்ள



2005 மார்ச் 17]

மக்கள்தொகை கணக்கை எடுத்துக்கொண்டு இந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டிய நிலைமையையும், ஆங்காங்கே கிராமங்களிலுள்ள மக்கள்தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், வருகின்ற ஆண்டில், மத்திய அரசுக்கு தமிழக அரசின் மூலமாக தேவையான நிலையங்களை மக்கள்தொகையின் வசதிக்கேற்ப அமைக்க, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்று வகுக்கப்பட்ட நியதி, பல ஆண்டுகளுக்கு முன்னாலே, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னாலே வைத்த ஓர் இலக்கு. இப்போது மக்கள்தொகை மிக அதிகமாக வளர்ந்து வருகின்ற இந்தச் சூழலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இலக்கைக் குறைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். ஏனென்றால், என்னுடைய வேலூர் ஒன்றியத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும் இருக்கிறது. அலமேலுரெங்காபுரம் என்ற இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதற்காக இந்த அவையில், இரண்டு முறை உறுதிமொழி அளிக்கப்பட்டு, இன்னும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு எழுதி, அந்த இலக்கைத் தாங்கள் தயவுசெய்து, 30 ஆயிரம் என்று இருப்பதைக் குறைத்து—இன்னும் சொல்லப்போனால், ஒரு இலட்சம் மக்கள்தொகைகூட என்னுடைய பகுதியிலே இருக்கிறது. எனவே அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலக்கைப் பொறுத்த அளவிலே, அதை மத்திய அரசு நிர்ணயித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இப்போது இருக்கக்கூடிய மக்கள்தொகையின் அடிப்படையிலே, மேலும் ஓர் ஆய்வு செய்ததில், மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன என்கிற ஒரு கருத்துருவை, இங்கே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கண்காணிக்கும் சுகாதாரத் துறையினுடைய இணை இயக்குநர்கள் எல்லாம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மக்கள் தொகையினுடைய அடிப்படையிலே 30 ஆயிரம் இருந்தாலும்கூட, சில இடங்களிலே அங்கே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும் என்று கருதும்போது, அதையும் கருத்தில்கொண்டு, தமிழகத்திலே மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எவ்வளவு அதிகமாகக் கொண்டு வரமுடியுமோ, அதற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனை பெற்று, வருகின்ற ஆண்டிலே அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பேரூர் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வரும் என்று கூறினார்கள். அதேபோல், எங்களுடைய மாவட்டத்திலே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட 9 இடங்களிலே, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, enter-upon permission அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நபார்டு திட்டத்தின் மூலமாக, நடப்பு நிதியாண்டிலேயே நிதியைப் பெற்று இந்த ஆண்டே கட்டித்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, தற்போது அரசுக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 1,368. கிட்டத்தட்ட 47 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதிலே, அரசுக் கட்டடம் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 37. அரசு, தற்போது கட்டி வருகின்ற கட்டடங்களின் எண்ணிக்கை 10. ஆகவே, தங்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அவருடைய தொகுதிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடம், அரசுக் கட்டடத்தில் இருந்தாலோ, அல்லது அரசுக் கட்டடத்தில் இல்லாமல் வாடகைக் கட்டடத்திலோ, அல்லது ஊராட்சி ஒன்றியக் கட்டடத்திலோ, அல்லது துணை சுகாதார நிலையம் அல்லது இதர





கட்டடங்களிலோ இருக்குமேயானால், வருகின்ற நிதியாண்டில், நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பணன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுப்புறச் சுவர் இல்லாமல், மிகவும் அசுத்தமான நிலையிலே இருக்கின்றன. அவற்றிற்குச் சுற்றுப்புறச் சுவர் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ரூபாய் ஒரு கோடி நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். உங்களுடைய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுப்புறச் சுவர் இல்லை என்ற கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். தமிழக அரசினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வோராண்டும், அப்படிப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பழுதுபார்ப்பதற்காக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவ்வாறு நிதியை ஒதுக்கியதன் அடிப்படையிலே, சில மாவட்டங்களிலேயிருந்து கோரிக்கை வரும்போது, பொதுப் பணித் துறையின் மூலமாக அந்தச் சுவர்களைக் கட்ட—அதாவது சுற்றுப்புறச் சுவர்களைக் கட்டுவதற்குத் தடையிருந்தாலும், இது சுகாதாரத் துறை என்ற காரணத்தாலே-- கடந்த ஆண்டு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடமும் அந்த கோப்புகளையெல்லாம் எடுத்துச் சென்றபோது, வருகின்ற ஆண்டிலே அந்தத் தடையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறியிருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டிலே அந்தத் தடையை நீக்கும்போது, உங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த பராமரிப்பு நிதியிலிருந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 186, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

[2005 மார்ச் 17

**186—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**•41732—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்போரூர் தொகுதி, மானாம்பதி ஊராட்சி ஊரக மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றம் செய்யப்படுமா?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மானாம்பதி கிராமத்தில் மூடப்பட்டுள்ள ஊரக மருத்துவமனையினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, திருப்போரூர் தொகுதி, மானாம்பதி ஊராட்சி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள்தொகை சுமார் 60 ஆயிரம் பேர் கொண்ட தொகுதியாகும். இங்குள்ள மக்கள் மகப்பேறு, உடல்நிலை சரியில்லாத நிலை மற்றும் விபத்துகள் ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 27 கி.மீ. உள்ள செங்கற்பட்டுக்கும் அல்லது சென்னைக்கும் செல்ல வேண்டும். எனவே, அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர இந்த நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலேயாவது, மக்கள் நலனைக் கருதி அரசு அமைத்துத் தருமா என்று ம்ாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகங்கள் மற்றும் அங்கிருக்கக்கூடிய மருந்தாளுநர்களையும், மருத்துவர்களையும் சுகாதாரத் துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு பரிந்துரையை ஊரக வளர்ச்சித் துறையினுடைய செயலாளருக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பியிருக்கின்றார்கள். அந்தக் கோப்புகள் சுகாதாரத் துறைக்கு வரும்போது கிட்டத்தட்ட தமிழகத்திலே இருக்கக்கூடிய 133 முழு நேர dispensary - களையும் அதேபோன்று



2005 மார்ச் 17]

142 பகுதிநேர dispensary-களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற ஆண்டிலே இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று ஏற்கெனவே அங்கிருக்கக்கூடிய அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஊரக மருத்துவமனையானது சித்தா மருத்துவமனையாக 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. இதை, தாங்கள் மீண்டும் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றீர்கள். இதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று திருப்போரூர் ஒன்றியம் அதிக மக்கள்தொகை கொண்ட ஒன்றியமாகும். இங்குள்ள மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் செங்கற்பட்டுக்கும் சென்னைக்கும்தான் செல்கின்றார்கள். எனவே, மக்கள் நலனைக் கருதி இங்குள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றித் தரப்படுமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடனே, 2001-லிருந்து தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள். அதாவது அங்கிருக்கக்கூடிய கிராம மக்கள் நலனைக் கருதி, அவர்களுக்கு அடிப்படை வசதிகள் தேவையென்ற எண்ணத்திலே, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒன்றியத்திற்கு ஒன்றைத் தேர்வு செய்து, இன்றையதினம் கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் கோரிக்கையாக இருப்பதாக மாமன்ற உறுப்பினர் கூறியிருப்பதால்,

[2005 மார்ச் 17

இதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுமதி தருகின்றபோது, அதற்குரிய கட்டட வசதிகள் மற்றும் உபகரணங்களையெல்லாம் எங்களது சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பொதுமக்களின் பங்களிப்போடு நாங்களே கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் செலவை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, வளர்ந்து வருகின்ற திருப்பூர் பகுதியில், பாண்டிய நகர் பகுதியில் புதிதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கிறார்கள். ஏற்கெனவே இதற்கு பதிலளிக்கும்போதுகூட, மக்கள்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகமாக தேவைப்படுகின்ற காரணத்தினால், வருகின்ற ஆண்டில் தமிழ்நாட்டிலே எவ்வளவு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகமாகத் தேவைப்படும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, நீங்கள் கேட்ட கோரிக்கை குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல ஏற்கெனவே தங்களுடைய தொகுதிக்குட்பட்ட அரசு மருத்துவமனையிலே தாமாக முன்வந்து செய்யக்கூடிய வசதிகள் குறித்து சொன்னீர்கள். அத்தகைய வசதிகளை அவர்கள் செய்ய முன்வருவார்களானால், அதற்கும் அரசு கண்டிப்பாக உதவி செய்யும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு.



2005 மார்ச் 17]

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார மையமாக இருப்பதை ஆண்டுதோறும் தரம் உயர்த்தி, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றும்போது, அந்த ஒன்றியத்தில் அந்த ஆரம்ப சுகாதார மையத்திற்குப் பதிலாக, வேறு ஆரம்ப சுகாதார மையம் கட்டித் தர அரசு முன்வருமா? அவ்வாறு ராதாபுரம் தாலுக்காவிலுள்ள வள்ளியூர் ஆரம்ப சுகாதார மையமும் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக கள்ளநல்லூர், ஆனைக்குளம், துலுக்கர்பட்டி என்று ஏதாவது ஒரு பகுதியில் அந்த ஆரம்ப சுகாதார மையத்தை ஆரம்பித்துத் தருவீர்களா? அதேபோன்று, ராதாபுரத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு மருத்துவமனைக்குப் பதிலாக சுனாமியால் பாதிக்கப்பட்ட இடிந்தகரை பகுதியில், அரசு ஆரம்ப சுகாதார மையம் கட்டித் தர முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கோரிக்கையைப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட உங்கள் தொகுதிக்கு மட்டும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் கேட்பதாகத் தெரிகிறது. வள்ளியூரினுடைய அரசு மருத்துவமனை இன்றையதினம் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டும் அதேபோல் கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே Trauma Care Centre என்ற விபத்துக்குள்ளாக்கப்பட்ட நோயாளிகளைப் பாதுகாப்பதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, அதற்கும் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்கள் கூறியதுபோல இடிந்தகரை மற்றும் திசையன்விளை ஆகிய பகுதிகளிலே இருக்கக்கூடிய—உங்களுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே--மக்கள் தொகைக்கு ஏற்றாற்போலும், நிதிநிலைக்கு ஏற்றாற்போலும், வருகின்ற நிதியாண்டிலே ஏதாவது ஒரு இடத்திலே நீங்கள் கேட்டதுபோல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது—இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய தரம் உயர்த்தப்படுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மற்ற— கோரிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே, நிதிநிலைக்கேற்ப, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏதாவது ஒன்று தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திர பிரசாத்.

[2005 மார்ச் 17

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கப்பியறை சிறப்பு ஊராட்சியில், ஓலவிளை என்ற ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக ஒரு ஏக்கர் நிலத்தை அரசு பெயரிலே வாங்கி, 10 ஆயிரம் ரூபாயும் கட்டி, எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடக்கவில்லை. அரசு விதிப்படி 30 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை அங்கே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலாவது அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்து தருவீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட கப்பியறை அரசு மருத்துவமனையும் தற்போது தரம் உயர்த்தப்பட்டு மாவட்ட மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உங்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இன்றையதினம் அந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, மாவட்ட மருத்துவமனையாக மாற்றியமைத்திருக்கிறார்கள். அதேபோல, ஓலவிளை என்ற பகுதியிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அந்தக் கோரிக்கையைப் பொறுத்து வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 1,415 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கிராமப்புறங்களிலே 30 ஆயிரம் என்றும் மலைப் பகுதிகளிலே 20 ஆயிரம் மக்கட்தொகை இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். மலைப் பகுதியிலே வாழ்கின்ற tribal area-விலே நான்கு வீடுகள் இருந்தால்கூட அது ஒரு கிராமம் என்று சொல்கிறார்கள். அங்கு 20 ஆயிரம் பேர் ஒரே இடத்திலே வாழக்கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன. கல்வி அறிவு அந்த மக்களுக்கு அவ்வளவு போதவில்லை. எனவே, கிராமப்புறங்களிலேயிருந்து town area-விலே இருக்கிற Taluk Headquarters



2005 மார்ச் 17]

Hospital -க்கு வர வேண்டுமென்றால்கூட, 40 கிலோமீட்டர், 50 கிலோமீட்டர், 100 கிலோமீட்டர்கூட வர வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் நோய்வாய்ப்பட்டவர்கள் டாக்டரைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை விட அங்கு இருக்கிற அந்த கிராமப் பூசாரிகள், விபூதி ஊதினாலே போதும் என்ற நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அந்த மக்களுடைய நலன் கருதி 20 ஆயிரம் என்பதைக் குறைத்து எல்லா மலைப் பகுதிகளிலேயும் 5,000, 10,000 பேர் இருக்கக்கூடிய பகுதிகளிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசு முன்வருமா? மத்திய அரசு விதி இருக்கிறது என்று சொன்னார்கள். மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் இன்றைக்கு நிறைய திட்டங்களைக் கொண்டு வருகின்றன. அந்தத் திட்டங்களைக் கொண்டு வருகின்றபோது இப்படிப்பட்ட சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளித்து, அந்தப் பகுதிகளில் 20,000 என்ற மக்கள்தொகைக் குறியீட்டைக் குறைத்து ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியைச் சார்ந்த மக்கள், நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள், அவர்களுக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது பற்றிய கோரிக்கை எல்லாம் வைத்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றவுடனே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு கிட்டத்தட்ட 45 Mobile Medical Unit, அதாவது நடமாடும் மருத்துவக் குழு ஒன்றை ஆரம்பித்து அவர்கள் அந்தப் பகுதியிலே சென்று, மலைப் பகுதியிலே சென்று, இன்றையதினம் அங்குள்ள மக்களுக்கு சிகிச்சையளிக்கின்றார்கள் கிட்டத்தட்ட தமிழகத்திலே 25 இடங்களிலே சுகாதாரத் துறையின் மூலமாக மலையும், மலைச் சார்ந்த பகுதிகளிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. நீங்கள் இந்தக் குறியீட்டைக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இதையும் நாங்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 187, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**187—**

## தேனீ வளர்ப்பு

**•10808—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி எவ்விதத் தொழில் வளர்ச்சியும் இல்லாத பகுதியாக இருப்பதால், அங்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தேனீ வளர்க்க கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை..

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனினும் இனிய செந்தமிழ் மொழி என்ற நம்முடைய ஒப்புயர்வுமிக்க தன்னிகரற்ற தாய்மொழி தமிழுக்கு அடுத்து சுவைமிக்கத் தேனை, வளர்த்தெடுப்பதற்கான நல்ல சூழ்நிலை என்னுடைய பெண்ணாகரம் பகுதியிலே இருக்கிறது. தேனீ வளர்ப்பதற்கு உரிய சூழ்நிலை மட்டும் அல்லாமல் அது வானம் பார்த்த பூமியாக, வறண்ட பூமியாக, முழுக்க, முழுக்க விவசாயிகளே, விவசாயக் கூலிகளே நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, அந்த மக்கள் தொழில் செய்து வருமானத்தை ஈட்டுவதற்கு எவ்வித வசதியும் இல்லாத காரணத்தினால், அங்கே மலையும், மலையைச் சார்ந்த பகுதியும் இருக்கிற காரணத்தினாலே, தேனீ வளர்ப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ள காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் தேன் உற்பத்தியை ஒரு தொழிலாகக் கொண்டு உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு, அதிலும் குறிப்பாக மானியத்துடன்கூடிய கடன் வழங்கி; அவர்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 17]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பெண்ணாகரம் தொகுதியைச் சார்ந்த பண்ணப்பட்டி என்ற இடத்தில் வாழும் இருளர் இன மக்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் 20 நபர்களுக்கு மலை வாழ் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 90 சதவிகித மானியத்தில் தேனீ பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அவர்கள் அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தின்கீழ் தொழில் புரிவதற்கு, கடனுதவி பெறுவதற்கு மேற்படி தொகுதியைச் சார்ந்த யாரும் முன்வராத காரணத்தால், அவர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல இதுபோன்ற தொழிலைச் செய்வதற்கு யாராவது முன்வருவார்களேயானால், கதர் கிராமத் தொழில் வாரியத்தை அவர்கள் அணுகுகிறபோது அதற்குள்ள வசதிகளைச் செய்து தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 நபர்களுக்கு மட்டும் வழங்கியதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் மலையிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள். மலைப் பகுதியைவிட்டு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்களுக்குக்கூட வேறு தொழில் வசதி இல்லாத காரணத்தால், இந்த அரசு அவர்களுக்கு—கடனுதவிபெற அவர்கள் முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள்—தேனீ வளர்ப்பதற்கான பயிற்சியினைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அந்தப் பயிற்சி கொடுத்து அவர்களை ஊக்குவித்து மானியத்துடன் கடன் கொடுத்தால் அவர்கள் பிழைப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினாலேதான் பயிற்சி கொடுத்து ஊக்குவித்து கடன் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எந்தத் தொழில் முனைவோருக்கும், கைவினைஞர்களுக்கும் நேரடியாக கடனுதவி வழங்குவதில்லை. இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகள் வங்கிகளிலே கடன் பெற்று இந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று

முன்வருவார்களேயானால், அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனில், 100 விழுக்காடுக் கடனில் 25 முதல் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தேனீ வளர்ப்பதற்கான பயிற்சியை ஏற்கெனவே அரசாங்கம் வழங்கிக்கொண்டிருக்கிறது. தேனீ வளர்ப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை இருக்க வேண்டும். தேன் மகசூல் பெறுவதற்குக்கூட தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும் இரண்டு கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில், மதுரம் அல்லது மகரந்தம் தரும் மரம், செடி கொடிகள் இருந்தால்தான் தேன் எடுப்பதற்குரிய நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும். வியாபார ரீதியாக தேனீ வளர்க்க வேண்டுமென்று சொன்னால், அதன் அருகிலே 100 ஏக்கர் நிலப்பரப்பிலே தேனீக்களுக்கு உணவு தரும் பயிர்கள் இருந்தால்தான் தேன் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும். இதுபோன்ற சூழ்நிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஏதாவது இருக்குமேயானால் கதர் கிராமத் தொழில் வாரியத்தை அணுகுகிறபோது விளிம்புத் தொகை பெற்று இந்தத் தொழில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வறண்ட பகுதியில் போய் தேனீ வளர்த்தீர்களானால் அதைப் பட்டினி போட்டுக் கொல்ல வேண்டியதுதான். (சிரிப்பு) திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக நம்முடைய மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தேனீ வளர்க்கப்படுகின்றது? அதுபோன்று, இந்த வாரியத்தின் மூலமாக அதிகப்படியான தேனை உற்பத்தி செய்கின்ற மார்த்தாண்டம் தேனீ உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே அரசு எந்த அளவிற்கு மானியம் கொடுத்திருக்கின்றார்கள்? எத்தனை பேர் அதிலே பயன் அடைகின்றார்கள்? ஏறத்தாழ இந்தப் பருவ காலத்தில் 4 ஆயிரம் கிலோவிற்கு அதிகமாக உற்பத்தி செய்த தேனை வாங்க வேண்டிய அந்தக் கூட்டுறவுச் சங்கம் நலிந்த நிலையில் இருக்கின்றது. அதை மாற்றுவதற்கு, அதை உரிய முறையிலே செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை மற்றும் கேரள எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் பச்சைத் தேன் கிடைக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் இரண்டே இடங்களில், மார்த்தாண்டம், ஜமுனாமுத்தூர் பகுதிகளிலே கிடைக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் கிட்டத்தட்ட 2001 ஆம் ஆண்டு 42.784 மெட்ரிக் டன்கள், 2002-ல் 82.963 மெட்ரிக் டன்கள், 2003-ல் 95.404 மெட்ரிக் டன்கள், 2004-ல் 136 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் தேன் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் நலிவடைந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். விலை நிர்ணயம் செய்கிறபட்சத்தில் சில காலதாமதம் ஏற்படுகின்ற நேரத்தில் அவர்கள் அந்த விற்பனையைச் செய்வதற்கு காலதாமதமாகிறது. 11-3-2005 அன்று ஒரு கூட்டம் நடத்தி, கேரள மாநிலத்தில் தேனுக்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த விலை இங்கு தர வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டு, இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலே தேன் விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் மலைப் பகுதி, சத்தியமங்கலம் மலைப் பகுதி போன்ற பகுதிகளில் எல்லாம் மலைவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பொருளாதாரம் மேம்படுகின்ற வகையிலே, அரசு மானியத்துடன்கூடிய கடன் வழங்கி தேனீ வளர்ப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மூலக் கேள்விக்கு பதில் சொல்கிறபோதே தெரிவித்தேன். மலைவாழ் மக்களுக்காக உடனடியாக அந்தந்த மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய வங்கிகள், இதுபோன்ற தொழிலைச் செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் முன்வருவார்களேயானால், நிச்சயமாக அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

[2005 மார்ச் 17

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜமுனாமுத்தூர் பகுதியில் தேன் அதிக அளவில் கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பல தனியார்கள் கலப்பட தேனை அங்கே விற்கின்ற காரணத்தால், அங்கேயிருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் தேனீ வளர்ப்பதற்கான கடன்களை வழங்கினால் சுத்தமான தேன் உற்பத்தியாகும் என்ற நிலையில், நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியம் தேனீ வளர்ப்பதற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பகுதிகளிலே தனியார் இதுபோன்று கலப்படத் தேனை விற்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும். சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கின்ற பெண்கள் ஒரு கூட்டமைப்பாக அரசை அணுகுகிறபோது, மானியத்தோடு உதவி செய்யக்கூடிய வழிவகைகளை அவர்களுக்கு அறிவுறுத்தி, இதுபோன்ற தொழிலைச் செய்வதற்கு அவர்களுக்கு ஆக்கபூர்வமான உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பயிரை வளர்த்தால் தேனீக்குத் தேவைப்படுகிற மகரந்தம் கிடைக்கும் என்று அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரனுக்கு காது கேட்கிற கருவி ஏதாவது வைக்க வேண்டும்.

வினா எண் 188, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.



2005 மார்ச் 17]

**188—**

**ஊரக பட்டு நூற்பாலை**

**•24613—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணையில் உள்ள ஊரக பட்டு நூற்பாலையை மீண்டும் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை; வினா எழவில்லை.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையில் உள்ள பட்டு நூற்பாலையில் சுமார் 200 விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கொண்டுவந்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் அத்தொழிற்சாலையில் தொழில் தொடங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் இன்று தமிழகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் அடுப்பு ஊதும் பெண்களையெல்லாம் தொழிற்சாலைகளின் முதலாளிகளாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் முத்தான திட்டமாகிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சுமார் 10 குழுக்களை ஒன்றிணைத்து இத்தொழிலைத் தொடங்க முன்வந்தால், இக்கட்டடத்தை அவர்களுக்கு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இவ்வாலை செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, பட்டு நூலாக மாற்றப்பட்டு, முறுக்கும் பிரிவில் முறுக்கு ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆலை ஆரம்பித்த நாள் முதல் நாளது தேதி வரையில் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு இல்லாததால், இவ்வாலைக்கு 1983 முதல் 1994 வரை 43.98 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

[2005 மார்ச் 17

இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தன்னிச்சையாக செயல்பட்டு, உயர் அதிகாரிகளின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து உற்பத்திக் குறைவினை ஏற்படுத்தி தொடர் நஷ்டத்தினை உருவாக்கி வந்த காரணத்தால், இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுய உதவிக் குழுவைச் சார்ந்தவர்கள் முயற்சி செய்தால் நடத்தலாமா என்று கேட்டிருக்கிறார். தற்சமயம் TANSILK நிறுவனத்தின் சார்பில், அரசாணை எண் 311, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆணையின்படி, ஆண்டு ஒன்றுக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் குத்தகை அடிப்படையிலே 1994-ல் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டமைப்பின் மூலம் முயற்சி செய்வாரேயானால்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழு பெண்களின் கூட்டமைப்பு சார்பிலே, இதுபோன்ற முயற்சிகளைச் செய்வார்களேயானால்—நிச்சயமாக, அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**189—**

## கட்டட வசதி

**•3662—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் போதுமான வகுப்பறைகள் இன்றி அவதியுறுவதால் கூடுதலாக வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 மார்ச் 17]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் ரூ.6.60 இலட்சம் செலவில் கட்ட அரசாணை (3ப) எண் 20, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 18-8-2004-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சீர்காழி தொகுதியில் கொண்டல் கிராமத்தில், ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. போதிய வகுப்பறைக் கட்டடங்கள் இல்லாமல், வசதிக் குறைவாக இருக்கிறது. சென்ற ஆண்டில் இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தபோதிலும், இன்னும் அதிகமான வகுப்பறைக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. எலத்தூர், பனங்காட்டாங்குடி, குமாரகுடி, தேனூர் மற்றும் வள்ளுவகுடி போன்ற பகுதிகளில் ஆதிதிராவிட மக்கள் கிராமங்களைச் சுற்றிலும் அதிகம் வசிக்கின்றனர். இப்பள்ளி மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித் தனியாகத் தங்கும் விடுதிகள் நவீன முறையில் வசதியாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளி சிறப்பான முறையில் செயல்படுவதாலும், தங்கும் விடுதிகள் போதிய வசதிகளுடன் இருப்பதாலும் கடலூர், தஞ்சை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து மாணவ, மாணவிகள் இப்பள்ளியில் வந்து சேர்கிறார்கள். இதனால் வருடா வருடம் பள்ளியில் மாணவ, மாணவிகளின் சேர்க்கை அதிகமாகிக்கொண்டே போகிறது. மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதால், மேலும் இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவும், சென்ற ஆண்டு எனது சீர்காழி தொகுதியிலே ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ள மாதானத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கும், காரைமேட்டில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 1,018 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில், 237 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில், அதிகமான அளவுக்கு மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். கல்வியினுடைய தரமும் உயர்ந்து வருகிறது. அதிகமான அளவுக்கு மாணவ, மாணவிகள் சேர்ந்து வருகின்ற காரணத்தால், 237 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் தேவை என்று கணக்கிடப்பட்டு, நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரையில் 100 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கைக்கு, கூடுதலாக மாணவர்கள் சேர்க்கை அதிகரித்து வருகின்ற பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, வருகின்ற நிதியாண்டில், தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் கூடுதலாக வகுப்பறைகள் கட்டிக்கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் சமுதாய முன்னேற்றத்திற்காக ஆதிதிராவிடர் நலத் துறை, ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றது. இது பாராட்டுதலுக்கு உரியது. அதேசமயம் இந்தத் துறையானது கல்லூரி ஒன்றைக்கூட நடத்தவில்லை. இந்த அரசு புதிய கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.** கந்தசாமி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

வினா எண் 190, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.





**190—**

## பள்ளியைச் சீரமைத்தல்

***16479—திரு. கோ. இரவிராஜ்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்தணி வட்டம், பெரியகளக்காட்டூரில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப் பள்ளி பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பெரியகளக்காட்டூரில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் 5 வகுப்பறைகள் மற்றும் தாழ்வாரத்திற்குப் புதிய சிமெண்ட் தரை போடுதல், பழுதடைந்த கதவு மற்றும் ஜன்னல்களை மாற்றி அமைத்தல், எல்லா வகுப்புகளுக்கும் மின்சார வசதி ஏற்படுத்துதல், பழுதடைந்த ஓட்டு கூரைக்குப் பதில், ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட்டினாலான கூரை வேய்தல், சமையல் அறை மற்றும் கழிப்பறைகள் பழுதுநீக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் யாவும் முடிக்கப்பட்டு, பள்ளி நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட கேள்வி. எனது தொகுதி பெரியகளக்காட்டூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக இயங்கி வந்த அரசு உயர்நிலைப் பள்ளியை நேரடியாகச் சென்று பார்க்கிறபோது அங்கே கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையிலே, இடிந்து விழக்கூடிய நிலையிலே இருந்து, அங்கே படித்த மாணவர்கள் பயந்துகொண்டு மரத்தடியிலே அமர்ந்து கல்வி பயின்றதை நான் நேரிலே பார்த்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது கட்டப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னதற்காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியிலே இயங்கிவரும் திருத்தணி மாணவியர் விடுதி, திருவேலங்காடு ஆண்கள் விடுதி,

திருத்தணி ஆண்கள் விடுதி, பெரியகளக்காட்டூர் ஆண்கள் விடுதி, திருத்தணி அரசு கல்லூரியில் இயங்கி வருகிற ஆண்கள் விடுதி ஆகியவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆகவே, அரசு நிதியின் மூலமாக இந்த நிதியாண்டிலே சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதேபோல, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 28 அரசு ஆண்கள் மாணவர் விடுதிகளிலும், 9 அரசு பெண்கள் விடுதிகளிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளில் சில குறைபாடுகள் இருப்பதாக புகார் வருகின்றது. அவற்றைப் போக்கிட மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திருவள்ளூர் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 37 மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த 21 விடுதிகளுக்கும் அரசுக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு, 8 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுதிகளுக்கு கட்டடப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிடர் நலத் துறையில், குறிப்பாக ஆதிதிராவிட மக்களின்பால் அதிகம் அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் உள்ள 1076 விடுதிகளில், 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த அந்த விடுதிகளை எல்லாம் இந்த ஆண்டோடு முழுமையாக 574 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டி சாதனை படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான். சுதந்திரமடைந்து இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பாக ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே இது வரலாற்றுச் சாதனையாக, இந்தியாவிலுள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக — முதல்வராக விளங்கி வருகிற முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர், விடுதிகளில் தங்கிப் படிக்கிற மாணவ, மாணவியர்களுக்கு உணவுகளில் ஏதோ குறைபாடு இருப்பதாக சும்மா பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. எந்த





விடுதியிலாவது குறைபாடுகள் ஏற்படுமேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கடந்த ஆட்சியிலே, தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு உணவு மானியம் ஒரு மாணவருக்கு 225 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 300 ரூபாயாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தரமான, சத்தான உணவு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஆதிதிராவிட மக்களினுடைய கல்வித் தரம் உயர்ந்து வருகிறது. அந்த மக்கள் அதிகமான அளவிற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு அரணாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லி, அங்கே இருக்கக்கூடிய ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நல்ல எண்ணத்திலேதான் நான் அதைக் குறிப்பிட விரும்பவில்லை. வேண்டுமானால், தனிப்பட்ட முறையிலே அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறேன். அவர்கள் ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை மட்டும் கோரிக்கையாக வைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hostels விவகாரத்திலே அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தவறு எங்கே நடந்தாலும் சொல்லுங்கள், தவறில்லை என்று சொன்னார்கள். எனக்குக் கருத்து வேறுபாடுகள் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னாலே S.C., S.T. Hostels எல்லாம் நல்ல நிலையில் இருக்கின்றன என்பது உண்மைதான். உண்டு உறைவிடப் பள்ளிகள் மலைப் பகுதிகளிலே இருந்து கொண்டிருக்கின்றன. செங்கம், போளூர், கலசப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்டது ஜமுனாமுத்தூர்.

[2005 மார்ச் 17

அங்கே உண்டு உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. கடந்த மாதம்கூட அந்தக் குழந்தைகளுக்கு போளூரிலிருந்து அரிசியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். மலைக்கே போகவில்லை, வழியிலேயே விற்றுவிடுகிறார்கள். விற்றுக்கொண்டு, (குறுக்கீடு) Case ஆகி நான்கூட கலெக்டர் மற்றும் D.R.O. ஆகியோரிடம் பேசியிருக்கிறேன். Case இருக்கிறது. அந்தக் குழந்தைகளை வீட்டுக்குத் துரத்திவிட்டு அரிசியைக் கொண்டுபோய் விற்று விடுகிறார்கள். வழக்கு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதை அமைச்சர் அவர்களுடைய knowledge-க்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறையாகச் சொல்லவில்லை. தவறுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொண்டுவாருங்கள். கேள்வியைச் சொல்லுங்கள்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்களுடன் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 191, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**191—**

## பேருந்து வசதி

**•53542—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார் பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் வரை செல்ல அரசு பேருந்து வசதி செய்து தருமா?



2005 மார்ச் 17]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்கு அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார்பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் வரை போதுமான அளவிற்கு பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் இருக்கின்றன. எனவே, மேற்கண்ட வழித்தடங்களில் புதியதாக பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிற நேரத்திலே, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார்பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் செல்வதற்கு பகுதி பகுதியாக பேருந்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, பகுதி பகுதியாக என்று சொல்கின்றபோது மக்கள் ஒரு பேருந்திலே வந்து ஏறி இறங்கி, இன்னொரு பேருந்துக்கு மாறிச் செல்வதற்குக் காலதாமதம் ஆகிறது. பேருந்து கிடைப்பதற்கு வசதியற்ற சூழ்நிலை. மாணவ மாணவிகள், கல்லூரி, பள்ளிகளுக்குச் செல்வதற்கு இடையூறு. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்தப் பேருந்து வழித்தடத்திலே, தொடர்ந்து, அதாவது அரியலூரிலிருந்து ஜெயங்கொண்டம் வரையிலே செல்வதற்கு, அரசு பேருந்தை இயக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி வழியாக ஜெயங்கொண்டம் வரை போதுமான அளவிற்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், வழித்தடங்களில், அந்தப் பகுதி பகுதியாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கு போதுமான அளவிற்கு பயணிகள் அடர்வு இல்லை. இருந்தபோதிலும், பகுதி பகுதியாக ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்து ஒன்றை தனியாக அங்கு நீட்டித்து—தொடர்ந்து அரியலூரிலிருந்து ஜெயங்கொண்டம் வரை நீட்டிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**192—**

**தரிசு நில மேம்பாடு**

***18915—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அவினாசி தொகுதியில் விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு சேர்க்கப்படவில்லை. (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அடுத்த நிதியாண்டில் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்—C.R.P.F. —மத்திய ரிசர்வ் காவல் படையில் பணியாற்றியவன். அகிலம் போற்றும் மாண்புமிகு அன்னை அவர்கள், உலகிலேயே சிறந்த காவல் துறையாக விளங்கிக்கொண்டிருக்கிற தமிழ்நாடு காவல் துறைக்கு மகத்தான முத்து முத்தான 36 திட்டங்களை அறிவித்து நவீனமயமாக்கியுள்ளார்கள். அதேபோல, நல்லவர்கள் மட்டுமா பிள்ளைகள்? நலிந்தவர்களும் பிள்ளைகள் என்று நேற்றையதினம் உடல் ஊனமுற்றோர்கள் மற்றும் பார்வையற்றவர்களுக்கு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு மற்றும் உதவித்தொகைகள் என்ற நல்ல பல திட்டங்களை அறிவித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியை பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்ற சூளுரையோடு அல்லும் பகலுமாக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்



2005 மார்ச் 17]

தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, சீரிய முறையில் செயல்வடிவம் தந்து கொண்டிருக்கிறார்கள். அவினாசி தொகுதி, மொத்தம் 52 ஊராட்சிகள் மற்றும் அவினாசி, அன்னூர், திருமுருகன்பூண்டி ஆகிய 3 சிறப்பு நிலை ஊராட்சிகளைக் கொண்டது. ஆக, அவினாசி தொகுதியில் வாழும் மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். இன்னும் சுமார் 10,185 ஹெக்டேர் நிலங்கள் தரிசு நிலங்களாக உள்ளன. எனவே, அவினாசியில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று, அடுத்த நிதியாண்டில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அவினாசி தொகுதியிலுள்ள இரண்டு ஒன்றியங்கள், விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004-2005 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதன் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்து தரிசு நிலங்களையும் விளை நிலங்களாக மாற்றி வருகின்ற வேளையில், அவினாசி தொகுதியில் சுமார் 41 ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியுள்ளனர். எனவே, நடப்பு நிதியாண்டுகளில் மீதமுள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியமைக்க உள்ளது பற்றி அறிவித்தமைக்கு எனது பணிவான நன்றியை புரட்சித் தலைவி அம்மாவின் பொற் பாதங்களிலும், அமைச்சர் அவர்களுக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையிலே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையிலே சும்மா கிடந்த நிலத்திற்கு, சும்மா கிடந்த தரிசிற்கு இது எங்கள் அம்மா கொடுத்த பரிசு என்று விவசாயிகள் இன்றைக்கு மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

[2005 மார்ச் 17

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் அவர்களுடைய பதிலை நிறைவு செய்கின்ற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான இந்தத் திட்டத்தின்கீழ், சும்மா கிடந்த தரிசிற்கு அம்மா கொடுத்த பரிசின்கீழ், எத்தனை இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் இன்றைக்கு விளை நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன? எத்தனை இலட்சம் விவசாயிகள் இதன் மூலம் இன்றைக்குப் பயன்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முத்தான திட்டங்களிலே விரிவான தரிசு நிலத் திட்டம் என்பது ஒரு மாபெரும் திட்டம். அந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களாலே 2001 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு தொடர்ந்து வருண பகவான் கருணை காட்டாத காரணமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையின் பேரிலே, ஆணையின் பேரிலே, 2002-2003 ஆம் ஆண்டிலே 21,771 ஹெக்டேர் நிலமும், 2003-2004 ஆம் ஆண்டிலே 23,600 ஹெக்டேர் நிலமும், 2004-2005 ஆம் நிதி ஆண்டிலே 41,141 ஹெக்டேர் நிலமும், விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு, தரிசு நிலங்களாக இருந்த அந்த விளை நிலங்கள் மூலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற வேளாண் பெருமக்கள் சாகுபடி செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதையும், அந்த சாகுபடி மூலமாக அந்த நிலங்கள் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்திருக்கின்றது என்பதையும், அந்தப் பகுதியிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழையெளிய தாய்மார்களுக்கு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வாய்ப்பு அமைந்திருக்கின்றது என்பதையும், அதோடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதையும், நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.*

[*குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]



2005 மார்ச் 17]

## 2. விதி 110—ன்கீழ் அறிக்கை

### சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பல்வேறு சலுகைகளை நான் அறிவித்தேன். அப்போது ஓய்வூதியமில்லா பணிகளைச் சேர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆயாக்கள், சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு அறிவிப்புகள் தனியே வெளியிடப்படும் என்று நான் அறிவித்திருந்தேன். அதன் அடிப்படையில், 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன:*

*(1) தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு மாதம் ஒன்றுக்கு 450 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை-I மற்றும் மதிய உணவுத் திட்ட சமையல்காரர்கள் ஆகியோரின் அடிப்படைத் தொகுப்பு மதிப்பூதியம் மேலும் 330 ரூபாய் உயர்த்தப்படும். இதன் மூலம், இப்பணியாளர்களின் அகவிலைப் படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 1,100 ரூபாய் என்ற அளவிற்கு உயரும்.*

*(2) தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு, மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை-II மற்றும் சத்துணவுக்கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு கூடுதல் மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு 290 ரூபாய் வழங்கப்படும். இதனால், இவர்களின் அகவிலைப் படியுடன் கூடிய மொத்த ஊதியம், சராசரியாக மாதம் ஒன்றுக்கு 850*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 17

ரூபாய் என்ற அளவிற்கு உயரும். ஆண்டு ஒன்றுக்கு 47.97 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்த மாற்றங்கள் 1-4-2005 முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

(3) மேலும், வரையறுக்கப்படாத ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஓய்வு பெறும்பொழுது அரசு 50,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும், தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அரசு 20,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்த புதிய ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டம், 1-4-2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

முற்பகல் 11-05

(4) 1-4-2005 முதல் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்திற்கான அரசின் பங்களிப்பு அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போன்று 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது.

அனைத்து சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் ஆகியோர் இந்த அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். தங்களது எதிர்பார்ப்பையும்விட, மிகத் தாராளமாக சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமைக்கும், தங்களது நீண்டகாலக் கோரிக்கையான ஒட்டுமொத்தத் தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கும் தங்களது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

தற்பொழுது தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் அமைப்புகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களும், அடித்தட்டுப் பணியாளர்களே; எனவே, அவர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும என்று கோரிக்கைகள் வைத்துள்ளன. ரூபாய் 600-10-700-20-1100 என்ற ஊதிய விகிதத்தில் இப்பணியாளர்களில் பெரும்பாலோர் தற்பொழுது



2005 மார்ச் 17] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அடிப்படைச் சம்பளமாக 940 ரூபாயும், அதற்குரிய அகவிலைப் படியாக 573 ரூபாயும், ஆக மொத்தம் 1,513 ரூபாய் ஊதியமாகப் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தற்போது சத்துணவு அமைப்பாளர்கள் 40,209 பேரும், அங்கன்வாடிப் பணியாளர்கள் 44,264 பேரும், ஆக மொத்தம் 84,473 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, ஒட்டுமொத்த மதிப்பூதியம் 1,063 ரூபாயாக இருக்க வேண்டும் என்று மைய அரசு நிர்ணயித்துள்ளது. இதர மாநிலங்களிலும் இதனையொட்டித்தான் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளாவில் 1,063 ரூபாயும், ஆந்திரப்பிரதேசத்தில் 1,200 ரூபாயும், கர்நாடகாவில் 1,450 ரூபாயும் மாத மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில்தான் தற்போது அதிகபட்சமாக, மாதம் ஒன்றுக்கு 1,513 ரூபாய் ஊதியமாக வழங்கப்படுகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்கு மிக அதிகமான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் தங்கள் பணியில் மேலும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க நான் தற்போது முடிவெடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்கு தனி ஊதியமாக— Personal Pay -ஆக 200 ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) தவிர, இந்தத் தனி ஊதியத்திற்கும் தற்போது வழங்கப்படும் அளவான 61 சதவீதம் அகவிலைப் படி வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வகையில், சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு மொத்தம் 322 ரூபாய் ஊதிய உயர்வு பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 17

இதன்படி, இந்தத் தனி ஊதிய வகையிலான உயர்வைச் சேர்த்து இவர்கள் பெறும் மாத ஊதியம் 1,513 ரூபாயிலிருந்து 1,835 ரூபாயாக உயரும். (மேசையைத் தட்டும் ஒலி) 84,473 சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் இதனால் பயன்பெறுவர். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 32.64 கோடி ரூபாய் செலவு ஆகும். இந்தத் தனி ஊதியம் 1-4-2005 முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பணிபுரிவோர் மேலும் சிறப்புடன் பணிபுரிய இந்தச் சலுகைகள், ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுவதாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. தகவல் கோரல்

### (அ) மக்களவைத் தலைவர் கூட்டியுள்ள கூட்டத்தில் பேரவைத் தலைவர் கலந்துகொள்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

முற்பகல் 11-10

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றங்களுக்கும், நீதித் துறைக்கும் மோதல் வலுத்து வருகிறது. மக்களவைத் தலைவர் அவர்கள், பேரவைத் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள், விரிவாக விவாதிப்பதற்காக. அதிலே இந்த அரசின் நிலை என்ன? நம்முடைய பேரவைத் தலைவர் கலந்துகொள்ளவிருப்பதாக பத்திரிகைகளிலே செய்தி படித்தேன். அந்தச் செய்தி சரிதானா? (குறுக்கீடு) சரிதானா என்று கேட்டேன். I am not committing. பத்திரிகைகளில் செய்தி படித்தேன் என்றேன். பத்திரிகையில் படித்தேன். கலந்துகொள்ளவிருக்கிறாரா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அரசின் நிலை என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 17]

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிற நேரம். இந்தச் சூழ்நிலையிலே தமிழக அரசு கொள்கை முடிவாக இதுவரையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இந்தியன் ஆயில் நிறுவனத்திலேயிருந்து பெற்று வந்த டீசலுக்குப் பதிலாக..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுக்க வேண்டுமோ எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அதுதான் பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுக்க வேண்டுமோ எடுத்துக்கொள்கிறேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நேற்று நானும் கொடுத்திருக்கிறேன். நம்முடைய திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். காவிரி நடுவர் மன்றத்திலே தமிழக அரசு தண்ணீர் கோருவதிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; கவன ஈர்ப்பாகத் தந்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது.

## 4. கவன ஈர்ப்பு

### கோயம்புத்தூர், காந்திபுரம் மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் விட்டுவசதி வாரிய விடுகளைச் செப்பனிடுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் நகரில் காந்திபுரம் வி.கே.கே. மேனன் சாலை மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி

[திரு. வி.கே. லட்சுமணன்] [2005 மார்ச் 17

வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

கோயம்புத்தூர் 26-வது டிவிஷன் காந்திபுரம் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பில் மொத்தம் 84 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகள் 1968 ஆம் ஆண்டு கட்டப்பட்டவையாகும். அத்தியாவசிய பராமரிப்புப் பணிகளான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் பணிகள் கோவை வீட்டுவசதிப் பிரிவின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மேற்படி குடியிருப்புகள் கட்டப்பட்டு 35 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டபடியால் இக்குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. காந்திபுரம் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு சிறப்பு பழுதுபார்க்கும் பணிகளுக்காக கோவை வீட்டுவசதிப் பிரிவு செயற் பொறியாளரால் ரூ.23.67 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கோவை 29-வது டிவிஷன் வி.கே.கே. மேனன் சாலையில் சித்தாபுதூர் பகுதியில் உள்ள 214 குடியிருப்புகள் 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு கட்டப்பட்டவையாகும். கோவை 35-வது டிவிஷன் காமராஜபுரம் அருந்ததியர் காலனியில் 66 குடியிருப்புகள் உள்ளன. இந்த இரண்டு டிவிஷன்களிலும் உள்ள குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு முறையே ரூ.75.00 இலட்சம் மற்றும் ரூ.30 இலட்சம் வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது. காமராஜபுரம் காலனியில் உள்ள 66 வீடுகளுக்கு அவசர சிறப்பு பழுதுபார்க்கும் பணிகளுக்கு கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 3,99,350 கேட்கப்பட்டுள்ளது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சிறிய திருத்தம். கோயம்புத்தூர் 26-வது டிவிஷன் காந்திபுரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 26-வது டிவிஷனில் காந்திபுரம் இல்லை. 26-வது டிவிஷன் D.F.O. Compound என்று அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். அங்கே அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பில் மொத்தம் 84 குடியிருப்புகள் உள்ளன. இதிலே வாழ்கின்ற மக்களுடைய வீடுகளும் பழுதடைந்து அபாயகரமான நிலையில் இருக்கின்றன. அந்த வீடுகள் கட்டி 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. நான் அண்மையில் சென்னையில் இருக்கிற மிகப் பழமையான கட்டடங்களை எல்லாம் போய்ப் பார்த்தேன். I.G. அலுவலகம், Admiralty Building, Memorial Hall, இதுபோன்ற கட்டடங்களைப் பார்த்தேன். அதில் Ripon Building கட்டி இன்றைக்கு 90 ஆண்டுகள் ஆகின்றன. Memorial Hall கட்டி 150 ஆண்டுகள் ஆகின்றன. Rajaji Hall கட்டி...



2005 மார்ச் 17] [திரு. வி.கே. லட்சுமணன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், ஏதாவது ஒரு கேள்விதான் கேட்கலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆக, இந்த பழைய கட்டடங்கள் எல்லாம் இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கின்றபோது, வெறும் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளே ஆன கட்டடங்கள் எல்லாம் ஏன் இடிகின்றன? அந்த அளவுக்கு நம்முடைய பொறியாளர்கள் தரம் குறைந்துள்ளார்களா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேசமயத்தில் இந்த அரசினர் குடியிருப்புகளில், அந்த 2-வது மாடியில் இருக்கின்றவர்கள் அதைக் காலி செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால் அது இடிந்து விழுவதால் ஏற்படுகின்ற ஆபத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் கட்டுகிற வீடுகளுக்கு அவர்களே ஏதோ இன்சூரன்ஸ் செய்ய வேண்டுமென்று சொல்வதுபோல் இருக்கிறது. நாங்கள் வாரியத்தை அணுகிக் கேட்டால் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். இந்த வீடுகள் எப்போது செப்பனிட்டு வாழ்வதற்கு உரியதாக ஆக்கப்படுமென்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை 35-வது டிவிஷன் காமராஜபுரத்தில் 66 குடியிருப்புகள் 1972-ல் கட்டப்பட்டன. அதுபோன்று 29-வது டிவிஷன் வி.கே.கே. மேனன் சாலையில் 214 குடியிருப்புகள் 1972-ல் கட்டப்பட்டன. அதுபோல 26-வது டிவிஷன் D.F.O. Compound division-ல் 84 அரசினர் குடியிருப்புகள் 1964-ல் கட்டப்பட்டன. இந்தக் குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய பராமரிப்புப் பணிகளான குடிநீர் விநியோகம், கழிவுநீர்

அகற்றுதல், குடிநீர் மோட்டார் மற்றும் பொது இடங்களில் உள்ள விளக்குகள் ஆகியவற்றுக்குண்டான மின் கட்டணம் கட்டுதல், பம்பு இயக்குநர், பெருக்குவோர், காவலர் ஆகியோரை பணி அமர்த்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளில் கைப்பிடிச்சுவர் மற்றும் சன்னல்-கூரைகள் பழுதடைந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. அதன் அடிப்படையிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் பேரில் மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் மராமத்துப் பணிகள் தொடங்கப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-15

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 35-வது டிவிஷனும், 29-வது டிவிஷனும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுதியாக வாழ்கின்ற பகுதிகள். அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அந்தக் கட்டடங்களையாவது மிக விரைவாகச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 29,000 அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டப்பட்டு வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. அவற்றில் சுமார் 26,000 அரசு ஊழியர்கள் தற்சமயம் குடியிருந்து வருகின்றனர். இக்குடியிருப்புகள் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. இக்குடியிருப்புகள் பல இடங்களிலே பழுதடைந்துள்ளன என்பது அரசால் அறியப்பட்டு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி எல்லாக் குடியிருப்புகளுக்கும் சிறப்பு மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அப்பணிகளும் இப்போது மிக வேகமாக நடந்து வருகின்றன. அப்பணிகள் முழுமை அடைந்தவுடன் மராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு பகுதிகளுக்கும் உடனடியாக மராமத்துப் பணிகள் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





## 5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, "கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.9,17,71,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 133, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நுகர்பொருள் வழங்குவதற்கான குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பித்தவர்கள் அனைவரது மனுக்களையும் பரிசீலித்து நிலுவை இல்லாமல் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 525, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 816, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி. கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகள் டீசல் வாங்க ஏதுவாக கூட்டுறவு டீசல் பங்க் ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1325, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், கந்திலி ஊராட்சிக்குட்பட்ட சின்னூர் கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1497, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதியில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளிலும் உணவு தானிய கிடங்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1748, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கும் அதிகமான தொலைவில் இருக்கும் பொது விநியோகக் கடைகளில் பொருட்கள் வாங்க பொதுமக்கள் சிரமப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தனித்தனியே பிரித்து பகுதிநேர பொது விநியோகக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1831, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அதியமான்கோட்டை ஊராட்சி, ஏலகிரியான் கொட்டாய் மற்றும் முண்டாசு புறவடை, புறவடை கோரபுளியான் கொட்டாய், ஜீவா நகர் போன்ற பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏலகிரியான் கொட்டாயில் பகுதிநேர நியாயவிலைக் கடை ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2120, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக துவங்க வேண்டி கோரிக்கை அனுப்பப்பட்டுள்ள, தகுதியுள்ள ஊர்களில் விரைவாக பகுதிநேர நியாயவிலைக் கடைகள் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2170, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுபானம் விற்பனை செய்யும் பொறுப்பை கூட்டுறவுச் சங்கப் பணியிலிருந்து நீக்கிவிட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2442 திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 371, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, குந்தா ஊராட்சிக்குட்பட்ட இரியசீகை, காமராஜ் நகர், இந்திரா நகர், எஸ்டேட் பகுதி மக்கள் 3 கி.மீ. தூரம் வந்து நியாயவிலைக் கடையிலிருந்து ரேஷன் பொருட்கள் வாங்குவதால் அவர்களுக்கு பகுதிநேர நியாயவிலைக் கடையை காமராஜ் நகரில் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1162, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1594, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நசிந்து வருகின்ற கூட்டுறவு நிறுவனங்களை நசிவிலிருந்து பாதுகாப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 995, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலுள்ள கிராமங்களில் செயல்படும் பகுதிநேர அங்காடிகளை, புதிய ரேஷன் கார்டு

வழங்கியபின் கணக்கெடுப்பு செய்து முழுநேர அங்காடிகளாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 758, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1043, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும், 500 குடும்பங்களுக்கு தலா ஒரு நியாயவிலைக் கடை என்ற எண்ணிக்கையில் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2061, திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2418, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கிகளில் கூட்டுறவில் பட்டயப் படிப்பு மற்றும் பட்டப் படிப்பு படித்தவர்களை தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 432, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிதாக குடும்ப அட்டை வழங்க வேண்டி விண்ணப்பப் படிவம் வழங்க ஒரு மாத காலம் கால நீட்டிப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 617, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய குடும்ப அட்டைகள் வழங்க விண்ணப்பம் பெறுவதற்கான காலஅளவை நீட்டிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 742, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டை புதுப்பிக்க வேண்டியவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் தரவேண்டிய அவசியம் குறித்தும், குடும்ப அட்டை இல்லாதவர்கள் புதிதாக விண்ணப்பம் பெற வகை செய்து ஆணை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2380, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது தமிழகத்தில் குடும்ப அட்டை பெறுவதற்கு காலக்கெடு நிர்ணயித்ததைத் தவிர்த்து பொதுமக்கள் எப்போது குடும்ப அட்டை பெற தகுந்த ஆதாரத்துடன் விண்ணப்பித்தாலும் உடனடியாக குடும்ப அட்டை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1967, திரு. துரை. கி. சரவணன்.



**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் குடும்ப அட்டைகளுக்கு 'எச்' முத்திரை நீக்கப்பட்ட பிறகு, அந்த 'எச்' முத்திரை கொண்ட குடும்ப அட்டைகளுக்கும் சேர்த்து நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1918, திரு. கே.வி. முரளிதரன்.

**•திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியத்தில் 1. குந்துமாரனப்பள்ளியிலிருந்து போத்தசத்திரம், 2. குந்துமாரனப்பள்ளியிலிருந்து மஞ்ஜனகிரி, 3. இருதாளத்தியிலிருந்து அனுசோனை, 4. மேலூரிலிருந்து தொளுவுபெட்டா, 5. தொட்ட பேளூரிலிருந்து கோபசந்திரம் ஆகிய இடங்களில் கூட்டுறவு பகுதிநேர நியாயவிலைக் கடைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2075, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், மேலப்பாளையம் மண்டலம் குறுந்துடையார்புரம் மற்றும் சிவந்திபட்டி ஊராட்சி, பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் துவக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2485, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் உள்ள சக்கரமல்லூர், நார்த்திவாடா, கொண்டாபுரம், தாசிரெட்டி கண்டிகை, விடையூர், அடிகல்பட்டு, செஞ்சி மதுரா, கண்டிகை ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 454, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1950, திரு. கு. பிச்சாண்டி.

முற்பகல் 11-20

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூ, பழம் போன்ற அழுகும் பொருட்களைப் பாதுகாக்க கூட்டுறவுத் துறையின் மூலம் குளிர்சாதன அமைப்புடன் கூடிய கிடங்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 61, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை அர்பன் கூட்டுறவு வங்கியை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1128, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதியில், கூட்டுறவுத் துறை மூலம் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள், மண்ணெண்ணெய் வழங்குவதில் தட்டுப்பாடு இல்லாமல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1109, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம் மலைப்பிரதேசமாக இருப்பதால், குடும்ப அட்டைதாரர்களுக்குக் கூடுதல் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 971, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் மண்ணெண்ணெய் குறைவாக விநியோகம் செய்யப்படுகிறது என்னும் புகார் நிவர்த்தி செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 73, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1632, திரு. மே.ப. காமராஜ்.



**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் அனைத்து நாட்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1468, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி ஒன்றியம், கோப்பைநாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2018, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியில் சிறப்பு ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் இயங்கும் பொது விநியோகக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 251, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 213, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு நிறுவனங்களை நம்பி வைப்புத்தொகை செலுத்தியவர்களுக்கு உடனடியாக முழுத் தொகையையும் வட்டியுடன் வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,314,27,82,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,72,65,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,17,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே



கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம், டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளை வைப்பதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை ஆகிய இரண்டு துறைகளும் விவசாயப் பெருமக்களோடும், சாதாரண சாமான்ய மக்களோடும் நேரடியாகத் தொடர்புடைய துறைகளாம். இந்தத் துறைகள் அடித்தளத்து மக்களை நேரடியாகச் சென்றடையக்கூடிய அரசுப் பணிகளை நிறைவேற்றுகிற துறைகளாம். ஆகவே, இந்தத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகிற தொகை, திருத்தப்படுகிற மதிப்பீட்டிலும் அதிகமாகச் செலவு செய்யப்பட்டிருக்குமேயானால், அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுமையாகச் செலவு செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாக இருக்கமுடியும். 2004-2005-ல் சத்துணவு மற்றும் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியில், Budget allocation - நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகை 206 கோடியே 94 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய். ஆனால், அது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 171 கோடியே, 95 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ஆக, உணவுத் துறையைப் பொறுத்தவரையில், சத்துணவுக்கு வந்த மாணவர்கள் குறைந்துவிட்டார்களா அல்லது அதனுடைய, பொருட்களுடைய விலை குறைந்துவிட்டதா என்பது தெரியவில்லை. பொதுவாக உணவுத் துறையைப் பொறுத்தவரையில், Budget Estimate-நிதிநிலை அறிக்கையிலே இருப்பதைவிட, திருத்தப்பட்ட மதிப்பீட்டில் அதிகம் இருக்குமானால், அது ஏழை மக்களுக்கும், விவசாயிகளுக்கும் சென்றடைந்ததாகக் கருதமுடியும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஒதுக்கப்பட்ட

@ 359 முதல் 447 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

தொகைகூட செலவு செய்யப்படாத ஒரு சூழ்நிலையை இங்கே காணமுடிகிறது. மேலும், இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் கூட்டுறவு...

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார். கூட்டுறவுத் துறை, உணவுத் துறையைப் பொறுத்தவரைக்கும், ரூ.1,392.64 என்று கணக்கிலே இருந்தபோது, ரூ.1,267.53 கோடி என்று 2004-2005 Revised Estimate-ல் உயர்த்தப்பட்டு, சேர்க்கப்பட்டு ரூ.1,378.18 கோடி என்று தற்போது Budget Estimate-லே கூறப்பட்டிருக்கிறது. இதிலே முக்கியமான ஒன்று, அந்த 2003-2004 கணக்கிலே ரூ.1,392.64 என்பது R.E.-ல் குறைத்து குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறாரா? அதற்குக் காரணம், விவசாயிகளுக்கு ஒன்றுமே சேரவில்லையே என்று சொல்கிறார் எனில் அது தவறான தகவல். விவசாயிகளுக்கு மட்டுமல்ல, இந்தத் துறைக்கு ஒன்றும் சேரவில்லை, பலனாளிகளுக்கு ஒன்றும் சேரவில்லை என்னும் பொருள்பட சொல்கிறார் என்றால், One time release of Rupees 200 crores to Civil Supplies Corporation as ways and means advance-ஆகத் தரப்பட்ட காரணத்தால், அந்தத் தொகை 2003-2004-ல் சேர்க்கப்பட்டுள்ளது.

அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004-ல் கூட்டுறவு என்பதில் ரூ.21,863 இலட்சம் என்று இருந்தது திருத்திய மதிப்பீட்டில் ரூ.115.94 கோடி என்றாகி, அதேபோல, 2005-2006 வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ.116.90 கோடியாக இருக்கிறது. இதில், விவசாயிகளுக்கு பலன் செல்லவில்லை என்று சொன்னால் அதுவும் தவறு. One time relief to farmers - விவசாயிகளுக்கு வட்டி, கூடுதல் வட்டி ஆகியவற்றிற்கு one time relief கொடுக்கப்பட்ட காரணத்தால் that has accumulated - that commitment is being cleared by Government என்ற காரணத்தால் அந்தத் தொகை அதிலே கழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நிதி அமைச்சர் நான் என்ன சொன்னேன் என்பதையாவது கேட்டுவிட்டுச் சொல்ல வேண்டும். நான் சொன்னது சத்துணவு, இதோ பாருங்கள், நீங்கள் கொடுத்த புத்தகம்தான். 2005-2006 நிதிநிலை அறிக்கையிலே கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-



பக்கம் 54. சத்துணவுக்காக—நான் அதற்குத்தான் கேட்டேன்—சத்துணவு உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதா, கொடுத்த பொருள்களின் விலை குறைந்துவிட்டதா என்று கேட்டேன். அதிலே சொல்லியிருக்கிறது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வந்து, Capital Expenditure என்ற தலைப்பிலே Capital Outlay on social security and welfare என்பது பற்றிக் குறிப்பிடுகிறார் என்றால், அது 2003-2004 ஆம் ஆண்டு கணக்கிற்கு ரூ.70.83 இலட்சம், அது 2004-2006-லே ரூ.163.57 இலட்சம். அதே போல், Revised Estimate-லே ரூ.195.69 இலட்சம். தற்போது ரூ.134.10 இலட்சம் என்று அந்தப் பகுதியில் அது தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** என்ன எதுவோ பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்கு எங்கே என்று கேட்கிறமாதிரி இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்கிறேன். இந்தப் பக்கத்திலே, நீங்கள் கொடுத்த அந்தப் புத்தகத்தை வைத்துச் சொல்லுங்கள் சார் எனக்கு பதிலை. நான் கேட்கிறது, சத்துணவிலே குறைந்திருக்கிறது என்று சொல்கிறேன், அது குறைந்திருக்கிறதா, இல்லையா என்று சொல்லுங்கள். அதில் தவறு ஒன்றும் இல்லை. குறைந்திருந்தால் குறைந்திருக்கிறது என்று சொல்லுங்கள். அதைச் சொல்லிவிட்டால் சரியாகப் போய்விடும். அதற்கு ஏன் இல்லாததையெல்லாம் சொல்கிறீர்கள். அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எந்தப் பக்கத்திலே என்ற விவரத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அண்ணா சொன்ன உவமை ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். பட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் கொட்டைப் பாக்கு விலை குறைந்திருக்கிறது என்று சொல்வார்கள் என்று சொன்னதற்கு அண்ணா பதில் சொன்னார். ஒருவேளை பட்டுக்கோட்டையிலே கொட்டைப்பாக்கு விலை குறைவாக இருக்கலாம், அதனால் சொல்லியிருப்பார்கள் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை கொட்டைப் பாக்கு என்று அவர் தடுமாறுவதற்குக் காரணம், இன்று கூட்டுறவுத் துறையின் மானியம். சத்துணவுத்

துறையினுடைய மானியம் வருகின்றபோது அதை நீங்கள் எழுப்பலாம். ஏன் இன்று இதில் குழப்புகிறீர்கள் - குழம்பி இருக்கிறீர்கள் என்றுதான் புரியவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** புத்தகத்தையே நீங்கள் இப்போது கொடுத்து இருக்கக்கூடாது. பட்ஜெட்டிலே கொடுத்திருப்பது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, Civil Supplies Account-லேதான் வருகிறது. அதனால்தான் சொன்னேன். நீங்கள் சும்மாவே இருந்திருக்கலாம். இல்லையென்றால் உணவுத் துறை அமைச்சர் சொல்லியிருக்கலாம். வேறு யாராவது சொல்லியிருக்கலாம், தயவுசெய்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக இந்த கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே அரசு ஆணை எண் 319, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புப் பதிவாளர் சுற்றறிக்கை நகல் எண் 104592/2004 ACS 24-9-2004, அந்த date-லே ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-30

2,500 கோடி ரூபாய் 1-4-2005, 1-4-2006 ஆகிய இரண்டு ஆண்டுகள் வசூல் செய்யக் கூடாது. அதாவது குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றியமைத்து 2,500 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லி 1-4-2005, 1-4-2006 ஆகிய இந்த இரண்டு வருஷமும், ஐந்தாவது வருஷம், ஆறாவது வருஷம், இரண்டு வருஷத்திற்கும் வசூல் செய்ய மாட்டோம். ஏழாவது வருஷம், எட்டாவது வருஷம், ஒன்பதாவது வருஷம், இந்த மூன்று ஆண்டுகளிலேயும் ஐந்தாண்டு கடன் தொகையை இந்த இரண்டாண்டு கடன் தொகையும் சேர்த்து மீதி இருக்கிற மூன்றாண்டுகளில் நாங்கள் வசூல் செய்வோம் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த இரண்டு ஆண்டுகளுக்கு கடன் வசூல் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறீர்களே, அதற்கான வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்படுமா அல்லது அதுவும் சேர்த்து அதற்குப் பிறகு வருகிற மூன்று ஆண்டுகளில் வசூல் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று. இதிலே reschedule loan இந்த இரண்டு ஆண்டுகளுக்கு வட்டியைத் தள்ளி வைப்பது மட்டுமல்லாமல், அதற்குக் கொடுக்க வேண்டிய reschedule loan - அதன் முக்கிய நோக்கமே மத்திய அரசாங்கம்



இதற்கு 2,500 கோடி ரூபாய் கொடுத்திருப்பதற்கான முக்கிய நோக்கமே இந்த கடன் வாங்குகிற விவசாயிகளுக்கு, நீங்கள் முதலிலேயே கடன் வாங்கியிருக்கிறீர்கள், உங்களுக்கு புதிய கடன் கிடையாது என்று சொல்லி, அவர்களுக்கு கடன் கொடுக்காமல் இருப்பதை தவிர்ப்பதற்காகத்தான் இந்த reschedule loan மீண்டும் அவர்களுக்கு இந்தக் கடனைக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த G.O. அனுப்பப்பட்டதே தவிர, G.O. வந்தும், இந்தக் கடன் கொடுக்கப்படாத காரணத்தினால் தஞ்சை, நாகப்பட்டினம், கும்பகோணம் போன்ற பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியினுடைய வழிகாட்டுதல் காரணமாக தொடர்ந்து மூன்றாண்டு காலம் கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கையை மறுசீரமைக்க வேண்டுமென்பதற்காக இந்தியா முழுவதும் இருக்கிற கூட்டுறவு வங்கிகள் தங்களுடைய கடனை சீரமைத்துக்கொள்ள வேண்டுமென்கின்ற சில வழிகாட்டுதலைக் கொடுத்திருந்தார்கள். அதன்படியாக இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக 2001 ஆம் ஆண்டு, 2002 ஆம் ஆண்டு, 2003 ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு காலங்களிலே வழங்கப்பட்ட பயிர்க் கடன்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, மேட்டூர் அணை காய்ந்துபோய், காவிரி வறண்டு போன சூழ்நிலையிலும் தமிழகம் முழுவதும் நிலவிய வறட்சியின் காரணமாகவும் ஏற்பட்ட விவசாய சேதங்களை, பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒரு மறுசீரமைப்பு பெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆணையின்படி இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்திலேதான், நான்கு ஆண்டுகாலமாக வழங்கப்பட்ட குறுகிய கால பயிர் கடன்களான 2,598 கோடி ரூபாயை ஒன்றாகச் சேர்த்து இரண்டு ஆண்டு காலத்திற்கு வசூல் செய்வதில்லை என்றும், அதற்குப் பிறகு மூன்றாம் ஆண்டுக்கால இறுதியிலும், அதற்குப் பிறகு தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் சம தவணைகளில் வசூல் செய்துகொள்வது என்றும், இதுவரை 14 சதவீதம், 12 சதவீதம், 13 சதவீதம் என்று வழங்கப்பட்டிருந்த பயிர்க் கடன்களை எல்லாம் மறுசீரமைக்கப்பட்ட reschedulement செய்யப்பட்ட லோன்களுக்கு 9 சதவீதமாக வட்டியைக் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலே

இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய மறுசீரமைக்கும் திட்டம் reschedulement scheme-ஆனது செயல்படுத்தப்படவில்லை. மற்ற மாநிலங்கள் எல்லாம் இவ்வாறு reschedulement செய்ய வேண்டுமென்று சொன்னால் நிலுவையில் இருக்கிற குறுகிய கால பயிர்க் கடன்கள் முழுவதையும் நபார்டு வங்கியானது மாநிலத்தினுடைய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கினால்தான் reschedulement செய்ய முடியும் என்று அறிவித்திருக்கிற நிலைமையிலே, தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நபார்டு வங்கியினுடைய கையை எதிர்நோக்காமல் தொடர்ந்து மூன்றாண்டு காலம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய வேதனையை, கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்பதற்காக இவ்வாறு reschedulement செய்கிற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை சுமார் 1,400 கோடி ரூபாய் அளவுக்கு reschedulement ஆனது நடைபெற்றுள்ளது.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இதுவரை 150 கோடி ரூபாய் அளவுக்குக் கடன்களை, விவசாயிகள் பெற்றக் கடனை இரண்டாண்டு காலம் வசூல் செய்வதில்லை என்றும், தொடர்ந்து மூன்றாண்டு காலம் வசூல் செய்துகொள்ளும் காலம் என்றும் reschedulement செய்யப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பான விவரம் என்னவென்று சொன்னால், இவ்வாறு reschedulement செய்துகொள்ள வேண்டுமென்று நபார்டு வங்கி கேட்டதனுடைய நோக்கம், கூட்டுறவு வங்கிகளிடத்திலே overdue இருந்தால் விவசாயிகள் பயிர்க் கடனை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே பெற முடியாது இருக்கிற சூழ்நிலையின் காரணமாகத்தான் reschedulement செய்து விவசாயிகள் எங்கு வேண்டுமென்றாலும் சென்று கடன் பெற்றுக்கொள்ளலாம் என்கிற N.O.C-யை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குமானால்—தேசியமயமாக்கப்பட்ட—அதாவது No Objection Certificate, எங்களிடம் கூட்டுறவு வங்கிகள் தங்களுக்கு வர வேண்டிய கடன்களை reschedulement செய்து overdue இல்லை என்பதற்கான N.O.C-யை வழங்குமானால்—தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், அனைத்து விவசாயிகளுக்கும் போதுமான அளவுக்கு கடன் வழங்கும் என்று நபார்டு வங்கியும், மத்திய நிதி அமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டு விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் 2,598 கோடி ரூபாய் கடனை ஐந்தாண்டு காலத்திற்கு reschedulement செய்ததற்குப் பிறகு, ஒப்புக்கொண்டபடி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கவில்லை என்பதுதான் இங்கே வருத்தப்பட வேண்டிய விஷயம்.



முற்பகல் 11-35

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள், தங்களுடைய அரசு மத்தியிலே வலுவாக அங்கம் வகிப்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர் நிதி அமைச்சராக இருக்கிறார்கள். வறட்சியால் வாடிக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இப்போது செய்யாமல், இனி எப்பொழுது செய்யப்போகிறீர்கள்? தமிழகத்தைச் சேர்ந்தவரே நிதி அமைச்சராக இருக்கிறார். தமிழகத்தைச் சேர்ந்தவரே இணை அமைச்சராக இருக்கிறார். கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையிலே, 1,037 கோடி ரூபாய் பயிர்க்கடன் கொடுப்பதாக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளோடு மாநில வங்கியாளர்கள் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலே, இதுவரை 1,000 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்திலே கடந்த பத்தாண்டுகளிலே இல்லாத வகையிலே, இந்த ஆண்டு ஒன்றுபட்ட தஞ்சை, கும்பகோணம் ஆகிய இரண்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் சேர்ந்து, 68 கோடி ரூபாய் பயிர்க் கடனாக இந்த ஆண்டு வழங்கியுள்ளோம். ஆனால், அந்த 68 கோடி ரூபாய் பயிர்க் கடனும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையால், அம்மா அவர்கள் பல்வேறு வகையில் அந்த இரண்டு வங்கிகளுக்கும் ஒதுக்கிக் கொடுத்த நிதியாதாரங்களைக் கொண்டும், மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட critical finance மூலமாகவும், தஞ்சாவூர், கும்பகோணம் வங்கிகள் கடனை வழங்கியுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, உண்மையிலேயே தமிழக விவசாயிகள்மீது அக்கறை இருக்குமானால் —தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் மக்களுக்குச் சொந்தமானதுதான். மக்களுடைய வங்கிகள்தான். அவையும் விவசாயிகளுடைய துயரத்தை, கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டும்.—தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேர் அங்கே வலுவோடு இருப்பவர்கள். அவர்கள் தமிழக விவசாயிகளுடைய துயரைத் துடைக்க போதுமான அளவிற்குக் கடன் தொகைகளைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையிலே அமைச்சராக இருந்திருக்கிறேன். பேசுகிறபோது கேட்டால், இரண்டு வரியிலே பதில் சொன்னால் பரவாயில்லை. மானியத்திற்கான பதிலையே கேள்விக்குப் பதில் சொன்னால் நாங்கள் என்ன பண்ண முடியும்? பேசுவதா, வேண்டாமா? தயவு செய்து நேரத்தையும் நீங்கள் கொஞ்சம்

பார்த்துக்கொள்ளுங்கள். இன்னும்கூடப் பேசச் சொல்லுங்கள். நான் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். எனக்கு ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால், சொல்லும்போது, sharp-ஆகப் பதில் சொன்னால், கொஞ்சம் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கிற கேள்வியைப் பொறுத்துத்தான், சொல்கிற பதிலும் இருக்கிறது. விவகாரமான கேள்வியைக் கேட்டு, குற்றச்சாட்டை ஆளுகிற சர்க்கார்மீது சுமத்திவிட்டு, நோகாமல் இருந்துகொள்வதற்கு வழிவிடக்கூடாது என்பதற்காகத்தான், விளக்கமான பதிலை எல்லா உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் அடுத்த விஷயத்திற்குச் செல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியே, இரண்டு வருடங்களுக்குத் தள்ளி வாங்குகிறீர்களே, அந்த இரண்டு வருடத்திற்கு எவ்வளவு வட்டி, வட்டியைத் தள்ளுபடி செய்கிறீர்களா என்பதுதான் கேள்வி. இதற்குப் பதில் சொல்லவேயில்லை, இவ்வளவு நேரம் பதில் சொல்லியும்.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். இரண்டு ஆண்டு காலத்திற்கும், இதுவரை 14 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று கொடுக்கப்பட்டிருந்த வட்டியையெல்லாம் குறைத்து, 9 சதவிகிதம் என்று நாங்கள் வாங்குகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். நான் கேட்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கம் வகிக்கிற மத்திய அரசு, தமிழக விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் பேசும்போது குறிப்பிடுங்கள். நீங்களும் அமைச்சராக இருந்தவர். என்னுடைய கோரிக்கை, மத்தியிலே எதையும் சாதிக்கிற அளவிற்கு வலுவாக இருக்கிற நீங்கள், 40 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கிற நீங்கள், தமிழகத்தினுடைய விவசாயிகள், 50 ஆண்டுகாலமாக இல்லாத வகையிலே, மூன்றாண்டு காலம், நான்காண்டு காலமாக கடுமையான வறட்சியினாலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மத்தியிலே இருக்கிற உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகப் பெற்றுக்கொடுத்த கடன் தொகை எவ்வளவு என்பதை நீங்கள் குறிப்பிடுங்கள்.*



**டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 percent, interest loan-க்கு இப்போது வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். 9 percent என்பது தவறான செய்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இருந்தால்,...*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அறிவித்திருக்கிறோம். நாள்தோறும் பத்திரிகையிலே சொல்கிறோம். மேடையிலே சொல்கிறோம். நடைமுறையிலே சொல்கிறோம். வங்கிகளிலே பெயர்ப் பலகைகளிலே அறிவித்திருக்கிறோம். 9 சதவிகிதம் என்பதுதான் தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளினுடைய இன்றைய வட்டி விகிதம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. கலைஞருடைய ஆட்சியில் 1-8-2000 முதல் 30-6-2001 வரை வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தினால், 7 சதவிகித வட்டி, சலுகைத் தொகை கொடுக்க வேண்டும். வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு, அரசால் வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை அந்தத் தொகை வழங்கப்படவில்லையே, ஏன்? இதற்குச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இன்னொரு தடவை சொல்லச் சொல்கிறீர்களா? அதுதான், 7 சதவிகிதம் கலைஞருடைய ஆட்சியிலே தள்ளுபடி செய்யப்பட்டது. அது, இப்போது நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் அந்தத் தொகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அதனால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளெல்லாம் செயல்படமுடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாத ஒன்றைப் புதிதாக யூகப்படுத்திச் சொல்கிறார். அப்பொழுது கடனைக் கட்டினால், அப்பொழுதே கடனைக் கட்டுகிற விவசாயிகளுக்கு, வட்டியிலே தள்ளுபடி செய்வதாக ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. அப்பொழுது கடனைக் கட்டியவர்களுக்கு, அப்பொழுதே கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக அந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டுவிட்டன. நீண்டகாலத்திற்கு, இப்பொழுது வரை கொடுப்பதாக எந்தவிதமான அறிவிப்பையும், அப்போது அவர்களுடைய முதலமைச்சராக இருந்தவர் செய்துவிட்டுப் போகவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

[2005 மார்ச் 17

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.O.-வே இருக்கிறது. அப்பொழுது போடப்பட்ட உத்தரவு. அந்த உத்தரவின்படி-G.O. copy -யைக்கூடக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** G.O. applicable for that period only and not now.

**டாக்டர் க. பொன்முடி:** அப்பொழுது இருந்த period-க்கு,...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அப்பொழுது முதலமைச்சராக இருந்தவர், அப்பொழுது அரசாட்சி செய்தவர், அப்பொழுதே அதற்கான தொகைகளை வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அத்தோடு, அது முடிந்துவிட்ட கதை. இப்பொழுதுவரை அது தொடரவில்லை.

முற்பகல் 11-40

**டாக்டர் க. பொன்முடி:** வழங்கிவிட்டார் என்று சொன்னால் மிகவும் நன்றி. ஆனால், வழங்காமல் இருந்து (குறுக்கீடுகள்) கொடுக்கவில்லை சார். நான்கு வருடங்களாகக் கொடுக்கவில்லை. நீங்கள் தயவுசெய்து கேளுங்கள். clarify பண்ணுங்கள். கொடுத்திருந்தால் நன்றி.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காக தொகை கொடுக்காமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் தங்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** நான்தான் சொன்னேனே, தேதியோட சொன்னேனே; G.O.-வே இருக்கிறது. ஓராண்டு காலத்திலே அவர் 7 சதவிகிதம் வட்டி குறைவு என்று சொன்ன காலகட்டத்திலே அதற்கான தொகையை கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகை இன்னும் வழங்கப்படவில்லையென்பதுதான் என்னுடைய கோரிக்கை. நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் right கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுக்கவில்லை என்பது அவர்களுடைய கோரிக்கை. இன்னும் வரவில்லை. அதனால்தான் அங்கிருக்கிற...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் G.O. எந்த ஆண்டு என்று தெரிவிக்க வேண்டும். 2000 ஆண்டு என்று நினைக்கிறேன். 2000 ஆண்டிலே ஆட்சியிலே நீங்கள்தான் இருந்தீர்கள்.



2005 மார்ச் 17] [திரு. சி. பொன்னையன்]

வெறுமனே G.O.-வைப் போட்டு ஏன் விவசாயிகளை ஏமாற்றினீர்கள்? G.O.-வைப் போட்டு பணத்தையும் நீங்களே கொடுத்துவிட்டுப் போய் இருக்க வேண்டுமல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த வருடம் வரப்போவதற்கு இந்த வருடமே பண்ண மாட்டார்கள். ஒரு scheme போடுவது என்று சொன்னால் நிதியை ஒதுக்குவார்கள்.**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோல எல்லை மீறிப் பேசுவது தவறு. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் கேட்கிறேன். G.O. copy இருந்தால் கொடுங்களேன். G.O. copy இருந்தால் கொடுங்கள். நான் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக அந்த G.O. நகலை எனக்கு பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து அதைக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெளியேறுவதற்காக, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை தவறான முறையில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** சார் நான் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. சார், நான் குற்றச்சாட்டையே சொல்லவில்லை. நடைமுறையிலுள்ள சிக்கல்களைச் சொன்னேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக நெல் கொள்முதல். நெல் கொள்முதலைப் பொறுத்தவரையிலே, கழக ஆட்சி இருந்த காலத்தில் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் நெல் கொள்முதலுக்காக 40 ரூபாய், 50 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து விவசாயிகளின்மீது மிகுந்த அக்கறை இருப்பதாகச் சொல்லிக்கொள்கிறவர்கள் இதுவரை எந்தவிதமான ஊக்கத்தொகையும் வழங்கவில்லை. அதுவும் மத்திய கொள்முதல் விலையைக்கூட கழக ஆட்சி இருக்கிறபோது 360 ரூபாயிலிருந்து 5 ஆண்டுகளில், 150 ரூபாய் ஏறி, 510 ரூபாயாக இருந்தது. இந்த நான்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வருடங்களில் 50 ரூபாய்தான் ஏறியிருக்கிறது, கொள்முதல் விலையில்கூட. ஆனால், ஊக்கத்தொகை 30 ரூபாய், 35 ரூபாய், 50 ரூபாய் என்றெல்லாம் கழக ஆட்சியிலே வழங்கப்பட்டது. இப்போது, கடந்த நான்கு ஆண்டுகாலத்தில்..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கொள்முதல் செய்து இந்தத் திட்டத்திற்கு அரிசி வழங்குவது மைய அரசுதான், மாநில அரசு இதை வழங்கவில்லை. அப்படி ஊக்கத்தொகை தரவேண்டுமென்றால், மைய அரசுதான் ஊக்கத் தொகையைத் தர வேண்டும். மாநில அரசுக்கு அந்தப் பொறுப்பில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசுதான் ஊக்கத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் எப்படித்தான் சொல்கிறார் என்று தெரியவில்லை. தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாநில அரசு is acting only as an agent for the Food Corporation of India. F.C.I. தான் கொள்முதல் செய்கிறது. ஏஜென்டாக மாநில அரசு செயல்படுகிறது. அவர்கள் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் உழவர்களுக்கு. ஊக்கத்தொகை கொடுக்க வேண்டுமென்றாலும் Food Corporation of India - கொள்முதல் செய்கின்ற அந்த அமைப்பேதான் தரவேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** F.C.I. கொள்முதல் செய்தாலும் Civil Supplies Corporation தான் ஏஜென்சியாக இருந்து வாங்கிக் கொடுக்கிறது. அதுதான் சொல்கிறேனே.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** நான் பேசுவதா, வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-10-2002 முதல் தமிழ்க அரசு, மத்திய அரசினுடைய, Food Corporation of India-வினுடைய கொள்முதல்



ஏஜென்ட்டாக Civil Supplies Corporation ஆனது விளங்கி வருகிறது. இந்தியா முழுவதும் இன்றைக்கு எந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்படுகிறதோ, அதே விலைக்குத்தான் தமிழகத்திலும் கொள்முதல் செய்யப்படுகிறது. இரண்டு முறை உணவுத் துறை அமைச்சர்களுடைய மாநாட்டில் தமிழகத்தினுடைய பிரதான உற்பத்திப் பொருளான நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கோதுமைக்கு விலையை உயர்த்திக் கொடுத்த அவர்கள், இதுவரை இன்னும் நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுக்காத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, இதுவும் மத்திய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூலமாக கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ல் இங்கே நடந்த மானியக் கோரிக்கையிலே அன்றைய உணவு அமைச்சர் படித்ததில் மட்டும் 2 வரியைப் படிக்கிறேன். விவசாயிகளுக்கு ஏதோ இவர்கள்தான் கஷ்டப்படுவதைப் போலவும், நாங்கள் எல்லாம் என்னவோ விவசாயிகளைப் புறக்கணிப்பதைப் போல நினைக்கின்றார்கள். கொள்முதலுக்கு இடைநிகழ்வாக தருகின்ற அந்தப் பணத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது 40 ரூபாய் இடை நிகழ்வாகக் கொடுத்து வருகிறோம். இந்த மாமன்றத்தில் அவர்தான் முதன்முதலாக, எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தான் முதன்முதலாக இந்த உதவி கொடுக்கிற திட்டத்தைத் துவக்கி இடை நிகழ்வாக 15 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது தமிழக அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல் கொள்முதல் செய்தது. இப்பொழுது மத்திய அரசினுடைய, Food Corporation of India, தமிழகத்தினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல் கொள்முதல் செய்கிறது. இப்பொழுது விலையைக் கூட்டிக் கொடுப்பதாக இருந்தாலும், அவர்கள்தான் செய்ய வேண்டும். கூடுதலான தொகையை விவசாயிகளுக்கு ஒதுக்கித் தருவதாக இருந்தாலும், அவர்கள்தான் செய்ய வேண்டும். அதற்கான கோரிக்கையை மத்திய அரசினுடைய உணவு அமைச்சரிடத்திலே,

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 17

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நேரிலும், கடிதம் மூலமாகவும் வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடம். உறுப்பினர் பொன்முடி அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தந்திருக்கின்றார்கள். அவர் கொடுத்தது அரசாணையே அல்ல. அது ஒரு சுற்றறிக்கை. அதுவும் திண்டுக்கல் மாவட்டத்திலே ஒரு மேலாண்மை இயக்குநர் கொடுத்த ஒரு சுற்றறிக்கையை வைத்து அரசுக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்திருக்கின்றார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சுற்றறிக்கை என்று சொன்னாலும்-சுற்றறிக்கை G.O. கிடையாதா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை, இல்லை. அதைச் சொல்லக்கூடாது. சுற்றறிக்கை போய் G.O.-வா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திலே சுற்றறிக்கை அனுப்பப்பட்டு (குறுக்கீடு) அதை வைத்துக்கொண்டு எப்படி அரசாணை என்று ஒரு உறுப்பினர் கூறினார்? எனவே, அவர் மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவர வேண்டும். நான் படித்துப் பார்த்தேன். G.O. reference-ஏ கிடையாது. அது தெளிவாக இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** G.O. means a Government Order. இது பதிவாளரினுடைய ஒரு பார்வைக்கு reference-ஆகக் குறிப்பிட்டிருப்பதுகூட பதிவாளரினுடைய கடிதம்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கடிதம்தான் இது. This is not a Government Order. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அதில் உள்ள செய்தியைப் படியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. The content inside is not a question. நீங்கள் G.O. என்று சொன்னீர்கள். இது கடிதம்தான். இது சுற்றறிக்கைதான். இது உண்மை என்று நீங்கள் கூறுவீர்களென்றால் இது அவை உரிமையை மீறிய செயலாகும். பேரவைத் தலைவர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.



2005 மார்ச் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** அது G.O. அடிப்படையிலே கொண்டு வரப்பட்டது. நான் G.O. என்று தவறாகச் சொல்லியிருந்தால் அதைத் திருத்திக்கொள்கிறேன். G.O. என்று தவறாகச் சொல்லியிருந்தால் திருத்திக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் பொன்முடி அவர்கள் நீண்டகாலம் அமைச்சராக இருந்தவர். ஒரு G.O.-வுக்கும் சுற்றறிக்கைக்கும் அவருக்கு வித்தியாசம் தெரியாது என்று சொன்னால் யாரும் நம்ப முடியாது. அவர் பேசுகின்றபோது பல முறை இது G.O. என்று குறிப்பிட்டுப் பேசினார். ஆக ஏதோ தவறாகச் சொல்லிவிட்டார் என்று எடுத்துக்கொள்ள முடியாது. திட்டமிட்டே இந்த அவைக்குத் தவறான தகவல் தந்திருக்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் இந்த அவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பதிவாளர் ஒரு மாவட்ட அளவில் அனுப்பப்பட்ட ஒரு circular-ஐச் சான்றாக வைத்துக்கொண்டு ஒரு உறுப்பினர் பேசுவாரேயானால், அரசாணையினுடைய அடிப்படை இல்லாமல் அவர்களால், அப்படி ஒரு கருத்தைத் தெரிவிக்க முடியுமா? ஒரு கருத்தோ, ஒரு விகிதாச்சாரமோ, ஒரு வட்டி விகிதமோ. இது அரசாணை அல்ல என்று சொல்வதிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், அரசாணை அடிப்படையே இல்லாமல் ஒரு பதிவாளர், தான் நினைத்தபடி அப்படி ஒரு ஆணை பிறப்பிக்க முடியுமா என்று அமைச்சர் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறுவதற்கும், பொன்முடி கூறிய அவை உரிமை மீறலுக்கும் தொடர்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் குறிப்பிடும்போது பல முறை G.O., G.O. என்று குறிப்பிட்ட காரணத்தினால்தான் அதைக்

காட்டுங்கள் என்று கேட்டேன். அந்த G.O. அடிப்படையிலே போடப்பட்ட சுற்றறிக்கை என்று அவர் சொல்லியிருந்தால், இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது. அப்படியானால் அந்த மூல G.O. ஏதாவது இருக்குமானால் அதை அவர்கள் காட்டினால் ஏற்றுக்கொள்கிறோம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான G.O.-வையும் நான் தங்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதற்கான G.O.-வையும் நான் கொடுக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொறுப்பேற்றுக்கொண்டார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்திருக்கின்றார்கள். ஒரு சுற்றறிக்கை அனுப்பப்படும்போது நிச்சயமாக பதிவாளர்கூட — மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல கிடையாது. பதிவாளர் என்றால்கூட — மாநில அளவிலே எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இது ஒரு மாவட்டத்திலே, திண்டுக்கல்லிலே இருக்கின்ற ஒரு வேளாண்மை வங்கியினுடைய ஒரு மேலாண்மை இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கை. அந்த சுற்றறிக்கையை வைத்துக்கொண்டு இவர் எப்படி அரசாணை, அரசாணை என்று சொல்லி ஏமாற்ற முடியும்?

முற்பகல் 11-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் கூறுகின்றபடி ஒரு G.O.-வின் அடிப்படையில் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்று சொன்னால், அந்தச் சுற்றறிக்கையில் அந்த G.O. reference இருக்க வேண்டும். இந்தச் சுற்றறிக்கையில் அந்த G.O. reference இல்லை. (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தெரிவிக்கிற அந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில் ஒரு கருத்துக்காக, விவசாயிகளுக்கு ஆதரவாக ஒரு கருத்தை இந்த அவையிலே எடுத்து வைப்பதற்காக, இதை எடுத்துச் சொன்னால், இந்தக் கருத்து எப்படி அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு மாறாக, அரசாங்கம் அறிவிக்கக்கூடிய கொள்கைக்கு மாறாக ஒரு அறிக்கையை, ஒரு மாவட்ட அளவிலே அனுப்ப முடியும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இந்த G.O.-வையும் நான் தங்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட அறிக்கையை, இப்போது உடனடியாகக் கிடைத்த காரணத்தால் நான் கொடுத்திருக்கிறேன். G.O.-வை உங்களிடம் கொடுக்கிறேன். அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே incentive பற்றி, ஊக்கத்தொகை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் குறிப்பிட்டது, வட்டி ஊக்கத்தொகை என்கின்ற திட்டம். இந்தத் திட்டம் குறித்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு சலுகையாக ஏற்கெனவே 34 கோடி ரூபாய் தமிழகம் முழுவதும் இருக்கிற மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மூலம் அந்தந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற தகவலை நான் தங்கள் மூலமாகத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் முதலிலேயே கேட்டேன். வழங்கப்பட்டிருந்தால் நன்றி என்று அப்போதே சொன்னேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்படவே இல்லை என்று ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னீர்கள். (குறுக்கீடு) அதற்காகத்தான் இவ்வளவு விவகாரமும் நடந்திருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** ஊக்கத்தொகையைப் பொறுத்தவரையில், ஊக்கத்தொகை எல்லா ஆட்சிக் காலத்திலும் வழங்கப்பட்டு வருகின்றது. இது Civil Supplies வாங்குகிறார்கள், F.C.I. வாங்குகிறார்கள் என்பதல்ல. ஒரு அரசு மானியமாக...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாத வகையிலே, இந்த ஆண்டு நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு, தரமான நெல்லுக்கு 590 ரூபாய் என்றும், பொதுவான நெல்லுக்கு 560 ரூபாய் என்றும் வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இறுதியாகக் கொள்முதல் செய்யப்பட்டபோது, வழங்கப்பட்டது மொத்தமாக ஊக்கத்தொகையோடு சேர்த்து டன்னுக்கு 560 ரூபாய் என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். [illegible]விண்டால் ஒன்றுக்கு 560 ரூபாய். ஆனால் இன்றைக்[illegible]

226640

தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 590 ரூபாய் என்றும், 560 ரூபாய் என்றும் நல்ல விலைக்குத்தான் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுவரையிலே இந்த இண்டு 999 நெல் கொள்முதல் நிலையங்களிலே 8 இலட்சத்து, 37 ஆயிரத்து 657 டன் நெல் இந்த ஆண்டு மட்டும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்ற நல்ல மகிழ்வான தகவலை தங்கள் வாயிலாகச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தை இந்த அவையில் தெரிவித்து அதன்மூலமாக அமைச்சர் அதற்கு மாறான வேறு விளக்கம் தர விரும்புகிறாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஊக்கத்தொகை, ஊக்கத்தொகை என்று இங்கே பேசப்பட்டது எல்லாம் மத்திய அரசு எந்த முறையில் அந்த நெல் கொள்முதல் செய்கிற காரியத்தை மேற்கொண்டாலும், தமிழக அரசின் மூலமாகச் செய்தாலும், அவர்கள் வேறு அமைப்பின் மூலமாகச் செய்தாலும், ஒரு குறிப்பிட்ட விலையைத்தான் மத்திய அரசு தீர்மானிக்கிறது. மாநில அரசு, நெல்லுக்கு மத்திய அரசு தீர்மானிக்கிற விலை போதுமானதாக இல்லை என்ற காரணத்தால், பாபு ஜெகஜீவன்ராம் இருந்த காலத்திலேயிருந்து மத்திய அரசு தீர்மானிப்பது மாநிலத்திலே உள்ள விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. நெல்லைப் பொறுத்தவரையில் விலை குறைந்து விடுகிறது. ஆகவே, எப்படியும் விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்பதற்காகத்தான் ஊக்கத்தொகை என்ற முறையே கலைஞர் அவர்களாலே மேற்கொள்ளப்பட்டு, வண்டிச் செலவு அல்லது வேறு பெயரால் அந்த ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. அதேபோல, இப்போதும் கொள்முதல் செய்கிற agency யாராக இருந்தாலும், மாநில அரசு அந்த ஊக்கத்தொகையைக் கொடுத்து, விவசாயிகளுக்கு உதவ முடிகிறதா, உதவி செய்கிறீர்களா என்பதுதான் இந்தக் கேள்வியே தவிர, செய்ய முடிகிறது, செய்யவில்லை என்பது அரசாங்கத்தினுடைய முடிவு. ஆனால், அப்படி ஒரு உதவி செய்யலாமே என்ற கருத்துக்காகத்தான் உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நெல்லை மாநில அரசே கொள்முதல் செய்தது. மாநில அரசே கொள்முதல் செய்கின்றபோது கொள்முதல் செய்கிறவர்கள் ஊக்கத்தொகையைத் தந்தார்கள். மைய அரசு இந்த விலைக்குக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொன்னாலும்,



கொள்முதல் செய்கிறவர்கள், நமது பணத்தைப் போட்டு கொள்முதல் செய்கிறோம், நமது தேவைக்காக கொள்முதல் செய்கிறோம், ஊக்கத்தொகை தருகிறோம். தற்போதைய நடைமுறை அப்படி அல்ல. மைய அரசு கொள்முதல் செய்கிறது. மைய அரசு கொள்முதல் செய்வது, அவர்களுடைய பணத்தின் மூலமாகக் கொள்முதல் செய்கிறார்கள். We are acting just like an employee; only as an Agent to the Principal. Central Government is the Principal. Food Corporation of India is the Principal. அவர்கள் கொள்முதல் செய்கிற காரணத்தால், எப்படி நாம் கொள்முதல் செய்கிறபோது ஊக்கத்தொகையை நாம் தந்தோமோ, அப்படி மைய அரசு தற்போது கொள்முதல் செய்கிறபோது, ஊக்கத்தொகையை அவர்கள்தானே தர வேண்டும்? அவர்கள் சார்பிலே பணியாற்றுகின்ற agent-ஆக, employee-ஆக இருக்கிற Civil Supplies Corporation எப்படி ஊக்கத்தொகையைத் தரமுடியும்? இதுதான் நிலை.

முற்பகல் 11-55

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, இன்னும் 5 மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் பேசவே இல்லீங்க. தயவுசெய்து பேசவிடுங்கள். நீங்களே பார்த்தீர்கள், நான் ஒன்றும் பெரிய argument-க்கே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Civil Supplies மானியக் கோரிக்கையிலே இன்னும் 6 பேர் பேச வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** சரி, அதற்காக. Civil Supplies கொடுத்ததுகூட, அப்போது மாநில அரசாங்கமே வாங்கவில்லை. Civil Supplies தான் வாங்கிற்று. மாநில அரசாங்கம் subsidy கொடுத்தார்கள். அதுகூட ஊக்கத்தொகை என்று, பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போல ஊக்கத்தொகை என்று கொடுக்கக்கூடாது என்று விதி இருந்தபோதுகூட, அதை போக்குவரத்திற்காகக் கொடுத்தார்கள். அதைத்தான் இப்போது மீண்டும் விவசாயிகளின்மீது அக்கறை உள்ள இந்த அரசு, அவர்களுக்கு ஊக்கத்தொகை என்ற பெயரில் இல்லாவிட்டாலும், கையாளும் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என்ற அடிப்படையிலே கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் 590 ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலைதான். ஆக, அவர்கள் கொடுத்த விலையைத்தான் நீங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல், பொது விநியோக முறையிலே, ration card-ல் பல்வேறு பிரச்சினைகள் இப்போது உருவாகியிருக்கின்றன. குறிப்பாக, புதிய கார்டுகள் என்று சொன்னீர்கள். புதிய கார்டுகள் வழங்குவதிலேகூட பல்வேறு பகுதிகளிலே அந்தக் கார்டுகள் எல்லாம் கிடைக்கவில்லை என்று பல்வேறு சங்கங்கள் குறிப்புகளை எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலே 30-6-2005 வரை வழங்கப்படும்; வெள்ளைக் கார்டு வைத்திருக்கிறவர்களுக்கு, அரிசி வாங்காமல் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தீர்கள். அது 30-6-2005 வரைதான் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்கள். அவர்களுக்கு அதற்குப் பிறகு அது நிறுத்தப்படுமா? தொடருமா?....

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே சென்ற முறை நடைபெற்ற கூட்டத்திலும் நான் அறிவித்தேன். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலே தமிழகத்திற்கு 78 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் என்பது 2001 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. படிப்படியாக அதனுடைய அளவானது குறைக்கப்பட்டு, இப்போது 58 ஆயிரம் கிலோ லிட்டரிலே நின்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கு முன்பாகவே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே கடிதம் மூலமாகவும், நேராகவும் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற குடும்பங்களினுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, விநியோகிக்கப்படுகின்ற மண்ணெண்ணெயின் அளவைக் கூட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக, குறைத்துக் கொடுப்பது எவ்வகையில் நியாயம்? ஆகவே, 1 இலட்சத்து 200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயானது தமிழகத்திற்கு விநியோகிப்பதற்கு வழங்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையைக் கடிதம் மூலமாகவும், நேரிலும் பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இதற்கும் என்னுடைய பதில் என்னவென்று சொன்னால், 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திலேயிருந்து



ஏகபோகமாக வெற்றிபெற்றுச் சென்றிருக்கிறீர்கள். உங்களுடைய கடமையானது மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலே இங்கே எங்களிடத்திலே கேட்பதற்குப் பதிலாக, தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர்தான் டெல்லியிலே பெட்ரோலியத் துறை அமைச்சராக இருக்கிறார். அவர்களிடத்திலே சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கேட்டிருக்கிற கோரிக்கைக்கு ஏற்றவாறு முன்பு 1 கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகள் என்று இருந்தன, இப்போது 1 கோடியே 87 இலட்சம் குடும்ப அட்டைகள் என்று எண்ணிக்கையிலே பெருகி இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் நாம் டெல்லிக்குச் சென்றிருக்கிறோம் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலே, அங்கே யாரிடத்திலே பெறவேண்டுமோ அவர்களிடத்திலே கேட்டு, இங்கே கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தால், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் கேட்டுக்கொண்டபடி, புதிய குடும்ப அட்டைகளுக்கும் போதுமான அளவுக்கு மண்ணெண்ணெயானது விநியோகிக்கப்படும் என்கின்ற பதிலைத் தங்கள் வாயிலாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேசவே இல்லையே! நான் கேட்டால், அவர்கள் பதில் சொல்ல எழுந்தால் நான் என்ன செய்ய முடியும்? என்னங்க நீங்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும். இந்த அவையிலே மற்ற கட்சியினரும் இருக்கிறார்களே!

**டாக்டர் க. பொன்முடி:** அதற்காக என்ன பண்ண முடியும்? அவர்களைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல நியாயவிலைக் கடைகளில் மண்ணெண்ணெய் வாங்க வேண்டுமென்று சொன்னால், சில கட்டுப்பாட்டுப் பொருட்கள், இல்லாத பொருட்கள், அதாவது, மைதா வெளி மார்க்கெட்டில் 12 ரூபாய் 50 காசு என்று விற்கப்படுகிறது. அதை ரேஷன் கடையிலே 15 ரூபாய்க்கு விற்கிறார்கள். கோதுமை வெளி மார்க்கெட்டில் 13 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ரேஷன் கடையிலே 15 ரூபாய் 50 காசுக்கு விற்கிறார்கள்.

அதேமாதிரி சோப் 4 ரூபாய் 3.5 காசுக்கு வெளியிலே விற்கப்படுகிறது. ரேஷன் கடையிலே 5 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதைச் சில இடங்களிலே என்ன பண்ணுகிறார்கள், இந்தப் பொருட்களை வாங்கினால்தான் மண்ணெண்ணெய் கொடுப்போம்......

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை உருவாக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். எந்த நியாயவிலைக் கடையிலும், எந்தப் பொருளையும் வாங்க வேண்டுமென்று, யாரிடத்திலும் வற்புறுத்துவது கிடையாது. நியாயவிலைக் கடைகளிலே ஊட்டி டீ, அயோடின் கலந்த உப்பு, மைதா, கோதுமை, தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, இன்னும் பெண்களுக்குத் தேவையான, குடும்பங்களுக்குத் தேவையான மசாலா பொடி போன்ற பல்வேறு பொருட்கள் non-P.D.S. பொருட்கள் காலம் காலமாக விற்கப்படுவது உண்மைதான். நியாயவிலைக் கடைகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அவையெல்லாம் அங்கே வியாபாரம் செய்யப்பட்டு, அதன்மூலம் வரும் வருமானத்தை அந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் தங்களுடைய இழப்பீட்டுச் செலவுக்காகச் சரிக்கட்டிக் கொள்கின்றன. எங்கும், யாருக்கும், எந்தப் பொருளையும் வற்புறுத்தி விற்பனை செய்யப்படுவதில்லை என்கின்ற தகவலைத் தங்கள் வாயிலாகச் சொல்லி அமர்கிறேன்.

நண்பகல் *12-00*

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, Joint Purchase Committee-யின் மூலமாக முடிவு செய்யப்பட்டு, இந்தப் பொருட்கள் வாங்கப்பட்டு விற்கப்படுகின்றபோது, சில இடங்களில் ஒரே நபரே சப்ளை செய்கின்றார் என்ற குற்றச்சாட்டெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் விசாரித்து — அதுமாதிரி இல்லையென்றால் ரொம்ப சந்தோஷம். மக்களிடம் இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கின்றேன் — அவர்கள் இதைத் தடுத்து நிறுத்தினால் மகிழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்களைத் தவிர மற்ற பொருட்கள் விற்கப்படுவதற்குக் காரணம், தாய்மார்கள், பொதுமக்கள், அதை வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். என்னிடமே பல இடங்களில் தாய்மார்கள் கேட்டிருக்கின்றார்கள். "ரேஷன் கடைக்குச்



சென்று உணவுப் பொருட்களை வாங்குகின்றோம். அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் வாங்குகின்றோம். மற்றபடி வீட்டுக்குத் தேவையான பொருட்கள், சோப்பு, பற்பசை, பற்பொடி இதுபோன்ற பொருட்களையெல்லாம் வாங்குவதற்குப் பல கடைகளுக்கு, வேறு கடைகளுக்கு அலைய வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம்கூட நீங்கள் நியாயவிலைக் கடைகளில் கொடுத்தால் நன்றாக இருக்குமே" என்று கேட்டுக்கொண்டதால்தான் மற்ற பொருட்களும் இந்த நியாயவிலைக் கடைகளில் கொடுக்கப்படுகின்றன.

மண்ணெண்ணெயைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதைப்பற்றி ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். மண்ணெண்ணெயை வாங்குகின்ற உரிமை, அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது. மத்திய அரசுதான் ஒதுக்கீடு செய்ய வேண்டும். படிப்படியாக ஏற்கெனவே இருந்த ஒதுக்கீட்டை —இப்போது மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததைப்போல்—78 ஆயிரம் கிலோ லிட்டர் ஒதுக்கீடு என்று இருந்த மண்ணெண்ணெய், படிப்படியாகக் குறைத்து, குறைத்து, இப்போது 58 ஆயிரம் கிலோ லிட்டராக இப்போது குறைத்திருக்கின்றார்கள். இதனால் தேவை இருக்கின்ற அளவுக்கு மக்களுக்கு ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய் வழங்க முடியவில்லை. இந்தப் புதிய அரசு வந்ததும், நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதே இதைப் பற்றி நேரிலேயே அவரிடம் விளக்கி நான் முறையிட்டேன். ரேஷன் கார்டுகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கின்ற நேரத்தில் மண்ணெண்ணெய் allotment-ஐ நீங்கள் குறைத்துக்கொண்டே வந்தால் நாங்கள் எப்படி மக்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை வழங்க முடியும்? ஆகவே, அதிகரிக்க வேண்டும். 1,00,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்க வேண்டுமென்று கேட்டு, நேராகவும் நான் அவரிடம் முறையிட்டேன். அதன் பிறகு நினைவூட்டுக் கடிதங்களும் அனுப்பியிருக்கின்றோம். ஆனால், இன்று வரை மத்திய அரசு அந்த ஒதுக்கீட்டை (குறுக்கீடு) சரி, அப்படியானால், நீங்கள் சொல்லுங்கள். சொல்லிவிடுங்கள். நீங்களே சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டபடி, மார்ச் மாதம் மற்றும் ஏப்ரல் மாதம் ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் தற்காலிகமாக, தற்காலிகமாக 17 ஆயிரம் கிலோ லிட்டர்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒதுக்கீட்டை அதிகரித்திருக்கின்றார்கள் இல்லையா? (குறுக்கீடு) Regular allotment-ஆ? சரி, நான் தவறாகச் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கோரிக்கையின்படி, தற்காலிகமாக, தற்காலிகமாக 17 ஆயிரம் கிலோ லிட்டர் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதுவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். ஏற்கெனவே உங்கள் உரை முடிந்துவிட்டது. நீங்கள் வாக்கியத்தை நிறைவு செய்துவிட்டீர்கள். திரு. சுப்பையா பாண்டியன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டபடி, அதாவது ஒரு லட்சத்து இருநூறு கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு மட்டும் அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டபடி அல்லாமல், 17 ஆயிரம் கிலோ லிட்டர் என்கின்ற அளவிலே மண்ணெண்ணெய் அளவை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதுவும் தற்காலிகமாக என்று தங்கள் வாயிலாகச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர். (குறுக்கீடு) திரு. பொன்முடி, நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரே ஒரு clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது, சத்துணவுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் கூட்டுறவுத் துறையிலே Civil Supplies Corporation நிதி ஒதுக்கீடு ஆகிய இரண்டையும் சேர்த்துக் குழப்பிப் பேசிய காரணத்தால், சில தகவல்களைச் சொல்ல முடியவில்லை. திரு. பொன்முடியைப் பொறுத்தவரைக்கும், 2004-2005 ஆம் ஆண்டு ரூ.206.94 கோடி என்று 54 ஆம் பக்கத்திலே 4-வது column-லே கூறியிருப்பது.



ஏன் ரூ.171.96 கோடியாகக் குறைக்கப்பட்டது என்று அதைக் கேட்டார் என்று கருதுகின்றேன். அதற்கு முக்கியக் காரணம், குழந்தைகளுக்கு உணவு அளிப்பதில், அந்தக் குழந்தைகளுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, தற்போது பருப்பு - dhall குழந்தைகளுக்குப் போடுவதில், வாரத்திற்கு இரண்டு முறை என்பது, வாரத்திற்கு ஒரு முறை என ஆக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், தற்போது 36.85 கோடி ரூபாய்க்கு முட்டை வழங்கப்படுகின்றது. இந்தக் கணக்கைப் பொறுத்தவரைக்கும் இது கூட்டுறவுக் கணக்கிலே வராது. அது தனியாக Demand 43-Social Welfare-ல்தான் வருமே ஒழிய, Demand 12-ல் வராது என்பதை நான் தெளிவுபடுத்துகின்றேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டும். ஓர் உறுப்பினர் எவ்வளவு நேரம்தான் எடுத்துக்கொள்வது? (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்கள் வாக்கியத்தை முடியுங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற பொருள்களைக் கூட்டுறவுக் கடைகளிலே விற்பதாகச் சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால், வெளி மார்க்கெட்டைவிட அங்கே விலை அதிகமாக இருக்கிறது. அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேனே தவிர, விற்கக் கூடாது என்பதல்ல.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி பத்திரிகைகளைப் படிக்கிறபோது, நியாயவிலைக் கடைகளிலேயிருந்து அரிசி கடத்தப்படுகின்றது. அதுவும் குறிப்பாக, அரிசி கெட்டுவிட்டது என்று சொல்லி,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிந்தது. திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** *என்ன பேசினேன் என்று சொல்கிறீர்கள்? நான் ஐந்து நிமிடங்கள்கூடப் பேசவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஐந்து நிமிடங்கள்கூடப் பேசவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மணி 12-05 ஆகிவிட்டது.*

**டாக்டர் க. பொன்முடி:** *குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை. எந்த விவகாரத்திற்குள்ளேயும் போகவில்லை. ஐந்து நிமிடங்கள்கூட நான் பேசவில்லை, சார். நீங்கள் அதற்குள்ளே...*

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கைகள்மீது எனக்குப் பேச இந்த மாமன்றத்தில் வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு... (குறுக்கீடு)*

***திரு. துரைமுருகன்:** *நீங்களே சொல்லுங்கள். அவர் இரண்டு sentence-ஆவது முழுக்கப் பேசினாரா? எல்லாம் அமைச்சர் பெருமக்கள்தான் பேசினார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவரே கொக்கிபோட்டு இழுக்கிறார் அமைச்சர்களை; (குறுக்கீடு) பதில் சொல்லச் சொல்லிக் கேட்கிறார். அப்புறம் என்ன பண்ணுவது? (குறுக்கீடு) அவர் பதில் சொல்ல வேண்டாமா, அப்புறம்? (குறுக்கீடு) அவரே கேட்கிறார், அதற்கு என்ன பதில் என்று.*

**திரு. துரைமுருகன்:** *அமைச்சருடைய பதிலை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அதைக் கடைசியிலே சொல்லலாமே!*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவரே கேட்கிறார். திரு. துரைமுருகன், திரு. பொன்முடியே கேட்கிறார்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொன்முடி அவர்கள் பேசுவதைப் பேசட்டும். அதற்கு அரசின் தரப்பிலே தக்க பதில் இருக்கிறது. பேசுவதை allow பண்ணலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், நீங்கள் அரசுத் தரப்பிலே பதில் இருக்கிறது என்பதற்காக அல்ல. நேரத்தை நான் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அதுதான்*



*எனக்குள்ள பிரச்சினை. வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) திரு. சுப்பையா பாண்டியன்.*

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச இந்த மாமன்றத்தில் வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளும் மகராசி, மாதவம்போல் மின்னுகின்ற முகராசி, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த தூய அன்னை, நாட்டில் தொட்டதெல்லாம் துலங்க வைத்த வீர அன்னை, வாராது போல் வந்த மாமணி, அன்பு வற்றாத உள்ளம் கொண்ட தவமணி, பகைவரைக் கண்டு அஞ்சாத தனிப் பிறவி, வி.சி.டி. ஒழித்த வீர நங்கை, புதிய வீராணம் கொண்டுவந்த புதிய நங்கை, (மேசையைத் தட்டும் ஒலி) காட்டுக் கொள்ளையன் வீரப்பனைச் சுட்டு வீழ்த்திய வீரத் தாய், சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்றீர்கள். அது சங்கர மடம் என்றாலும் சமம் என்றீர்கள். நீதி தேவதையை உங்கள் வடிவில் கண்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் நிழலில்கூட சத்தியத்தின் ஒளி கண்டோம். தனக்கென்று வாழாத தங்கத் தாய். பகைவருக்குத் தலை என்றும் வணங்காத சிங்கத் தாய். தாயின் முதலெழுத்தை முன்னே வைத்து, தலையெழுத்தை மாற்றிய தமிழ்ப் பெருந் தாய். தமிழ்நாட்டின் மானம் காக்கும் காவல் தாய். தன்மானம் குறையாத தமிழ்த் தாய். வானம்போல் அன்பு மனம் படைத்த தாய். வள்ளல் எனும் வரிசையிலே இருந்த தாய். கோயில் அன்னதானத் திட்டம் இங்கு கொடுத்த தாய். பள்ளி செல்ல சைக்கிள்களும் கொடுத்த தாய். காவல் துறை கண்ணியத்தைக் காத்த தாய். கலைத் துறைக்கு சலுகை பல அளித்த தாய். கண்ணயர மறந்து நாளும் உழைத்த தாய். கண்ணிமைபோல் பொதுமக்களை நினைத்த தாய். (மேசையைத் தட்டும் ஒலி) முப்பொழுதும் நம்பிக்கைதான் கொடுத்த தாய். எப்பொழுதும் துயரை வென்று சிரித்த தாய். தடைகள் எல்லாம் படிகளாக்கி உயர்ந்த தாய். தத்துவமே எங்கள் தெய்வத் தாயம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)*

*இயற்கைச் சீற்றத்தால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சலுகை பல அள்ளி அள்ளிக் கொடுத்த தாய். அம்மா என்று பெயர் கேட்டால் காதினிக்கும். அம்மா உங்கள் சொல் கேட்டால் மனம்*

இனிக்கும். அம்மா உங்கள் வழி சென்றால் வாழ்வினிக்கும். உங்களால்தான் இந்தத் தமிழகம் பிழைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தேரினிலே தெய்வம் வந்தால் தெருவெல்லாம் கீழே நிற்கும். எங்கள் அம்மா காரினிலே வலம் வந்தால் எதிரிகள் எல்லாம் பதராகி, தூள் தூளாகப் பறந்துவிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேரினிலே தெய்வம் வந்தால் தெருவெல்லாம் கீழே நிற்கும். எங்கள் அம்மா காரினிலே வலம் வந்தால் எதிரிகள் எல்லாம் பதராகி, தூள் தூளாகப் பறந்துவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8-3-2005 அன்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர், அன்புக்குரிய உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பாவேந்தன் பாரதிதாசன் பாடல் வரிகளை எழுதிக்கொண்டு, இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அம்மா அரசைப் பற்றிக் குறை கூறிப் பாடினார். நான் அதே ஒரு பக்கத்திலே பாவேந்தன் பாரதிதாசனுடைய பாடலைக் குறிப்புமில்லாமல், எழுதியும் வைக்காமல் இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கவனிக்க வேண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

"கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்
பொழிலிடை வண்டின் ஒலியும் — ஓடை
புனலிடை வாய்க்கும் கலியும்
குழலிடை வாய்க்கும் இசையும் — வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்
குழவிகள் மழலைப் பேச்சும் — பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்
விழைகுவ னேனும் தமிழும் — நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்;
பயிலுறும் அண்ணன் தம்பி — அக்கம்
பக்கத் துறவின் முறையார்
தயைமிக உடையாள் அன்னை — என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில்போல் பேசிடும் மனையாள்



பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவது சுப்பையா பாண்டியனா, சுப்பையா பண்டிதரா?

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

குயில்போல் பேசிடும் மனையாள் — அன்பைக்
கொட்டி வளர்த்திடும் பிள்ளை
அயலராகும் வண்ணம் — தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்;"
"இனியென என்பேன் எனினும் — தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"
என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப் போல,
"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே, கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையாள் நின்னை"

என்று சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியை வர்ணித்தது போல,

"எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"
"பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"'

என்று கம்ப இராமாயணத்தில் கம்பர் ராமரையும், சீதையையும் வர்ணித்தது போல (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 2005-2006 ஆம் ஆண்டினுடைய பட்ஜெட்டை அடித்தட்டு மக்கள், நடுத்தட்டு மக்கள்,

மேல்தட்டு மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளர்கள், கூலித் தொழிலாளிகள், படித்தவர்கள், பண்பாளர்கள், டாக்டர்கள், இன்ஜினியர்கள், அரசு அதிகாரிகள், ஏன் கருவிலே இருக்கும் குழந்தைகூட முக்கி முனகிக் கொண்டு இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் மாத்திரம் பாராட்டுவதில்லை. அது ஏன் என்று புரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா சொல்லி இருக்கிறார் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று. நீங்கள் உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் சரிதான் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, கூட்டுறவினால் நன்மை பெற்றோர் இந்த நாட்டு மக்கள் அனைவரும். உலகத்திலேயே கூட்டுறவுக்கு இணையாக வேறு எந்த அமைப்பும் இல்லை. எனவேதான் எங்கும் கூட்டுறவு எதிலும் கூட்டுறவு என்று சொல்வார்கள். எனவேதான் தமிழகத்தில் கூட்டுறவு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில் சிறந்து விளங்குகிறது. கூட்டுறவு வங்கிகள் மூலம் தமிழக விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் பொற்கால அரசு வரலாறு படைத்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்த ஆண்டு தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூபாய் 1,037 கோடி அளவில் பயிர்க் கடனாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. சென்ற ஆண்டு ரூபாய் 616.59 கோடி பயிர்க் கடனாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. எனவே, இவ்வாண்டிற்கான இலக்கு, சென்ற ஆண்டின் சாதனையைவிட 69 சதவிகிதம் கூடுதலாகும். இந்த ஆண்டிற்கான பயிர்க் கடன் சென்ற ஆண்டைவிட 30 சதவிகிதம் கூடுதலாக இருக்க வேண்டும் என்று நபார்டு வங்கி நிர்ணயித்ததைவிட மேலாகவே நடப்பாண்டில் தமிழகக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்க, மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 23-2-2005 வரை நமது மாநிலத்தில் ரூபாய் 943.77 கோடி அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது இவ்வாண்டிற்கான இலக்கில் 90.95 சதவிகிதம் ஆகும். சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கடன் அளவைவிட கூடுதலாக ரூபாய் 327.18 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக விவசாயிகளுக்குக் கடன்-4 ஆண்டுகளாக வறட்சி நிவாரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நான் இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி 2001 ஆம் ஆண்டு 310.51 கோடி ரூபாய். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டித் தள்ளுபடி 2002 ஆம் ஆண்டு 61.05 கோடி ரூபாய். குறுவை 2002-ல் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை மாற்றி அமைத்ததற்கான மானியம் ரூ.20 கோடி. நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகளுக்கு அபராத வட்டித் தள்ளுபடி ரூ.1.80 கோடி. 2003-2004 ஆம் ஆண்டில் பயிர்க் கடன்களின் மீதான வட்டித் தள்ளுபடி ரூ.62 கோடி. 1999 ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்டு 31-3-2004 அன்று நிலுவையிலுள்ள மத்திய கால மாற்றுக் கடன்களை மாற்றியமைத்தது ரூ.28.95 கோடி. கடந்த 4 ஆண்டுகளாக வறட்சி நிவாரணமாக விவசாயிகளுக்காக மொத்தம் இதுவரை வழங்கப்பட்ட தொகை ரூபாய் 524.31 கோடி. பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதை, இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசுதான் செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். கம்ப இராமாயணத்திலுள்ள அனுமானும், மகாபாரதத்திலுள்ள அர்ஜுனனும் ஒரு கட்டத்திலே சந்திக்கிறார்கள் சேது சமுத்திரத்திலே அந்தப் பாலத்தின் வழியாகச் சீதாப் பிராட்டியை மீட்டுக் கொண்டுவர, அந்தச் சேது சமுத்திரத்திலே சந்திக்கிறார்கள். அப்பொழுது, அர்ஜுனன் சொல்கிறான்:

“கன்றியவெங் கரன்முதலோர் களத்தில்வீழ
கவிகுலநா யகனிதயம் கலங்கிவீழ
ஒன்றுபட மரமேழும் உததியேழும்
ஊடுருவச் சரந்தொடுத்த ஒருவில்வீரன்
துன்றியெழு பதுவெள்ளம் குரங்கின்சேனை
சூழ்போத வாய்த்ததிருத் துணைவனோடும்
சென்றவழி இன்றளவும் துளவம்நாறும்
சேதுதரி சனம்செய்தான் திறல்வல்லோனே!” என்று போற்றுகிறான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களுக்கு எல்லாமே தெரியும். மிகுந்த கோபமுடைய கரன் முதலான அரக்கர்கள் களத்தில் விழவும், கவிகுல நாயகன் இதயம் கலங்கி விழவும், "இந்த இராமனுக்கு வாலியைக் கொல்லும் திறன் உண்டோ?" என்று சண்டையிட்ட சுக்ரீவனைத் துரத்தும்பொருட்டும், ஏழு மரா மரங்களைத் துளைசெய்தும், தனது வேண்டுகோளை மதிக்காத சமுத்திர ராஜனை, "தனியாகச் சரம் தொடுத்த ஒரு வில் வீரனானவன் எழுபது வெள்ளம் குரங்கின் சேனையோடும் தனது தம்பி இலட்சுமணனோடும் சென்ற வழி இன்றளவும் திருத்துளாய் மணக்குதே" என்று அர்ஜுனன் போற்றியதைப் போல, எங்கள் புரட்சித் தலைவி அம்மா கொண்டுவந்த திட்டத்தை, இந்த 21 ஆம் நூற்றாண்டு மட்டுமல்ல, 41-வது நூற்றாண்டிலும் பொன் ஏட்டுக்களால் பொறிக்கப்பட வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே பதிய வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்மூலம் விவசாயிகளுக்கு முதன்முதலாகச் சலுகைகளை வழங்கியவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2004-2005 ஆம் ஆண்டிற்கான பயிர்க் கடன்களுக்கு வட்டி 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது, மாண்புமிகு அம்மாவின் பொற்கால அரசில். 6,11,193 விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.226.56 கோடி தள்ளுபடி. 2002-2003 ஆம் ஆண்டு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டி நிவாரணம், வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி ரூபாய் 61.5 கோடி. 2002-2003 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.250 கோடிக்கான குறுகிய காலப் பயிர்க் கடன்களை, மத்திய காலக் கடன்களாக மாற்றி அமைத்தது, மாண்புமிகு அம்மா அரசு. 2003-2004 ஆம் ஆண்டில் விவசாயிகளின் குறுகிய காலப் பயிர்க் கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.62 கோடி தள்ளுபடி. 2004-2005 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்காகக் கடனளிக்கும்பொருட்டு கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டும் வகையில், ரூ.217.32 கோடி உதவித் திட்டத்தை அறிவித்தவர், மாண்புமிகு அம்மா அவர்கள். ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் 30-6-2003 அன்றுவரை, 67,977 நபர்கள் ரூ.38.25 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏழை,



எளிய மக்களின் சிறப்புக் கடன் திட்டம் —1,28,516 நபர்களுக்குச் சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் ரூ.46.00 கோடி கடனுதவி. 15,909 நபர்களுக்கு மகளிர் பேறுகாலக் கடனுதவி ரூ.4.31 கோடி. 1,572 நபர்களுக்கு மகளிர் தொழில் முனைவோர் கடனுதவி ரூ.9.35 கோடி. 10,006 நபர்களுக்கு, உழைக்கும் மகளிர் சுய உதவிக் குழு மூலம் கடனுதவி ரூ.22.27 கோடி. 44,593 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் புரியக் கடனுதவி ரூ.183.07 கோடி. தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள், இத்திட்டத்தின் பலனை முழுவதும் பெற்றுப் பயன்பெற வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகத்தான திட்டத்தை அறிவித்து, செயல்படுத்தி இந்தப் பொற்கால ஆட்சியில் விவசாயிகளின் நெஞ்சில் பாலை வார்த்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தமிழ்நாட்டிலே மிக முக்கியமான திட்டம் பொது விநியோகத் திட்டம். இந்தத் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புச் செய்த திட்டம். இம்மாநிலத்தில் குடும்ப மாத வருமானத்தை அடிப்படையாகக் கொள்ளவும், விருப்ப அடிப்படையில் குடும்ப அட்டைகளுக்கு அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்குவதோடு, வறுமைக் கோட்டிற்குமேல், வறுமைக் கோட்டிற்குக்கீழ் என்று பாரபட்சம் காட்டாமல் அனைவருக்கும் அரிசி கிலோ 3 ரூபாய் 50 பைசா என்று வழங்கிய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இந்த நாட்டு மக்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னால் பேசும்போது கூறினார்கள் பொன்முடி அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியிலே ஏற்றம் இறக்கம் இல்லாமல் card-கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், உங்கள் ஆட்சியிலே மஞ்சள் கலரு ஜிங்குசா, சிவப்பு கலரு ஜிங்குசா என்று பாடல் பாடியதுபோல, உங்கள் ஆட்சியிலே அந்த மாதிரி நீங்கள் card வழங்கினீர்கள் என்பதை இந்த நாடும் அறியும், நாட்டு மக்களும் அறிவார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். கிராமப்புறத்திலே சொல்வார்கள்.

"முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்,
ரெண்டு குளம் பாழ் ஒண்ணுல தண்ணியே இல்லை.

தண்ணி இல்லா குளத்துக்கு வந்த வேளார் மூணு பேர்,
ரெண்டு பேர் நொண்டி ஒருவருக்குக் கையே இல்லை.

கையில்லாத வேளார் செய்த பாண்டம் மூணு,
ரெண்டு பாண்டம் பச்சை ஒண்ணு வேகவேயில்லை.

வேகாத பாண்டத்திலே போட்ட அரிசி மூணு,
ரெண்டு அரிசி பச்சை, ஒண்ணு வேகவேயில்லை.

வேகாத அரிசிக்கு வந்த விருந்தாளி மூணு பேர்,
ரெண்டு பேர் பட்டினி, ஒருவர் உண்ணவேயில்லை.

உண்ணாத மனிதர் ஓட்டி வந்த எருமை மூணு,
ரெண்டு எருமை மலடு, ஒண்ணு ஈனவேயில்லை.

ஈனாத எருமைக்கு புல்காடு மூணு,
ரெண்டு காடு பொட்டல், ஒண்ணுல புல்லேயில்லை.

புல் இல்லாத காட்டுக்கு கிஸ்தி பணம் மூணு,
ரெண்டு பணம் முட்டை, ஒண்ணு செல்லவேயில்லை.

செல்லாத பணத்தையே செலுத்த வந்தவர் மூணு பேர்,
ரெண்டு பேர் குருடன், ஒருவருக்கு கண்ணே இல்லை.

கண் இல்லாத குருடருக்கு பெண்டாட்டி மூணு,
ரெண்டு பேர் செவிடி, ஒருத்திக்கு காதே இல்லை.

காதில்லா செவிடிக்கு போட்ட நகை மூணு,
ரெண்டு நகை பித்தளை, ஒண்ணு தங்கமேயில்லை."

இப்படித்தானே உங்கள் ஆட்சியிலே திட்டங்களைக் கொண்டு வந்தோம், கொண்டு வந்தோம் என்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்றுமே செய்யவில்லை. இந்த மாதிரிதான் உங்கள் ஆட்சியிலே, மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன்கூடச் சொன்னார்கள், திட்டம் என்றால் அதற்குப் பணமே ஒதுக்கத் தேவையில்லையென்று கூறினார்கள். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டத்தின் மேல் திட்டமாக இன்றைக்கு வகுத்து, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகக் கொண்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு வந்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தமிழ்நாட்டிலே எங்கும் இல்லாத அளவிற்கு அடவிநயினார் Dam-லே விவசாயிகளுக்காக கிட்டத்தட்ட 32 கோடி ரூபாய்க்கு கால்வாய்கள் அமைத்து, lining அமைத்துக் கொடுத்தார்கள். அதேபோன்று, கருப்பா நதி Dam-லேயும் விவசாயிகளுடைய நலனைக் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு cement கால்வாய் தளம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார், திரு. வி.கே. லட்சுமணன் பேசுகிறாரா, நீங்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது நான் பாரதிதாசன் கவிதையைப் படித்தேன் என்று சொன்னார்கள். மேற்கோளுக்காக நான் படித்தேன் என்றார். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தாங்கள் கடைசியாகச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று காந்தியடிகள் சொன்னார். கிராமங்களிலே அடிப்படை ஜனநாயக அமைப்பாக இருப்பது உள்ளாட்சியும், கூட்டுறவும்தான். இந்த உள்ளாட்சிகளுக்கு ராஜீவ் காந்தி அவர்கள் மட்டும் 1973-74-ல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கவில்லையென்று சொன்னால், இந்தியாவிலே பல உள்ளாட்சிகளிலே தேர்தலே நடைபெற்றிருக்காது. இன்றைக்கு நம்முடைய நாட்டிலே ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கண்டிப்பாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுகிறது என்று சொன்னால், அதற்கு ராஜீவ் காந்தி அவர்கள்தான் காரணம். அதேபோல, இந்தக் கூட்டுறவுத்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தேர்தலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறையோ கண்டிப்பாக நடைபெற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு Commission நியமித்து அந்த Commission மூலமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறையோ இந்தத் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற நிலை ஏற்பட்டாலொழிய, கூட்டுறவுகளுக்கு வாழ்வில்லை என்ற நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது.

*பிற்பகல் 12-25*

அதேபோல, இந்தக் கூட்டுறவு வார விழாவை நாம் இன்றைக்கு நேரு பிரானுடைய பிறந்த நாளையொட்டி நவம்பர் 14-லிருந்து 21 வரை ஒரு வார காலத்திற்கு, சில சமயங்களிலே கொண்டாடுகிறோம், சில சமயங்களிலே கொண்டாடுவதில்லை. அதில்கூட நேருதான் தேவைப்படுகிறார். ஆனால், அந்த விழாக்களில் நேருவைப் பற்றி ஒரு வார்த்தைகூட யாருமே பேசுவதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தாலும்கூட இந்தக் கூட்டுறவுகள் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, அகில இந்திய ரீதியாக தலைமையை நம்பித்தான் வளர்ந்து இருக்கிறது.

இன்றைக்குக்கூட ஒரு குரியன் இல்லை என்று சொன்னால் ஆனந்த் பால் பண்ணை இல்லை. தமிழ்நாட்டிலே மிகச் சிறந்த கூட்டுறவாளர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இப்போது இல்லை. நான் வரிசையாக ஒருசில பெயரைச் சொல்லித்தான் ஆக வேண்டும். சேலம் என்று எடுத்துக்கொண்டால் சுப்பிரமணிய கவுண்டர்; சென்னிமலை என்று எடுத்துக்கொண்டால் நாச்சிமுத்து முதலியார்; கோவை என்று எடுத்துக்கொண்டால் பழனியப்ப முதலியார், டி.என். பழனிசாமி கவுண்டர் போன்ற சிறந்த கூட்டுறவாளர்கள் இருந்தார்கள். அதேபோல வாகீசம் பிள்ளை, நடேசன் என்று நான் அடுக்கிக்கொண்டே போகலாம். நம்முடைய சிறந்த கூட்டுறவாளர் டி.ஏ ராமலிங்கம் செட்டியார், அவர்தான் தமிழ்நாட்டிற்கு ஒரு முன்னோடியாக இருந்து கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தவர். இன்றைக்கு அவர்கள் யாரும் இல்லை. இல்லாததன் விளைவு, மைய அரசு தமிழ்நாட்டில் மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, நம்முடைய கூட்டுறவுத் துறையினாலோ அல்லது கூட்டுறவு ஒன்றியத்தினாலோ ஒரு கருத்தரங்கைக் கூட்டி சிறந்த கூட்டுறவாளரை அழைத்து, அவர்களுடைய கருத்தைக் கேட்க முடியவில்லை. காரணம், இந்த ஒன்றியத்திற்கு யார் சிறந்த கூட்டுறவாளர் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அது இன்றைக்குக்கூட உண்மை. அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டார்கள். இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்திற்கு அதிகாரிகள் கண்டிப்பாக ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால் அதிலே அதிகாரிகளின் வரம்பு வெகுவாகக் குறைக்கப்படுகிறது. எனவே, அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆனால், உண்மையான தலைமை இருந்தால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் வளர முடியும் இன்றைக்கும், நாளைக்கும். ஒரு முறை பழைய முன்னாள் பதிவாளர், சுயம்பிரகாசம் அவரிடத்திலே நான் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர் சொன்னார், you have all grown not because of us, but inspite of us என்று சொன்னார்கள். அதாவது, எங்களால் நீங்கள் வளரவில்லை. எங்கள் தடையை மீறி நீங்கள் வளர்ந்து இருக்கிறீர்கள் என்று மிகப் பெருமையாகச் சொன்னார்கள். ஆக அந்த அளவிற்கு தலைவர்கள்தான் கூட்டுறவு இயக்கத்தை வளர்த்து இருக்கிறார்கள் என்பதிலே சந்தேகமே கிடையாது. ஆனால், இன்றைக்கு இது தனி அலுவலர்கள் காலம். இந்தக் காலத்திலே அவர்கள், கூட்டுறவுத் தலைமையிலே இருந்தவர்கள் தவறு செய்தார்கள், நாங்கள் செய்யமாட்டோம், சிறப்பாகச் செய்வோம் என்று நிரூபிப்பதற்கு, சவால் விட்டுச் செய்வதற்கு, இதுதான் பொருத்தமான காலம். செய்து காட்ட வேண்டும். சிந்தாமணி கூட்டுறவு இல்லை. ஜி.ஆர்.ஜி. இருந்தபோது எப்படி இருந்தது? இன்றைக்கு ஜி.ஆர். கோவிந்தராஜ் இல்லை. நீங்கள் நடத்திக் காட்டுங்கள். அதைவிடச் சிறப்பாக நடத்திக் காட்டுவோம் என்று சொல்லுங்கள். அதேபோல கற்பகம் ஸ்டோர்ஸ் வேலூரிலே. சிறப்பாக நடத்திக் காட்டுங்கள். S.O. தான் இருக்கிறார். ஏன் செய்ய முடியவில்லை? ஆக, நம்முடைய தனி அலுவலர்கள் கூட்டுறவுத் தலைவர்களைவிட, சிறப்பாக நாங்கள் படித்தவர்கள், செய்து காட்டமுடியும் என்று சொன்னால், இதைச் சவாலாக ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டிலே முன் மாதிரியாக நடத்திக் காட்ட வேண்டும். அப்படிக் காட்டவில்லை என்று சொன்னால், இந்த அழிவிற்கு, அல்லது இந்தக் கூட்டுறவு இயக்கத்தினுடைய தேக்க நிலைக்கு நீங்கள்தான் காரணம். ஒரு சில கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கூட சிறைக்குப் போய் இருப்பதை—நான் சொல்வது சுட்டிக்காட்டுவதற்காக அல்ல. அவர்களால் சிறப்பாகச் செய்ய முடியவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். கூட்டுறவுத் தேர்தலுக்கு இன்றைக்கு நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகையினாலே கூட்டுறவுத் தேர்தலை நடத்தமுடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், எந்தச் சங்கம் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறதோ, அந்தச் சங்கத்தைத் தவிர மற்ற சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தலாமா,

இல்லையா? ஏன் நடத்தக் கூடாது? அந்தச் சங்கத்தை விட்டுவிடுங்கள். அதைப் பின்னாலே பார்க்கலாம். இருக்கிற சங்கங்களுக்காவது தேர்தல் நடத்தி இந்தக் கூட்டுறவை வாழவைக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தனிப்பட்ட ஒரு சில சங்கங்கள் மட்டும் செல்லவில்லை. பலர் சென்று இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள்—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 33 (12)-ன்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மற்றும் பிரிவு 88 மற்றும் 89-ன்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் ஆகியோருக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் வழங்கும்பொருட்டு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 81-A என்ற ஒரு புதிய பிரிவினைச் சேர்த்து, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் திருத்த அவசரச் சட்டம், 2001, தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2001-ஐ 12-6-2001 அன்று அரசு வெளியிட்டது. மேற்படி புதிய பிரிவு 81(A)-ஐ எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்படி நீதிப் பேராணை மனுக்கள் மீது இறுதி முடிவு பிறப்பிக்கும் வரை தனி அலுவலர்கள் மற்றும் ஆட்சியாளர்களால் புதிதாகச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ உரிமை இல்லை என சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. மேற்படி நீதிப் பேராணை மனுக்களை விசாரித்த நீதிபதி அவற்றை இரு நீதிபதிகளுக்கு மேற்கொண்ட larger Bench விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று 9-4-2002 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். அதன்படி மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு larger Bench முன்பு மேற்படி நீதிப் பேராணை மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. அவை முடிவுக்கு வருகிறபோது, தீர்ப்பு வருகிறபோது, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் என்கிற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

*பிற்பகல் 12-30*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கூட்டுறவு இலாகா இருக்கிறது, ஆனால், கூட்டுறவு இயக்கம் இல்லை. Co-operative Department இலாகா இருக்கிறது. ஆனால் Co-operative movement இல்லை. இதுதான் இருக்கிற நிலைமை. Drip Irrigation Society என்ற ஒன்றும், Functional Registrar-கள், அதாவது செயல் பதிவாளர்களும் எப்போது



வந்தார்களோ, அன்றைக்கே இந்தக் கூட்டுறவு இயக்கம் தேய்ந்து போக ஆரம்பித்துவிட்டது. முன்பு பதிவாளர்கள் தலைமையில் இருந்தபோது மிகச் சிறப்பாக இயங்கிய இந்தக் கூட்டுறவுகள், இன்றைக்குப் படிப்படியாக மிக வேகமாகத் தேய்ந்து போய் வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்றைக்குப் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறோம். நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே ஏராளமான வைப்புத்தொகை வந்திருக்கிறது என்று சொல்கிறோம். P.A.C.B.-கள். அதாவது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களிலே, மத்திய வங்கிகளிலே, சென்னை மாநில வங்கியிலே நிறைய வைப்புத்தொகை வந்திருக்கிறது என்று சொல்கிறோம். ஏன் வந்தது அந்த வைப்புத்தொகை? அதற்குக் காரணம், இந்த NBFC-Non-Banking Finance Company-கள் எல்லாம் மோசடி நிதி நிறுவனங்களாகப் போய்விட்டன என்பது ஒன்று. இரண்டாவது, கூட்டுறவு Primary Society-யிலே வைப்புத்தொகை வைத்தால் TDS கிடையாது, Tax Deduction at Source கிடையாது. அதுமட்டுமல்ல. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கின்ற வட்டியைவிட அரை சதவிகிதமோ, ஒரு சதவிகிதமோ வட்டி அதிகமாகக் கொடுக்கிறோம். இதையெல்லாம் நம்பி குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே நிறைய வைப்புத்தொகை வைத்தார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், பல கூட்டுறவுச் சங்கங்களிலே வைப்புத் தொகையைக் கேட்டால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. ஆக அந்த NBFC எப்படி மோசடியாக இருந்ததோ, அதேபோல கூட்டுறவுச் சங்கங்களும் செய்தால், கூட்டுறவுச் சங்கத்தை மோசடி என்று ஏன் சொல்லக்கூடாது என்று நினைக்கத் தோன்றுகிறது. எங்களுடைய கிராமத்தில் உள்ள ஒரு Engineer, அவர் மின்சார இலாகாவில் Superintending Engineer ஆகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். அவருடைய மனைவி ஒரு M.B.B.S. பட்டதாரி. அவரும் ஓய்வுபெற்றவர். அவர்களுக்கு ஒரு மகள். அவரும் M.B.B.S. படித்தவர். கல்யாணத்திற்காக மூன்றரை இலட்சம் ரூபாய் பணம் வைத்திருந்தார்கள், வேடப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே. பலமுறை கேட்டும் அந்தச் சங்கம் வெறும் 5 ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தது. 5 ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு வெளிநாட்டிற்கும் போக முடியாது, திருமணமும் செய்ய முடியாது. சென்ற வாரம் அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டாள் M.B.B.S. படித்த பெண், தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டாள். இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. இதையெல்லாம் கருத்தில்கொண்டு இந்த வைப்புத் தொகையை......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்படிப்பட்ட தொய்வு, நலிவு, சோதனை ஏற்பட்டதற்கெல்லாம் காரணம், மாண்புமிகு உறுப்பினரும் ஒரு கூட்டுறவாளர், உங்களுக்குத் தெரியாததல்ல. கடந்த கால ஆட்சியிலே தேர்தல் நடந்து (மேசையைத் தட்டும் ஒலி), கூட்டுறவுச் சங்கங்களிலே அரசியல் தலையிட்டுவிட்ட காரணத்தால், கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான பணம் எல்லாம் தவறான முறையிலே பயன்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தச் சங்கங்கள் நலிவுற்றன, அதனால் பாதிப்புக்கு உள்ளாயின. பல வழக்குகள் அதிலே தொடரப்பட்டு, அந்த வழக்குகள் எல்லாம் தற்போது விசாரணையில் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், ஒரு கோடியே, 56 இலட்சத்து, 54 ஆயிரத்து 707 ரூபாய் முறைகேட்டை ஈரோடு மாவட்டத்திலே செய்தார்கள். முன்னாள் தலைவர், ஈரோடு மாவட்ட விவசாய வங்கி மற்றும் ஈரோடு மாவட்ட தி.மு.க. பொருளாளர், திரு. சிவசுப்பிரமணியன், அவருடைய மனைவி மற்றும் மைத்துனர் சேர்ந்து இரண்டு கோடியே, 98 இலட்சம் ரூபாய் சங்கத்திலிருந்து கடன் பெற்றுள்ளார்கள். அதற்காக அவர்கள் கொடுத்த collateral security வெறுமனே 30 இலட்சம் ரூபாய்தான். இது ஒரு நிலை. இப்படியெல்லாம் தவறுகள் நடந்த காரணத்தால்தான் சங்கங்கள் நலிவுற்றன, இப்படிப்பட்ட துயரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது கடந்த கால ஆட்சியினால் உருவான சோதனை (மேசையைத் தட்டும் ஒலி). அதைத் தடுக்க தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தீவிர, தக்க நிர்வாகத் தூய்மையை ஒட்டிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 5 மணித்துளிகள் கொடுங்கள். ஊட்டி நகர வங்கியிலே 2001 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட கடன்களுக்கு 18 சதவிகிதம்--வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்ட கடன்களுக்கு 18 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே 2003-2004 ஆம் ஆண்டுகளிலே அந்த வட்டி 18 சதவீதத்திலேயிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் இவையெல்லாம் 10 ஆண்டுகள் தவணையிலே செலுத்தப்படக்கூடிய கடன்கள். ஆகையினாலே 2001 ஆம் ஆண்டு வாங்கிய அந்தக் கடன்களுக்கும் இந்த 12 சதவீத வட்டியை வசூலிக்க அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-35

தமிழ்நாட்டிலே கூட்டுறவு ஒன்றியம் என்று ஒன்று இருக்கிறது. பழையகோட்டை பட்டக்காரர்தான் அதற்கு அடிக்கல் நாட்டினார். அதற்கு நான் போயிருந்தேன். அதற்குப் பின்னாலே அதற்கு ஒரு திறப்பு விழா நடைபெற்றது. அதற்கும் நான் போயிருந்தேன். ஆனால், இன்றைக்கு அது இருக்கிற இடமே தெரியவில்லை. அந்த ஒன்றியக் கட்டடத்தை இடித்துவிட்டு அங்கே கூட்டுறவாளர்களுக்கு விருந்தினர் மாளிகை கட்டுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், 15 ஆண்டுகாலம் ஆகியும்கூட அந்த விருந்தினர் மாளிகை கட்டப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிலே நிறையப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவை எல்லாம் நிரப்பப்படாததனாலே அந்த வேலைகள் நிறைய தாமதப்பட்டிருக்கின்றன. எனவே, விரைவாக அந்தப் பணியிடங்களை நிரப்பும் வகையில், தகுந்த பணியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகத் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு Tamil Nadu Co-operative Union ஒரு கருத்தரங்கிற்கு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இந்த நேரத்திலே அந்தக் கூட்டுறவு ஒன்றியமானது பல பணிகளை மேற்கொள்ளலாம். ஒன்று... .(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். இன்னும் ஒரு நிமிடத்திலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இன்னும் இரண்டு நிமிட நேரம் கொடுங்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே தகுதியற்ற உறுப்பினர்களைப் பட்டியலிலிருந்து நீக்கலாம். அதற்குக் காரணம், பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் குடியானவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே, நெசவாளர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவையெல்லாம் தேவையற்ற ஒரு நிலை. ஆக, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து அவர்களை நீக்குவதற்கு நம்முடைய பதிவாளர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல்,......

•**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே, கூட்டுறவுச் சங்கங்களிலே, நெசவாளர் சங்கங்களிலே போலி உறுப்பினர்களைச் சேர்த்து வைத்திருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அந்தப் போலி உறுப்பினர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நீக்கியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர்ஆச்சரியமான செய்தி என்னவென்று சொன்னால், கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கிற அந்த Admission Register—அதைப் புரட்டிப் பார்த்தால் பல பேருக்கு வயது 120 ஆகியிருக்கும். காரணம் ஒவ்வோராண்டும் அதை update செய்வதில்லை. ஆகையினாலே அதனுடைய விளைவு என்னவென்று சொன்னால், கள்ள ஓட்டுப் போடுவதற்கு இது ரொம்ப வசதியாக இருக்கிறது. ஆகையினாலே அதை மாற்றுவதோடு, இந்த வாக்காளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய வாக்காளர் பட்டியல்—அடையாள அட்டை அல்ல, புகைப்படம் ஒட்டிய வாக்காளர் அடையாளப் பட்டியல் அவர்களுக்குக் கொடுத்தால் தான் அங்கு கள்ள ஓட்டுப் போடுவது தவிர்க்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்துவிடுங்கள். வாக்கியத்தை நிறைவு பண்ணுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கூட்டுறவுச் சங்கங்களில், செய்யாறிலே இருக்கிற கூட்டுறவு கரும்பு ஆலையிலே மட்டும் Co-generation நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதாவது, அவர்கள் மின்சார உற்பத்தி செய்கிறார்கள். அது Captive purpose-க்காக மட்டுமல்ல, அவர்கள் மின்சார இலாகாவிற்கும் அந்த உபரி மின்சாரத்தைக் கொடுக்கிறார்கள். அதேபோல, எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், இந்த Co-generation செய்து கூட்டுறவு மில்களுக்காவது கொடுக்கலாம். கொடுத்தால் அவர்களுக்குத் தகுந்த வருவாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.



அதுமட்டுமல்லாமல், நிறைய காற்றாலைகளை இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவலாம். அப்படி நிறுவுவதன் மூலமாக எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அவர்கள் குறைந்த செலவிலே மின்சாரத்தை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சை முடித்துவிடுங்கள். திரு. மே.ப. காமராஜ். (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு பண்ணுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும்; அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இன்றைக்கு மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனங்களாக IFFCO, KRIBHCO ஆகியவை இருக்கின்றன. அவையும் கூட்டுறவு நிறுவனங்கள்தான். ஆனால், அவர்கள் நிலத்தடி வாயுவை வைத்துக்கொண்டு ஏராளமாக உர உற்பத்தி செய்கிறார்கள்; வட மாநிலங்களிலே, கலோலிலே, காண்ட்லாவிலே, புல்பூரிலே நிறைய உரத் தொழிற்சாலைகள் அவர்கள் மூலமாக நிறுவப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே நரிமணத்திலே அதேபோல நில வாயு கிடைக்கின்றது. நாம் இன்றைக்கு இந்த IFFCO-விலும் KRIBHCO-விலும் Delegate ஆகப் போக முடியாத நிலை இருந்தாலும்கூட, குறைந்தபட்சம் நரிமணத்திலாவது ஒரு உரத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-40*

ஒரேயொரு செய்தி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே ஒரேயொரு Multi State Co-operative Society இருக்கிறது. அது IMPCOPS என்று சொல்லப்படுகிறது. அதாவது Indian Medical Practitioners Co-operative Pharmacy and Stores என்று. அது ஒன்றுதான் இந்தியாவிலேயே இந்த Multi State Co-operative Society Act-லே பதிவுசெய்யப்பட்ட நிறுவனம். அந்த நிறுவனத்திலே தேர்தல் நடைபெற்றது. தலைவர் இருக்கிறார். ஆனால், நிர்வாகியே கிடையாது. 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு இன்று வரை நிர்வாகிகள் போடப்படவில்லை. அதை நீங்கள் கவனித்து, உடனடியாக நிர்வாகிகளைப் போடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு தந்த தங்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய பாதுகாவலர், தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் என் கருத்துகளை இங்கே தெரிவிக்கின்றேன்.

உழைக்கக்கூடிய பாட்டாளிகளின் ஏழை விவசாயிகள் உள்ளிட்ட, பலதரப்பட்ட நலிந்தவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, பொருளாதார கடனுதவி வழங்குவது கூட்டுறவுத் துறை. "கூட்டுறவே நாட்டுயர்வு" என்பார்கள். ஆனால், இன்று பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே, இந்தத் துறை என்பது ஏழை, நடுத்தர மக்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து மீட்டு, பொருளாதார முன்னேற்றத்திற்கு வாய்ப்பளிக்கும் அமைப்பாகும். இது நாளுக்கு நாள் வளர்ந்து ஆலமரம் போல் பாதுகாப்பு அளிக்க வேண்டுமே தவிர, அதை சிதைத்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அரசுதான். பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்து, சிதைந்து வருவது வேதனையளிக்கிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தருமபுரி, கும்பகோணம் போன்ற பல மாவட்டங்களில் 6 வங்கிகள் முடக்கப்படும் நிலை உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

இன்றைக்கு குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் புதியதாக மாதிரி கூட்டுறவுச் சட்டம் Model Co-operative Act அமல்படுத்தி வெற்றியடைந்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது. அது அரசிற்குத் தெரியுமா? புதிய Model Co-operative சட்டங்களைத் தமிழகத்தில் அமல்படுத்தினால், கூட்டுறவுச் சங்கங்கள் விழிப்புணர்வு அடையவும், ஊழியர்களுக்கு தகுதிக்கேற்ப ஊதியமும், இலாபகரமான நிர்வாக நடைமுறையும், கூட்டுறவில் நிலைநாட்ட முடியுமென சொல்லப்படுகிறது. எனவே, தமிழகத்தில் புதிய Model Co-operative சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



கடந்த 3 ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் அரசாணை எண் 131-ன்படி கட்டாய சம்பளக் குறைப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன. ஏற்கெனவே பணியாற்றி வந்தவர்களுக்கு பெரிய சங்கடம் ஏற்பட்டுள்ளது. சுமார் 30 ஆண்டு காலமாக பணியில் இருந்தவர்களை முறையற்ற பணி நியமனம் எனச் சொல்லி பணி நீக்கம் செய்வதாலும், ஏற்கெனவே வாங்கிய சம்பளத்தை பாதியாகக் குறைத்ததாலும், இன்று பணியாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது. 1½ இலட்சம் குடும்பங்கள் நடுத்தெருவிற்கு வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பளம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்தும், அதிகாரிகள் மிரட்டி பணிய வைத்துள்ளதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசின் செயல் திட்டங்களில் அதிக அளவு மக்கள் தொடர்புடையது கூட்டுறவுதான். கேரளா, மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் கூட்டுறவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கி உள்ளது. அதேபோல் தமிழகத்திலும் அவர்களை அரசு ஊழியர்களாக்கி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே தொடக்க வங்கிக்கு 3 சதவிகிதம் முதல் 4 சதவிகிதம் வரை மார்ஜின் வழங்கப்பட்டதால் வங்கிகள் இலாபத்தில் இயங்கியன. தற்போது 1½ சதவிகிதமாகக் குறைத்து வழங்குவதால் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. சங்க உறுப்பினர்களுக்கிடையே வசூலாகும் அசல் தொகையை மத்திய வங்கி வட்டிக் கணக்கில் வரவு வைப்பதால், வங்கி imbalance ஏற்பட்டு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. Imbalance தொகைக்கு மத்திய வங்கி வட்டி கணக்கிடாமல் இருந்தால், தொடக்க வேளாண்மை வங்கி நஷ்டத்தில் இயங்காத நிலை இருக்கும்.

அதேபோல Imbalance உள்ள வங்கிகளுக்கு ஆடு மாடு வாங்க மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுவதில்லை. இக்கடன்கள் வழங்கினால் வங்கி முன்னேற்றம் அடைந்து இலாபம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் வழங்கப்படும் பயிர்க் கடனுக்கு 2.5% உரம் தற்போது வழங்குவதைவிட மாவட்ட வாரியாக விசாரணை செய்து வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால் தண்ணீர்ப் பாசனம் அதிகம் உள்ள பகுதியில் பயிர் செய்யும் தஞ்சாவூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் கூடுதல் உரம் தேவைப்படுகிறது. ஆனால், தண்ணீர் இல்லாத மானாவாரிப் பயிர் செய்து வருகின்ற சேலம், தருமபுரி,

கிருஷ்ணகிரி, வேலூர் போன்ற மாவட்டங்களில் விவசாயிகள் உரம் அதிகமாக வாங்குவதில்லை. எனவே, மாவட்ட வாரியாக விசாரணை செய்து உரிய தொகை, உரம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த மூன்று ஆண்டு....

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்திலும் உரத் தட்டுப்பாடு இல்லாத வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையின்பேரில், குறிப்பாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களிலும் தட்டுப்பாடு இல்லாமல் உரிய விலையிலே, குறிப்பிட்ட விலையிலே விற்கப்படுகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். நான் உரத் தட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்லவில்லை. பயிர்க் கடனுக்குக் கொடுக்கப்படுகிற தொகையில் உரம் 25% கட்டாயம் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், அந்த உரம், தண்ணீர்ப் பாசனம் உள்ள பகுதிகளில் மட்டும்தான் அதிகம் வாங்குகிறார்கள். தண்ணீர்ப் பாசனம் இல்லாத பகுதியில் உரம் அதிகமாகத் தேவையில்லை. எனவே, அதை விசாரித்து வழங்க வேண்டும் என்றுதான் நான் சொல்கின்றேன். கடந்த 3 ஆண்டுகளாக பயிர்க் கடனுக்கு 13% வட்டி வசூலித்து வந்ததை தற்பொழுது 9% ஆகக் குறைத்துள்ளீர்கள். வரவேற்கின்றேன். மேலும், 5 ஏக்கர் மட்டும் உள்ள விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு பயிர்க் கடனுக்கு வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல, 6, 7 ஏக்கர், மற்றும் 10 ஏக்கர் நிலமுள்ள விவசாயிகள் மேட்டுக் காட்டில் என்னதான் விளைந்தாலும், அவர்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு வருமானம் கிடைப்பதில்லை. எனவே, மேட்டுக்காடு அதிகமாக வைத்திருந்து விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு அளவுகோல் பார்க்காமல், அவர்கள் வாங்கியிருந்த பயிர்க் கடனுக்கு ஒட்டுமொத்தமாக வட்டியை முழுவதும் தள்ளுபடி செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.



கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் நல்ல இலாப நிலையில் இருக்கிறது. தற்போது பல சங்கங்களில் கடன் கேட்டு விண்ணப்பதாரர்கள் 6 மாதத்திற்கு மேலாகக் காத்துள்ளனர். பலருக்கு கேட்ட தொகையில் பாதி வழங்கி, வீடும் பாதியில் கட்டி முடிக்கப்படாமல், மீதிக் கடனும் கொடுக்கப்படாத நிலையில் இருக்கிறது. எனவே, அரசு பரிசீலித்து பாதி கடன் பெற்று காத்திருப்போருக்கு மீதித் தொகையை வழங்கவும், புதிதாக விண்ணப்பித்து பல மாதங்களாக காத்திருப்போருக்குக் கடன் தொகை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். தற்போது வீடு கட்டும் சங்கம் மூலம் கடன் பெற்ற விவசாயிகள் கடந்த 3 வருடங்களாக மழை பெய்யாததால் கடனைச் செலுத்த முடியவில்லை. இந்நிலையில் அதிகாரிகள் வீடுகளைப் பூட்டி seal வைக்கின்ற நிலை உள்ளது. எனவே, அரசு பரிசீலித்து வறட்சி நிலை நீங்கிய பின்னர் கடன் தொகை வசூலை மேற்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். மேலும், கடனுக்குண்டான தவணை தவறிய வட்டிகளைத் தள்ளுபடி செய்ய பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்பொழுது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பொதுமக்களிடம் 1-3-2005 ஆம் தேதி முதல் இட்டு வைப்புகள் வாங்குவதற்குத் துறை அதிகாரிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளதால் இட்டு வைப்புகள் வாங்குவதில்லை. இதனால் அந்த கிராமப்புற பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, அந்த அதிகாரிகள் விதித்த தடையை இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். சென்னையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம்--டி.யு.சி.எஸ்.-க்குச் சொந்தமான கட்டடத்திலே 12 இடங்களில் டாஸ்மாக் மதுக் கடைகள் நடத்தி வருகிறார்கள். ஓர் ஆண்டுக்கு மேல் நடத்தியும், முன்பணத் தொகையோ, வாடகையோ இதுவரை கொடுக்கப்படவில்லை. எனவே, சுமார் ஒரு கோடிக்கு மேல் வரி வசூல் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இந்தச் சங்கம் தற்பொழுது கடனில் உள்ளது. அதற்கு ஏன் கொடுக்கவில்லை? அதற்கான விளக்கத்தையும் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். கூட்டுறவில் முறையான தணிக்கை செய்யாததும், அவ்வாறு தணிக்கை செய்யப்பட்டு கூறப்படும் குறைபாடுகளுக்கு முறையான நடவடிக்கை எடுக்க தணிக்கைத் துறைக்கு அதிகாரம் வழங்காமல் உள்ளதும்தான், நஷ்டத்திற்குக் காரணமாகும். தற்காலிக, tentative வரவு—செலவுத் திட்டங்களை நடைமுறைபடுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு தணிக்கையானது கூட்டுறவு ஆண்டின் வரவு—செலவுகளை 60 நாட்களுக்குள் தணிக்கை செய்து அறிக்கை

சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு தணிக்கை செய்யாத கூட்டுறவுச் சங்கங்களிலே, தற்காலிக வரவு—செலவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தாத அளவில் விதிமுறைகளை கடுமையாக்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு திவாலடைந்த வீட்டுவசதிச் சங்கங்கள் உள்ளன. பல கோடி நஷ்டம் ஏற்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு, நடவடிக்கை இல்லாமல் உள்ளது. உதாரணமாக, சேலம் மாவட்டம், ஆத்தூர், அறிஞர் அண்ணா கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், சேலம் பேர்லைன்ஸ் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் போன்றவற்றில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு, பல்வேறு சங்கங்களின் மூலம் கோடிக்கணக்கான deposit தொகை வாபஸ்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** கொடுக்க முடியாத நிலையில் தள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அரக்கோணம் நகர கூட்டுறவு வங்கியிலும் இதேபோன்று நிலைமை உருவாகி இருக்கிறது. அதையும் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

நாட்டிலுள்ள 9,388 கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.288.47 கோடி முதலீடு செய்ததற்கு 1998-2003 வரை ரூ.0.14 கோடியிலிருந்து ரூ.1.92 கோடி வரைதான் பங்குத்தொகை கிடைத்துள்ளது. இது மிகவும் சொற்பமானது. 2005-2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களாக அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. அதாவது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், பெண் உறுப்பினர்களுக்குக் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க, வட்டியில்லாக் கடன் ரூ.500 வீதமும் ரூ.1,000 வீதமும் வழங்குவதாக அறிவித்துள்ளதை நான் வரவேற்கின்றேன். அதேபோல அரசு கொடுக்கும் இந்தத் தொகையை பெண்களுக்கு எளிதாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். குறிப்பாக குடும்ப அட்டையோ அல்லது ஏதாவது ஒரு அடையாள அட்டையோ, சான்றிதழாகக் காண்பித்தால் உடனடியாகக் கடன் கொடுக்கக்கூடிய நிலையையும் உருவாக்க வேண்டும். இதை விட்டுவிட்டு பல்வேறு ஆவணங்களைக் கேட்டு, பெண்கள் அந்தத் தொகையை வாங்க பல நாட்கள் அலைந்து, பாதித் தொகையை அதற்கே செலவழிக்கும் நிலையை ஏற்படுத்தக் கூடாது என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



தற்போது கிராமப்புற கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்கப்படும் பொருட்களில், ஒருசில சோப்புகள் தரமாக இல்லை. ஆனால், அந்தச் சோப்புகளை எல்லாம், குறிப்பாக பாயின்ட், கோபுரம், தரணி போன்ற சோப்புகளை எல்லாம் கட்டாயப்படுத்தி வாங்க வேண்டும் என்று சொல்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. அப்படி வாங்கினால்தான் அரிசி, சர்க்கரை போடுவோம் என்று விற்பனையாளர்கள் சொல்கின்றார்கள். ஆகவே, இதுமாதிரி கட்டாயப்படுத்தக்கூடாது என்று நான் இங்கே அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** தமிழகம் முழுவதும் பொது விநியோகக் கடைகள் மூலம் மாதம் முழுவதும் மண்ணெண்ணெய் வழங்குவதில்லை. எனவே, மாதம் முழுவதும் வழங்குவதற்குண்டான நடவடிக்கையை....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களும் குறிப்பிட்டார். இப்போது பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்களும் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஏற்கெனவே இந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பற்றி இங்கே தெரிவித்த கருத்துகள் குழப்பமாகப் போய்விட்டன. ஆகவே, தெளிவான விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். 1999-2000 ஆண்டில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மாதத்திற்கு 77,108 கிலோ லிட்டராக இருந்தது. அதன் பின்னர் 2000-2001-ல், பின்னர் 2001-2002-ல் மாதத்திற்கு 67, 876 கிலோ லிட்டராகக் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் 2002-2003-ல் மாதத்திற்கு 62,398 கிலோ லிட்டராக மேலும் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் 2003-2004 ஆம் ஆண்டில் மாதத்திற்கு 60,144 கிலோ லிட்டர் என்று மேலும் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் 2004-2005 ஆம் ஆண்டில் மாத ஒதுக்கீடு 58,392 கிலோ லிட்டர் என்னும் அளவிற்கு குறைக்கப்பட்டது. அதன் பின்னர் மாதந்தோறும் பொது விநியோகக் கடைகளின் மூலம், Public Distribution System மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் ஒதுக்கீடு மாதத்திற்கு 58,000 கிலோ லிட்டராகவே இருந்துள்ளது. இந்தப் புதிய அரசு-மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இதைப் பற்றி முறையிட்டேன். இப்போது வழங்கப்படுகின்ற ரேஷன் கார்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, ஆகவே, மண்ணெண்ணெயின் ஒதுக்கீட்டையும் அதிகரிக்க வேண்டும்

என்று அவரிடம் கேட்டுக்கொண்டேன். அதன் பிறகு இப்போது ஒரு முறை சிறப்பு ஒதுக்கீடாக 17,000 கிலோ லிட்டர் கொடுத்திருக்கிறார்கள். ஒரேயொரு முறை, one time allotment -ஆக 17,000 கிலோ லிட்டர் கொடுத்திருக்கிறார்கள். இதனை மாநில அரசு மார்ச் மாதத்திற்கு 6,500 கிலோ லிட்டராகவும், ஏப்ரல் மாதத்திற்கு 6,500 கிலோ லிட்டராகவும் மீதமுள்ள 4,000 கிலோ லிட்டரை மே மாதத்திலும் வழங்கவுள்ளது. நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியபடி இது ஒருமுறை ஒதுக்கீடாகும், சிறப்பு ஒதுக்கீடாகும். மாதா மாதம் வழங்கப்படுகின்ற ஒதுக்கீட்டை அவர்கள் அதிகரிக்கவில்லை. இந்த ஒருமுறை ஒதுக்கீடு முடிந்த பின்னர் பழையபடி மாதத்திற்கு 58,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் என்ற அளவிற்கே போய்விடும். ஆகவே, தற்போது இந்த மாநிலத்தின் தேவை 1,00,200 கிலோ லிட்டர் ஆகும். அதைத்தான் திரும்பத் திரும்ப மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்னும் அந்த ஒதுக்கீட்டை மத்திய அரசு தரவில்லை.

பிற்பகல் 12-55

சுனாமி நிவாரணத்திற்காக மேலும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டோம். இதற்குத் தனியாக மத்திய அரசு 17,000 கிலோ லிட்டர் ஒதுக்கியிருக்கிறது. இதன்மூலம் பெறப்பட்ட இந்த 17,000 கிலோ லிட்டரில் ஜனவரி மாதத்தில் மாவட்டங்களுக்கு 3,636 கிலோ லிட்டரும், பிப்ரவரி மாதத்தில் 3,840 கிலோ லிட்டரும் வழங்கப்பட்டது. இப்போது மார்ச் மாதத்தில் 852 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. அதன்பிறகு மீதம் இருக்கின்ற அளவு 8,672 கிலோ லிட்டர். ஆகவே, மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மாநிலத்தின் தேவை ஒரு மாதத்திற்கு 1 லட்சத்து 200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஆகும். ஆனால், மத்திய அரசு வழங்கிக்கொண்டிருப்பதோ 58,000 கிலோ லிட்டர் தான். இப்போது ஒருமுறை சிறப்பு ஒதுக்கீடாக 17,000 கிலோ லிட்டர் தந்திருக்கிறார்கள். சுனாமி நிவாரணத்திற்கென தனியாக 17,000 கிலோ லிட்டர் தந்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. எனவே, வரக்கூடிய மண்ணெண்ணெயை நீங்கள் பிரித்து அனைத்து கார்டுகளுக்கும் சமமாக வழங்குகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்க



வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கூட்டுறவுத் தேர்தலைப் பொறுத்தவரை 2001-லிருந்து நாங்கள் நடத்துவோம் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப் பார்த்தாலும் மத்திய அரசு மாதா மாதம் வழங்குகின்ற இந்த 58,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் போதாது. ஆகவே, இரண்டில் ஒன்று நடக்க வேண்டும். ஒன்று, மத்திய அரசு ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும். இல்லையேல் மாநில அரசே மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்ளலாம் என்ற அதிகாரத்தையாவது கொடுக்க வேண்டும்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தல் என்பது 2001 ஆம் ஆண்டிலேயே நடத்துவோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரை நடத்தவில்லை. எனவே, இதற்காக ஒரு தனி தேர்தல் ஆணையத்தை அமைத்து, நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தமிழகம் முழுவதும் இன்றைக்கு அனைத்து ஊராட்சிகளிலும் பெண்கள் சுகாதாரக் கழிப்பிடம் கட்டப்பட்டு சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. நான் சென்ற வருடமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். நீங்கள் பெண்களுக்காக சுகாதாரக் கழிப்பிடம் கட்டினீர்கள், அதேபோல ஆண்களுக்கும் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருந்தேன். எனவே, அதை நீங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 5 சுகாதாரக் கழிப்பிடமாவது அரசு நிதியில் கட்டித்தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிருக்கான இத்தகைய கழிப்பிட வசதி, கட்டி முடித்து அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்து விட்டதால், ஆண்களுக்கும் அங்கே கழிப்பறை கட்டுகின்ற திட்டம் ஏற்கெனவே துவங்கப்பட்டு விட்டது. படிப்படியாக பிற மாவட்டங்களுக்கும் இது விரிவாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ். வாக்கியத்தை நிறைவு பண்ணுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஒரே ஒரு நிமிடம். நமது கிராமம் என்கின்ற திட்டம். இந்த நமது கிராமத் திட்டம்..

**மாண்புமிகு பே ரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு) மற்ற நேரங்களில் பேசுங்கள். நேரம் இல்லை. இன்னும் 3 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** ஒரே ஒரு நிமிடம். நமது கிராமத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 15 லட்ச ரூபாய் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து எடுக்கப்படுகிறது. ஆனால், அதற்கு தேர்வு செய்கின்ற பணிகளுக்குக் கூட நம் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே ஆலோசனை கேட்பதில்லை. எனவே, அதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்த அளவு பேச வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை நான் முன்வைக்கிறேன். உணவு மானியம் சம்பந்தப்பட்ட வரைக்கும் கொள்கை விளக்கக் குறிப்பிலே இணைப்பு 3-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 1,240 கோடி ரூபாயும், 2002-2003-ல் அதே 1,240 கோடி ரூபாய் அளவிலும், 2003-2004-ல் 800 கோடி ரூபாயும், 2004-2005-ல் சென்ற ஆண்டு 835 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்காகவே நிதிநெருக்கடியிலும் கூட இந்தச் செலவை அரசு மேற்கொண்டு வருகிறது. உணவு மானியத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கடந்த 5 ஆண்டுகளில் கடும் நிதி நெருக்கடி தொடக்கத்திலே இருந்தபோது 1,240 கோடி ரூபாயை நாம் உணவு மானியத்திற்காக ஒதுக்கியிருந்தோம். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை சீராகிவிட்டதாகவும், அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் பெருமைபடச் சொன்னார்கள். கடும் நிதி நெருக்கடி இருந்த காலத்திலே 1,240 கோடி ரூபாயை ஒதுக்கிய நம்முடைய அரசு,



நிதி நெருக்கடியைச் சமாளித்து, சீரடைந்திருக்கும் இந்த ஆண்டில் 1,000 கோடி ரூபாயை உணவு மானியமாக ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பது குறைவான அளவு என்பது என்னுடைய கருத்து.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புதிய உணவுக் கொள்கைத் திட்டத்தின்படி மத்திய அரசிலிருந்து நாம் நேரடியாக தேவையான அரிசியை தமிழகத்தினுடைய பொது விநியோகத் திட்டத்திற்குப் பெறுகிறோம்.

முன்பு மாநில அரசே கொள்முதல் செய்து, அதன்மூலம் ஒரு கிலோ அரிசி 12 ரூபாய்க்கு என்று கொள்முதல் செய்யப்பட்டு, நியாயவிலைக் கடைகளிலே 3 ரூபாய் 50 பைசாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. இப்போது மத்தியத் தொகுப்பிலிருந்து 8 ரூபாய் 60 பைசாவிற்கு ஒரு கிலோ அரிசியை வாங்கி 3 ரூபாய் 50 பைசாவிற்கு விற்பனை செய்வதனால் தமிழக அரசுக்கு மானியச் செலவு குறைவாக ஆகியிருக்கிறது என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விநியோகத் திட்டம் நடைமுறையில் வெற்றிகரமாக அமலாக்கப்பட வேண்டும் என்பதற்காக தொடர்ச்சியாக ஆலோசனைகளை கடந்த 3, 4 ஆண்டுகளில் நாங்களும் சொல்லி வந்திருக்கிறோம், வேறு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றை அரசு குறைந்தபட்ச ஆய்வுக்காவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மண்ணெண்ணெய் சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கினார்கள். தமிழ்நாட்டிற்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவை மத்திய அரசு உயர்த்தித் தரவேண்டும் அல்லது மாநில அரசே அதைக் கொள்முதல் செய்துகொள்ள வேண்டும் என்கிற கருத்தைச் சொன்னார்கள். இந்தக் கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசு, மாநிலத்திற்குத் தேவையான, தமிழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணெயின் அளவை உயர்த்தித் தரவேண்டும் என்பதை எங்கள் கட்சியின் சார்பில் நான் அழுத்தமாக வலியுறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஆதரவை வாபஸ் என்று சொல்லக்கூடாது. (சிரிப்பு)

அடுத்து, இந்தக் கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக தொடர்ந்து நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 4 வருட காலமாக அமைச்சர்கள் தொடர்ச்சியாக வழக்குமன்றத்தில் இருப்பதை பதிலாகச் சொல்லி வருகிறார்கள். அது நடத்தப்படாவிட்டால் நியாயபூர்வமாக, ஜனநாயகபூர்வமாக இந்தத் துறை செயல்படுவதிலே இருக்கும் பலவீனம் நீடிக்கும் என்பதைச் சொல்கிறோம். ஆகவே, உடனடியாக அதை நடத்துகிற பொறுப்பை ஏற்க வேண்டும். நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கை முடிவிற்குக் கொண்டுவருவதற்கும், வேகப்படுத்துவதற்கும் அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திய தனி தேர்தல் ஆணையம் இதற்காக உருவாக்க வேண்டும் என்பதையும், கூட்டுறவுகளில் உண்மையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் கள்ள ஓட்டுகள் தடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதில் உறுப்பினரானால் நிறைய கொள்ளைகள் அடிக்க முடியும் என்பதற்காகவே கள்ள உறுப்பினர்கள் சேருகிறார்கள். ஆகவே, புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை நானும் வலியுறுத்துகிறேன். இதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் தொகுப்புரையிலே சொல்ல வேண்டும். (குறுக்கீடு) போலி உறுப்பினர்களை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேமாதிரி 1991 ஆம் ஆண்டில் மத்திய திட்டக் குழுவால் உருவாக்கப்பட்ட மாதிரி கூட்டுறவுச் சட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்படாமல் உள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கையின்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுச் சட்டத்திற்கு, அதாவது 1983 ஆம் ஆண்டினுடைய கூட்டுறவுச் சட்டத்திற்குத் திருத்தங்கள் மேற்கொள்ள குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், குழுவினுடைய அறிக்கை கிடைத்தவுடன் திருத்தங்கள் பரிசீலிக்கப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை அரசுக்குச் சமர்ப்பித்தாகிவிட்டது. ஆனால், உரிய நடவடிக்கை இப்போதுவரை இல்லை என்பதை நான் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தில் மாநில அரசின் ஈடுபாடு குறையாத வகையில், கூட்டுறவுச் சட்டத் திருத்தங்கள் மேற்கொண்டு, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்திட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.



பிற்பகல் 1-05

அதேமாதிரி ஊழியர்களுடைய பணி நிரந்தரம் சம்பந்தமான பிரச்சினையில், 480 நாட்கள் பணியாற்றிய அனைத்து ஊழியர்களையும் பணி நிரந்தரப்படுத்திட, 12-3-2001 அன்று அரசாணை எண் 86-ஐ கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிட்டது. அரசாணையினை இப்போதுவரை அமல்படுத்தாமல், ஊழியர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக, சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் உயர்நீதிமன்றம் சென்றனர். அந்த வழக்கில் உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை 24-10-2002-ல் வெளியிட்டிருக்கிறது. பணிவரன்முறைப்படுத்தாத ஊழியர்கள் எண்ணிக்கை 23,728 பேர் என நீதிமன்றத் தீர்ப்புரையிலே சொல்லப்பட்டுள்ளது. தீர்ப்புரையிலே எந்தச் சங்கத்தில் பணிநிலைத்திறன் நிர்ணயிக்கப்படாமல் உள்ளதோ, அந்தச் சங்கத்தில் மட்டுமே கூட்டுறவுச் சட்ட விதி எண் 149/1-ன்கீழ் பணிநிலைத்திறன் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிநிலைத்திறன் நிர்ணயிக்கும் பணி தீர்ப்புரைக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டும், அந்தப் பணிநிலைத்திறன் ஊதியம் நிர்ணயிக்கும்போது அரசால் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய அரசாணைகளை கறாராக அமலாக்க வேண்டுமென்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து, ஏற்கெனவே நான் சொன்னது மாதிரி, உயர் நீதிமன்றம் சென்றதன் விளைவாக, உயர் நீதிமன்ற Division Bench, மீண்டும் 8-1-2003 அன்று Writ Petition 44744-ல் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறது. மீண்டும் பணிநிலைத்திறன், ஊதியம் உள்ளிட்டவைகளை நிர்ணயிக்கும்போது, அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பணிநிலைத்திறன் உள்ளிட்டவைகளில் திருத்தங்கள் மேற்கொள்கிறபோது, தொழிற்சங்கங்களோடு கலந்தாலோசிக்க வேண்டுமென்று, 29-12-2002 அன்று உயர் நீதிமன்ற Division Bench தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால், கூட்டுறவுத் துறை உயர் நீதிமன்ற Division Bench-ன் தீர்ப்புரைகளை மீறி, அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பணிநிலைத்திறன் நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதுமட்டுமல்ல, அரசாணைகளை மீறி அதிகாரிகள் இதில் தன்னிச்சையாக நடந்துகொண்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மூன்று நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். அடுத்ததாக, தமிழ்நாட்டில் இந்தச் செயல்பாட்டை மேம்படுத்துவது சம்பந்தமாக, அதாவது, கூட்டுறவுத் துறையின் செயல்பாட்டை மேம்படுத்துவது சம்பந்தமாக, கேரள மாநில சங்கங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து, பதிவாளர் அலுவலகக் கூடுதல் பதிவாளர் (கடன்) தலைமையில் ஒரு கமிட்டி 27 வகையான பரிந்துரைகளை கடந்த 2002 அக்டோபர் மாதம் நம்முடைய அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறது. ஆனால், இன்றுவரை அந்தப் பரிந்துரைகள் வெளியிடப்படவும் இல்லை, நிறைவேற்றப்படவும் இல்லை. 27 பரிந்துரைகள், அக்டோபர் மாதம் 2002 அன்று அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு முக்கியமான விஷயங்கள்.

ஒன்று, நிரந்தர வைப்புகளை சங்கங்கள் பெறுவதற்கும், கடன் நிலுவைக்கும் தொடர்புபடுத்தி நிபந்தனை விதிக்கக்கூடாது. இரண்டு, தமிழ்நாட்டில் பிரதம சங்கங்களிடமிருந்து 0.5 விகிதத்தில் வசூலித்த தொகை நிரந்தர வைப்பு உத்தரவாதக் கணக்கில் மத்திய வங்கிகளிடம் ரூ35 கோடி உள்ளது. நிரந்தர வைப்பு ஒரு இலட்சத்திற்கு 30 ஆயிரம் வரை மத்திய வங்கிகள் உத்தரவாதம் அளித்துள்ளன. பாதிப்புக்குள்ளான வைப்பீட்டுதாரர்களுக்கு, டெபாசிட்தாரர்களுக்கு 30 ஆயிரம் வீதம், இந்த 35 கோடி ரூபாய் குவியலிலிருந்து நிவாரணம் வழங்கி வைப்பீட்டுதாரர்களின் எதிர்பார்ப்பை ஓரளவு ஈடுகட்டலாம் என்று அந்தப் பரிந்துரையில் சொல்லியிருக்கிறது.

இந்த இடத்திலே என்ன வேண்டுகோள் என்றால், 4 வருடங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வையம்பாளையம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி. பெரிய தொகை ஒன்றும் அல்ல; ஒரு கோடி ரூபாய்க்குள்ளேதான் இருக்கும்; 77 இலட்சம் ரூபாய். அந்த டெபாசிட்தாரர்களுடைய பணத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால், அரசும், அமைச்சர்களும் தொடர்ந்து நான்கு ஆண்டு காலமாக என்ன பதில் சொல்கிறார்கள் என்றால், அங்கு முறைகேடு நடந்திருக்கிறது; உண்மை. ஊழல் நடந்திருக்கிறது; உண்மை. கடந்த கால ஆட்சியிலே நடந்திருக்கிறது; உண்மை. நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்; எடுங்கள். என்னுடைய கேள்வி, அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்குமா, இல்லையா? நான் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வைப்புநிதியைக் கொடுக்கச் சொல்கிறேன், டெபாசிட் முதிர்வு



அடைந்துவிட்டது; பணம் கிடைக்கவில்லை; அது கிடைக்குமா, இல்லையா? அதேபோல, அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கார்டிலே மத்தியக் கூட்டுறவு வங்கிகள்தான்—விவசாயிகளோ, தொழிலாளிகளோ, உழைப்பாளிகளோ பணம் கட்டி டெபாசிட் பண்ணினார்கள் என்று சொன்னால் அந்தப் பணத்திற்கு வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மட்டுமல்ல, மத்தியக் கூட்டுறவு வங்கியும் பொறுப்பு. ஏன் மத்தியக் கூட்டுறவு வங்கி இந்தப் பணத்தைக் கொடுக்கக்கூடாது?

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாகும். இந்த வங்கியில் டெபாசிட் செய்த டெபாசிட்தாரர்களுக்கு சுமார் ஒரு கோடி அளவிற்கு பணம் திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளதாகக் குறிப்பிலே உள்ளது. இதுகுறித்து வங்கியினுடைய தலைவர் திரு. நாராயணசாமி, செயலாளர், திரு. ரமேஷ், திருமதி தனலட்சுமி, எழுத்தர், திரு. பேச்சியனன், எழுத்தர், திரு. மகேந்திரன், எழுத்தர் ஆகியோர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தண்டத் தீர்வை ஆணை எண் 6/2000, நாள் 31-8-2000 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் 4 சங்கப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்ற எண் 16/2000, நாள் 16-11-2001, 110 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. இவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும், டெபாசிட் எந்தக் காலத்திலே பெறப்பட்டது என்பதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விரைவில் உரிய டெபாசிட் வழங்கப்படும். இத்தகைய பணியிலே ஈடுபட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று, நமது மதுரை மாநகரிலே ஒரு கூட்டுறவு வங்கியில், கடந்த காலத்திலே பல்வேறு தவறுகள், ஊழல்கள் நடந்து அங்கு இருக்கின்ற

ஏழையெளிய மக்கள், தாங்கள் டெபாசிட்டாகச் செலுத்திய பணத்தைப் பெறுவதற்கு மிகுந்த சிரமத்தில் இருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு வங்கியும் கலைக்கப்பட்டிருக்கிறது. அரசு அதை எடுத்துக்கொண்டிருக்கிறது. அங்கு வைப்புத்தொகை வைத்தவர்களுக்கும் அரசு கருணை உள்ளத்தோடு அவர்கள் தொகையினைத் திருப்பித் தருவதற்கு முன்வருமா என்று தங்கள் மூலமாக அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரிலே 100 ஆண்டுகால வரலாறு படைத்த urban வங்கியானது செயல்பட்டு வந்தது. அந்த வங்கியானது 1906 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1996-க்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு ஏற்பட்டதற்குப் பிறகு ஏற்பட்ட சுனாமியின் காரணமாக, சுமார் 46 கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட டெபாசிட் பணத்தை முறையற்ற வகையிலே கடன் விநியோகித்ததன் மூலமாக, அந்த வங்கியானது பெருத்த நஷ்டத்திற்குட்பட்டு 2000 ஆண்டு ரிசர்வ் வங்கியால் கலைக்கப்படுவதற்கான நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டதற்குப் பிறகும் தொடர்ந்து முறையற்ற வகையில் கடன் வழங்கி, அந்த வங்கியானது இன்றைக்கு திவாலாகிப் போய்விட்ட நிலையிலே டெபாசிட்தாரர்கள், ஏழையெளிய மக்கள் சுமார் 30,000-க்கும் மேற்பட்டவர்கள்—ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம் என்று சொல்வார்கள். ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள், ஏழைத் தாய்மார்கள் தங்கள் வாழ்க்கைப் பாதுகாப்புக்காகச் சேர்த்து வைத்திருந்த டெபாசிட் பணம் 46 கோடி ரூபாய். அந்தக் காலத்திலே, கடந்த ஆட்சியாளர்களுடைய காலத்திலே நிர்வாகக் குழுவின் திறமையின்மை காரணத்தினாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தால் தவறான வகையிலே 35 பேர் பணியாற்ற வேண்டிய வங்கியிலே ஒரே சமயத்தில் 265 பேரை வேலைக்கு எடுத்து, chair, table போட்டு உட்காருவதற்குக்கூட இடமில்லாமல், ஒரு குறிப்பிட்ட முக்கியப் பிரமுகர் சிபாரிசின் அடிப்படையிலே, அந்த பகுதியிலே இருக்கிற ஒரு முக்கியமான பிரமுகர் சிபாரிசின் அடிப்படையிலே 260 பேரைப் புதிதாக வேலைக்கு சேர்த்ததன் அடிப்படையிலும், முறையற்ற கடன்களை விநியோகித்ததன் அடிப்படையிலும் இன்றைக்கு 30,000-க்கும் மேற்பட்ட டெபாசிட் போட்ட மக்கள் தெருக்களில் அலைந்துகொண்டிருந்த நிலைமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, உரிய முறையில் டெபாசிட் செய்த ஏழையெளிய மக்களுக்கு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு டெபாசிட்



தொகையை விரைவில் திருப்பிக் கொடுப்பதற்கான முயற்சியில் வேகமாக ஈடுபட்டு வருகிறது என்ற நல்ல தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இரு கோடுகள்' என்கிற சினிமாவிலே கலெக்டராக சௌகார் ஜானகி நடிப்பார்கள். ஜெமினி கணேசன் கிளார்க்காக இருப்பார்கள். அதிலே ஒரு dialogue வரும். நான் life-ஐப் பற்றிப் பேசுகிறேன், நீங்கள் file-ஐப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று சோகமாக சௌகார் ஜானகி சொல்வார்கள். அதேமாதிரி, நான் பாதிக்கப்பட்ட வையம்பாளையம் சம்பந்தமானப் பிரச்சினை பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பதிலே வரமாட்டேன் என்கிறது. நடவடிக்கையை நீங்கள் எடுங்கள். தி.மு.க.காரர்கள் பண்ணினால் என்ன? யார் பண்ணினாலும்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நீங்களே உங்களுடைய கேள்வியிலே பதிலைச் சொல்லிவிட்டு—2003 ஆம் ஆண்டு இதய தெய்வம் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு இப்படிப்பட்ட டெபாசிட்தாரர்களுக்கு குறைந்தது 30,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு—அதற்காக விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தனிக் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இந்தப் பதிலோடு முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். நுகர்வோர் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளிலே, இப்போது கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய சிந்தாமணி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், பேச்சை முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்த ஒரு தகவலைச் சொல்லி முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு தகவல். முக்கியமானது. 111 பேரை voluntary retirement-லே வெளியிலே அனுப்பிவிட்டோம். பதினான்கு, பதினைந்து

மாதங்களாக தொடர்ந்து சம்பளம் கொடுக்காத நிலை சிந்தாமணியிலே இருக்கிறது, வளர்மதியிலும், திருப்பூரிலேயும் இருக்கின்றன அதேமாதிரி வேலூரில் கற்பகத்திலும் இருக்கிறது.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏதோ புதிதாக இப்பொழுது இந்த ஆட்சியிலே ஏற்பட்டுவிட்ட ஒரு விவகாரத்தைப்போல அவர் குறிப்பிடுகிறார். அதைச் சொல்லுகிறபோது, அது எப்பொழுது அந்த நிலையை அடைந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். 2001 ஆம் ஆண்டுக்கு முன்பா அல்லது 2001 ஆம் ஆண்டுக்குப் பின்பா என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட வேண்டும். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்பட்ட குழிகளையெல்லாம் ஒரே சமயத்திலே, ஒரே நேரத்திலே மூடுவதற்கு முடியாது. இப்பொழுது வேலூரிலே இருக்கிற கற்பகம்—வேலூரிலே இருக்கிற wholesale stores - ஐப் பொறுத்தவரையிலும் நல்லமுறையாக லாபகரமாக நடப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, சென்ற மாதம் முதல் இலாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் அப்பொழுது பெற்ற டெபாசிட் தொகையை திருப்பிக் கொடுப்பது என்பது ஒரே சமயத்தில் இயலாத விஷயம். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேச்சை முடித்துவிடுங்கள். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. கே. சி. கருணாகரன்:** டெபாசிட் குறித்துச் சொல்ல வேண்டும். சிந்தாமணியில் சம்பளம் 14, 15 மாதங்கள் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதையும்—Provident Fund பணமும்—V.R.S.-லே வெளிவந்தவர்களுக்கு Provident Fund பணத்தை சிந்தாமணியிலிருந்து கொடுக்காமல் இருக்கிறார்கள்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகள்மீது உணவுக்காக காத்திருக்கிற நேரத்திலே என்னைப் பேச அழைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான மானியக் கோரிக்கை. கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு நல்ல கருத்துகளும் இங்கே பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனாலும் கூட்டுறவுத் துறை என்பது நலிந்துகொண்டே இருக்கிறது. இது இந்திய அளவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒரு நிகழ்வாக இருக்கிறது. அது தமிழகத்திலேயும் பாதித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, அப்படிப்பட்ட பாதிப்புகள் நடைபெறுகிற அந்தச் சூழலில், உலகமயமாக்கல் காரணத்தினாலும் அது பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்தக் கூட்டுறவுத் துறை பாதுகாக்கப்பட வேண்டுமானால், மத்திய அரசும் சரி, நமது மாநில அரசும் சரி, புதிய வகையிலே சிந்தனை செய்வதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் நலிந்துகொண்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களை, நிறுவனங்களை பாதுகாக்க முடியாத நிலைக்கு ஆளாகுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் துறையை வேறு பல காரியங்களிலே ஈடுபடச் செய்வதற்குரிய முயற்சி எடுத்தால் கூட்டுறவுத் துறையைப் பாதுகாக்கலாம் என்ற ஆலோசனை பல்வேறு கருத்துகளாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அந்த முயற்சி எடுப்பதிலேயும், சுற்றுலாத் துறையைப் பயன்படுத்துவதற்கான முயற்சியிலேயும், மருத்துவம், இன்சூரன்ஸ் போன்ற துறைகளிலேயும் நமது கூட்டுறவு அமைப்புகளைப் பயன்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டால் நலிந்துகொண்டிருக்கிற அந்தக் கூட்டுறவு நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று அனுபவரீதியாக சொல்லப்படுகிறது. ஆகவே, இதை நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய கூட்டுறவுத் துறையிலே தொடக்க வேளாண்மை வங்கிகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. அதிலும் குறிப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற கடன், அதனுடைய சலுகைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிவாரணம் பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டு பாராட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதே நிலைமையில் மத்திய அரசாங்கத்தால்

அறிவிக்கப்பட்ட அந்தக் கொள்கை, நபார்டு வங்கி அறிவித்த அந்தக் கொள்கையின் அடிப்படையிலே நமது மாநில அரசு எடுத்திருக்கிற அந்த முடிவு இருக்கிறதே, ஐந்தாண்டு கால கடன் திட்டம் இந்தத் திட்டத்தால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிற அந்தக் கடன் தொகை என்பது அப்படியே அது நிலுவையிலே இருந்துபோகக் கூடியதாக இருக்கிறது. காரணம், இரண்டு ஆண்டுகள் கட்ட வேண்டியதில்லை. பிறகு மூன்றாண்டுகளிலே வட்டியும் அசலுமாகச் சேர்த்து கட்ட வேண்டும். ஆனால், கட்டுகிற நிலையில் விவசாயிகள் இருக்கிறார்களா என்று ஆய்ந்து பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆனால், இது தொடர்ந்து கட்ட இயலாத நிலைக்கு ஆளாகிறது. இது யதார்த்தமான உண்மை. இந்த நிலையை மாற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமானால் மத்திய அரசு இதிலே கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து இந்தக் கடன் நிலுவையிலே இருக்கிற தொகைகளை சமமாகவோ அல்லது மத்திய அரசினுடைய கூடுதல் நிதியைப் பெற்றோ பகிர்ந்து, தள்ளுபடி செய்வதற்கான முயற்சி எடுத்தாலொழிய, விவசாயிகளை இந்தக் கடன் சுமையிலிருந்து மீளச் செய்யவே முடியாது என்பதுதான்.....

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும் அல்லது கடனை ஒத்திவைக்க வேண்டுமென்றாலும், இதில் எதைச் செய்வதாக இருந்தாலும் நபார்டு வங்கி அனுமதி கொடுத்தால் மட்டும்தான் இன்றைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் அதைச் செயல்படுத்த முடியும் என்கின்ற கருத்தைச் சொல்லி, இதற்கான கோரிக்கையை நாங்கள் பட்ஜெட் உரையிலேகூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நபார்டு வங்கியானது போதுமான அளவிற்கு பணத்தை ஒதுக்கிக் கொடுத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்வதற்கான ஏற்பாட்டை மத்திய அரசு செய்ய வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதை மத்தியிலே வலியுறுத்தி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கம் வகிக்கின்ற கட்சி அதைப் பெற்றுத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



பிற்பகல் 1-20

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்ந்து சொல்லப்படுகிறது. மத்திய ஆட்சியிலேயிருந்து பெறவேண்டும் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆகவே, மத்திய ஆட்சியிலேயிருந்து பெறுவதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்கிறபோது, நாங்களும் உங்களோடு சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறோம். ஆகவே, இதிலே என்ன விஷயம் என்றால், மத்திய அரசாங்கத்திலே, அங்கே இப்போது நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால், நான் அங்கே கேட்பேன். இங்கே உங்கள் அவையில், நமது மாநில முதலமைச்சருடைய தலைமையின்கீழ் நாங்கள் உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால், முதலமைச்சரிடத்திலே கேட்கிறோம், உங்களிடத்திலே கேட்கிறோம். ஆகவே, இந்த விஷயங்கள்மீது, மத்திய அரசை நீங்கள் கேட்கிறபோது, நாங்களும் கேட்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், டெல்லியிலே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து, அவர்கள் மூலமாகப் பெற்றுத் தரலாம். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு உதவி இல்லாமலேயே நாங்கள் செய்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மட்டும் நபார்டை இழுத்துக்கொண்டிருக்கிறார்களே, ஏன்? நபார்டை மீறியே நாங்கள் எல்லாம் வட்டியைக் குறைத்திருக்கிறோம் என்று முதலிலேயே பலமுறை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இதே அவையிலே பதிவாகியிருக்கிறது. இப்போது நபார்டைக் காட்டி ஏன் evade பண்ண வேண்டும்? ஏன் தப்பிக்கிறீர்கள் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நான் எப்போதும் அவ்வாறு தவறான தகவலை இந்த அவைக்குக் கொடுத்ததில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, நான் பேசிவிடுகிறேன். இதிலே குறுக்கீடுகள் வேண்டாம். இதிலே நபார்டு வங்கியைப்

வாய்ப்புகள் இருக்கின்றன. இதில் உறுப்பினர் சேர்க்கை பிரச்சினையைப் பற்றி இங்கே சொன்னார்கள். இதிலே போலி உறுப்பினர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்கின்ற விவாதம் வருகின்றது. அண்டை மாநிலமாக இருக்கிற ஆந்திர மாநிலத்தில்.. *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சரி. அண்டை மாநிலமாக இருக்கிற ஆந்திர மாநிலத்திலே மூன்று ஆண்டுகள் விவசாயக் கடன்பட்டு இருக்கிற விவசாயிகளாக இருந்தால், அவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். ஆகவே, ஏதாவது ஒரு அளவுகோலின் அடிப்படையிலே விவசாயிகளை சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேர்த்து தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சிகளை எடுத்தால், இந்த முறைகேடுகளைப் போக்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, குடும்ப அட்டை பிரச்சினையைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. இதிலே கால அவகாசம் இரண்டாவது முறையும் கொடுக்கப்பட்டு இப்போது முடிந்து போய்விட்ட நிலையிலே இருக்கிறது. அதனால் நான் பணிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, மீண்டும் கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் விடுபட்டுப்போன குடும்ப அட்டைதாரர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். கூப்பன் பெறாதவர்கள் இருக்கிறார்கள். தொலைந்துபோய் விட்டது என்று காரணம் சொல்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி பரிசீலிப்பதற்கான முயற்சியை எடுத்து கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்பதோடு, ஒரு ஆலோசனையாக நான் சொல்ல விரும்புவது, தேர்தல் வாக்காளர்களைச் சேர்ப்பதற்குரிய முகாம் நடத்துவது போல, குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கிராமவாரியாக ஒரு முகாமை நடத்தி, அதிலே அந்தக் கருத்துகளைக் கேட்டறிந்து, குடும்ப அட்டைகளைப் புதுப்பிப்பதற்குரிய முயற்சிகளை எடுத்தால், விடுபடாமலும், சரியாகவும், முறைகேடுகள் இல்லாமலும் குடும்ப அட்டைகளை வழங்குவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும் என்கின்ற காரணத்தினாலே வாக்காளர் சேர்ப்பு முகாம் போல



குடும்ப அட்டைதாரர்களை அழைத்து முகாம் நடத்தி அதிலே இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்குரிய முயற்சியை நமது அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள், திரு. சிவபுண்ணியம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். அதேபோல பொது விநியோகம் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. அதிலே குறிப்பாக நெல் கொள்முதலைப் பற்றி குறிப்பிட்டு இங்கே சொல்லப்பட்டது. நான் பணிவாகக் கேட்டுக்கொள்வது, மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜென்டாக நம்முடைய மாநில அரசு நெல் கொள்முதல் செய்வதை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தியதோடு நிறுத்திவிட வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். நம்முடைய தமிழ்நாடு அரசுதான் கொள்முதல் செய்ய வேண்டும். அதன் மூலமாகத்தான் தமிழக விவசாயிகள் பயன்பெற முடியும். அதன் மூலமாகத்தான் சலுகைகளைப் பெற முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜென்டாக நாம் செயல்படக்கூடாது. மாநில அரசே கொள்முதல் கொள்கையை கைவிடாமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு) போதும். மற்றதையெல்லாம் மற்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரேயொரு விஷயம். ஒரேயொரு நிமிடம். குறிப்பாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட விஷயம் என்கின்ற முறையிலே ஒன்று. தமிழ்நாடு மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன் மூலமாக, மன்னார்குடிக்கு அருகிலே இருக்கிற பாமணியில் உரமணி ஆலை ஒன்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த உரம் தரமானதாக தமிழகத்தில் விவசாயிகளால் வரவேற்கப்படக்கூடியது. ஆனால், இந்த உர உற்பத்தியை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே விற்பனை செய்ய வேண்டுமென்கின்ற சட்டத்தின் காரணத்தினாலே, அதை வெளியிலே விற்க முடியாத நிலையில் சந்தையிலே போட்டி போட முடியவில்லை. ஆகவே, அந்த உர விற்பனை நிலையங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும். அந்த உர உற்பத்தி நிலையம் சீர்கேடு அடைந்துகொண்டிருக்கிறது. அது மூடுகிற நிலையை நோக்கிச் செல்வதாக அச்சப்படுகிறார்கள்..

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமணி உரத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்கிற உரமானது, இப்போது கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்வதற்கே போதாத அளவிற்கு இருக்கிறது. அந்த அளவிற்கு அந்த உரத்திற்கு demand இருக்கிறது. கடந்த 6 மாத காலமாக ஒரு shift ஓடிக்கொண்டிருந்த அந்தத் தொழிற்சாலை, இப்போது இரண்டு shift ஓடிக்கொண்டிருக்கிறது. விரைவில் மூன்று shift-ம் ஓடத்தக்க அளவிற்கு நல்ல முன்னேற்றகரமாகத்தான் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பயிர் insurance கொள்கை பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் insurance premium கட்டியவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு.(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் பேசுங்கள். திரு. அரசன். (குறுக்கீடு) மற்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுங்கள். வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு நிமிடம். இந்தப் பயிர் insurance கொள்கையைப் பொறுத்தவரையிலும், நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் குழு முறையிலான insurance திட்டத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சியை எடுத்தால்தான் எல்லா விவசாயிகளுக்கும் அந்த insurance திட்டத்தைப் பயன்படுத்திச் செய்ய முடியும். ஆகவே, இதையும் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிது நேரத்திற்கு முன்னாலே நான் தேநீர் அருந்திக்கொண்டிருக்கின்றபோது, ஒரு சகோதர நிருபர் என்னை, பா.ஜ.க. சார்பாகப் பேசப் போகிறீர்களா அல்லது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பாக பேசப் போகிறீர்களா என்று கேட்டார். என்னுடைய பேச்சிலேயே எப்படி என்று அவர் ஊகித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கே சொல்லிவிட்டீர்களே, தான் ஆடாவிட்டாலும், தன் தசையாடும் என்று. ஆனால், கே.கே.எஸ்.எஸ்.ஆர். போன்றவர்களுக்கெல்லாம் ஆடவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம். (சிரிப்பு)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்ப் புலவர்கள் இறைவனைப் பற்றிப் பாடுகிறபோது 'தாயினும் சாலப் பரிந்து ஊட்டி என்னை வளர்க்கிற தெய்வமே' என்று ஆண்டவனைப் பற்றிப் பாடுவார்கள். அதைப்போல நம்முடைய கிராமங்களிலே சொல்வார்கள், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று சொல்வார்கள். தாயினும் சாலப் பரிந்து ஊட்டுகிற, தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி வர்க்கத்தினருக்கு, தொழிலாளி வர்க்கத்தினருக்கு மானிய விலையிலே அரிசி வழங்குகிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு முடிவுக்கு வந்துவிட்டீர்கள். (சிரிப்பு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நலிந்து போயிருக்கிற, மெலிந்து போயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே கொஞ்சம் தனி அக்கறை செலுத்த வேண்டும். ஏனென்றால் கூட்டுறவுத் துறை வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாக உள்ள மிக முக்கியமான துறையாகும். நம்முடைய இந்தியாவிலே இருக்கிற விவசாயிகள்மீது, தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள்மீது தனி அக்கறை செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையினாலேதான் அவர்கள் பலன் அடைவார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறை சிறப்பாக நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில், கடுமையான நிதிநிலைமை இருந்த நேரத்தில், விவசாயிகளுக்காக 310 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது கொஞ்சம் நிதி நிலைமை சரியாக இருக்கிறது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இன்னும் கொஞ்சம் இந்த அபராத வட்டி போன்றவற்றைத் தள்ள முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கடந்த 4 ஆண்டுகளில் 3 ஆண்டு காலம் கடுமையான வறட்சி. சென்ற ஆண்டு கடுமையான வெள்ளம். ஆக 4 ஆண்டுகளும் விவசாயிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது சிரமமான காரியம் என்று சொன்னாலும்,. நிதி ஒதுக்குவது கஷ்டமான காரியம் என்று சொன்னாலும், விவசாயிகள்மீது அன்பு செலுத்தி ஏதாவது ஒரு வகையில் விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதைப் பற்றி அனைவரும் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிற காலத்திலே தவறுகள்கூட நடந்திருக்கலாம். நான் இல்லையென்று மறுக்கவில்லை. இன்றைக்கு ஊராட்சி மன்றங்களிலே எல்லாம் தவறு நடக்காமலா இருக்கிறது? தவறுகள் நடக்கின்றன. ஒன்றிரண்டு தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள், அமைச்சர்களாகிய நீங்களெல்லாம் இருக்கிறீர்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டியது என்பது மிக முக்கியமான ஒன்று. அதையும் எடுத்து நடத்துவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். எப்படித்தான் இருந்தாலும், தேர்தல் நடந்து, சபை அமைகிறபோது கூட்டுறவுக்கு தலைவர், இயக்குநர்கள் வருகிறபோது கொஞ்சம் தவறுகள் குறையும். இன்றைக்கு இருப்பதைவிட அன்றைக்குக் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தேர்தலை நடத்துவதற்கு முனைந்து செயலாற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல புதிய குடும்ப அட்டைகள் கொடுப்பதிலே நீங்கள் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறீர்கள். குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு மிக அருமையாக ஆய்வு நடத்தி,



எல்லோரிடத்திலும் படிவங்களைப் பெற்று, அவர்களுக்காக நிறைய புதிய குடும்ப அட்டைகளைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பழைய அட்டைகளைப் புதுப்பித்து இப்பொழுது புதிய குடும்ப அட்டைகளைக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்கள். அதையும் மிகச் செவ்வனே செய்து, விரைவில் புதிய குடும்ப அட்டைகள் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுக்காக ஒரு பணிவான கோரிக்கை. மத்திய அரசாங்கம் கொள்முதல் செய்தாலும், மாநில அரசாங்கம் incentive கொடுத்தாலும் மத்திய அரசாங்கம் வேண்டாம் என்று சொல்லப்போவதில்லை. ஏனென்று சொன்னால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளினுடைய பிரச்சினையைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு நாள் முழுவதும் சொல்லலாம். 10 ஏக்கர் வைத்திருக்கிற ஒரு விவசாயி இன்றைக்கு ஒரு குழந்தையைப் படிக்க வைக்க முடியவில்லை. ஆனால், ஒரு பெட்டிக் கடை வைத்திருப்பவன், தன்னுடைய குழந்தையை தனியார் பள்ளிகளிலே, தனியார் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே படிக்க வைக்கிற அளவுக்கு அவனுக்கு வருமானம் வருகிறது. ஆனால், 10 ஏக்கர் வைத்திருக்கிற ஒரு விவசாயியாலே தன்னுடைய குழந்தையைப் படிக்க வைக்க முடியவில்லை, மிகவும் சிரமப்படுகிறான், கஷ்டப்படுகிறான். ஆகவே, விவசாயிகளுடைய நெல்லுக்கு மத்திய அரசாங்கம் கொள்முதல் செய்யச் சொல்லி, நாம் ஒரு Agency-ஆக இருந்தாலும் incentive கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது. ஆகவே, வருகிற குறுவைப் பயிர் காலத்திலிருந்து incentive கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

இங்கே கேள்வி நேரங்களிலேகூட, இவை பற்றி வருகிறது; பகுதிநேர அங்காடிகள் வேண்டுமென்று நாங்கள் எல்லாம் கேள்விகள் கேட்கிறோம். அதற்கு நீங்கள் ஒரு ஆய்வையேகூட செய்யலாம். அதிலேயும் இப்போது புதிதாக நீங்கள் நிறைய குடும்ப அட்டைகள் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கெனவே என்னுடைய கிராமத்திலே 210 குடும்ப அட்டைகள் இருந்தன. இப்போது ஏறத்தாழ 300 குடும்ப அட்டைகள் வருகின்றன. அது ஒரு பகுதிநேர அங்காடி. ஆனால்,

முழுநேர அங்காடியிலே நிச்சயமாக குடும்ப அட்டைகள் கூடி இருக்கும். அப்படிக் கூடி இருக்கிறபோது, அந்தப் பகுதிக்கு, ஒரு பகுதிநேர அங்காடியாவது திறப்பதற்கு தமிழ்நாடு முழுவதும் ஒரு ஆய்வு செய்து நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அங்காடிகளிலே பணியாற்றுகிற பணியாளர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற சம்பளம் மிகவும் குறைவு. அதிலேயும் தற்காலிகப் பணியாளர்கள் நிறைய பேர் கூட்டுறவுத் துறையிலே இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் நிரந்தரம் செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு--சத்துணவு அமைப்பாளர்களுக்கு, அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு இன்றைக்குக் காலையில்கூட சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அதேபோல--அங்காடிப் பணியாளர்களுக்கும் நீங்கள் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய அறந்தாங்கி நகராட்சியிலே ஒரு பிரச்சினை. 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்காக--நம்முடைய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்கூட கவன ஈர்ப்பாக இங்கே கொண்டு வந்தார்--ஒரே இடத்திலே வைத்துக் கொடுக்கிறார்கள். அறந்தாங்கி நகரத்தினுடைய சுற்றளவு ஏறத்தாழ 4 கிலோ மீட்டர். இது வட பகுதியிலே ஒரு ஓரத்திலே அந்த மண்ணெண்ணெய் விநியோகிக்கிற இடம் இருக்கிறது. ஒரு தாய், மேற்குப் பகுதியிலிருந்து அங்கே வர வேண்டுமென்று சொன்னால் 3 கிலோ மீட்டர் வர வேண்டும். தெற்குப் பகுதியிலிருந்து அங்கே வர வேண்டுமென்று சொன்னால் 3 கிலோ மீட்டர் வர வேண்டும். இப்படி 3 கிலோ மீட்டர் பயணம் செய்து மண்ணெண்ணெய் cane-ஐ கொண்டு வந்தும், அங்கே கொடுக்காமல் திரும்பிச் செல்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. போகிறபோது என்னுடைய அலுவலகம் இருக்கிறது. மண்ணெண்ணெய் cane-உடன் சகோதரிகள் வருவதைப் பார்க்கிறபோது மிகவும் சங்கடமாக இருக்கிறது. இந்தத் திட்டமே ஒரு சரியான திட்டம் அல்ல. இது எந்த நகராட்சியிலே இருந்தாலும் அதை ஆய்வு செய்து ஒவ்வொரு நகராட்சியினுடைய நான்கு பகுதிகளிலேயும் நான்கு கடைகள் இருக்கிற அளவுக்கு—நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால், ஏற்கெனவே அங்காடிகளிலே கொடுத்திருக்கிறோம், கடைகளிலே கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



அன்றைக்கு, நான் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறுக்கிட்டுவிட்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலை அன்றைக்குச் சொல்ல மறந்துவிட்டேன். இன்றைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடினார், மாண்புமிகு ஞானசேகரன் அவர்களே, "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார் என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறார். தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி, கூட்டுறவுத் தேர்தலை நடத்தித் தரவேண்டும், விவசாயிகளுக்கு incentive தர வேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை நாளை காலையிலே வைத்துக்கொள்ளலாம்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (18-3-2005) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, (18-3-2005) வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (18-3-2005) வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-3-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

57. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் முப்பத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

58. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

71. மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)





## இணைப்பு

(285 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### அத்தியாயம்-1

**முன்னுரை**

1.1. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிப்பதால், அவை நமது நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு இன்றியமையா அங்கமாக விளங்குகின்றன. வேளாண்மை, சர்க்கரை, பால்பண்ணை, துணிநூல், மீன்வளம், கைத்தறி, உர விற்பனை, விவசாய இடுபொருள் வழங்குதல், சேமிப்பு மற்றும் விற்பனை ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க அளவில் கூட்டுறவுகள் பங்கு பெறுகின்றன.

1.2. கூட்டுறவுத் துறை ஒரு முக்கியமான துறையாகும். பணியாளர்கள், பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை பெருமளவில் கையாண்டு, பொதுமக்களுடன் அதிக தொடர்புள்ள துறையாகும். நமது மாநிலத்தின் ஊரகக் கடன் வசதித் திட்டத்தின் முதுகெலும்பாக கூட்டுறவுச் சங்கங்கள் விளங்கி வருகின்றன. வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளுக்கு கடன் வசதி அளித்தல், விவசாய இடுபொருட்கள் வழங்குதல், நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல், பொது விநியோகத் திட்டத்தில் நியாயவிலைக் கடைகள்மூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் ஆகியன இவற்றின் முக்கியமான பணிகளாகும். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில், 10,947 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநிலப் பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளான

[2005 மார்ச் 17

வீட்டுவசதி, துணிநூல், பால்பண்ணை மற்றும் மீன்வளத் துறை போன்ற துறைகளின் வளர்ச்சியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அரசு துறைத் தலைவர்கள் இச்சங்கங்களின் பதிவாளர்களாகச் செயல்படுகிறார்கள்.

1.3. பொதுமக்களுக்குப் போதுமான அளவு அரிசி மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வது அரசின் ஒரு முக்கியமான குறிக்கோளாகும். பொது விநியோக முறை இக்குறிக்கோளை எய்துவதற்கு உதவி புரிகிறது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பொதுமக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்தல், அவை தரமுடையதாக இருத்தல், அப்பொருட்கள் ஏழை எளிய மக்கள் பெறமுடிகிற விலை வரம்பிற்குள் அமைத்தல் போன்ற குறிக்கோள்கள் அடங்கிய பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. தற்போது குடும்ப அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் ஆகிய முக்கியப் பணிகளில் இத்துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. பொதுமக்கள் நியாயவிலைக் கடைகள்மூலம் இன்றியமையாப் பொருட்கள் வாங்குவதற்கு குடும்ப அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1.4. தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு இவ்வரசு மேற்கொண்டு வரும் தளராத முயற்சியில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆக்கப்பூர்வமான பங்கினைக் காட்டும் இத்துறையின் செயல்பாடுகள் பின்வரும் பக்கங்களில் விரிவாக விளக்கப்படுகின்றன.



2005 மார்ச் 17]

## அத்தியாயம்-2

### வேளாண்மைக் கடன்

2.1. இந்த ஆண்டு கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட குறியீட்டினை எய்துவதற்கு விடாமுயற்சிகள் மேற்கொண்டுள்ளன. தொடர்ந்து மூன்றாண்டுகளாக ஏற்பட்ட வறட்சிக்குப் பின்னால் தற்போது மாநிலத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகளிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் பயிர்க் கடன்களுக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்குவதற்கு கூட்டுறவு வங்கிகள் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டிய நிலை உருவானது. கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து வறட்சி நிலவி வந்ததால், விவசாயத்தின்மூலம் வருவாய் இல்லாத நிலையில், அவ்வாண்டுகளில் வழங்கப்பட்ட கடன்கள் குறைவாகவே வசூல் செய்யப்பட்டன. மேலும், கூட்டுறவு வங்கிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களை மாற்றியமைக்க வேண்டிய நிலையும் இருந்தது. இந்நிலையில், அரசு கூட்டுறவு வங்கிகளுக்கு அளித்த நிதி உதவியாலும், நிதி ஆதாரங்களை நுட்பத்தோடு கையாண்டதாலும் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளித்த கூடுதல் நிதி உதவியாலும் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு கடன்களை வழங்க முடிந்தது.

### பயிர்க் கடன் வழங்குதல்

2.2. 2004-2005 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் 1,037 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கவேண்டும் என குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.616.59 கோடி மட்டுமே. இதுவரை 4,76,344 விவசாயிகளுக்கு ரூ.955.31 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

[2005 மார்ச் 17

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை அரசு பல்வேறு சலுகைகளை அளித்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1 | வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி (2001) | 310.51 |
| 2 | சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி (2002) | 61.05 |
| 3 | குறுவை 2002-ல் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை மாற்றியமைத்ததற்கான மானியம் | 20.00 |
| 4 | நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு அபராத வட்டி தள்ளுபடி | 1.80 |
| 5 | 2003-2004 ஆம் ஆண்டின் பயிர்க் கடன்களின் மீதான வட்டி தள்ளுபடி | 62.00 |
| 6 | 1999 ஆம் ஆண்டிற்கு முன்பு வழங்கப்பட்டு 31-3-2004 அன்று நிலுவையிலுள்ள மத்தியகால மற்றும் மத்தியகால மாற்றுக் கடன்களை மாற்றியமைத்தது | 68.95 |
| | மொத்தம் : | 524.31 |

**வட்டிவீதம் குறைப்பு மற்றும் பயிர்க் கடன்களை மாற்றியமைத்தல்**

2.3 விவசாயிகள், தற்போது நிலவிவரும் வட்டி வீதத்தில் கடன் பெறுவதை உறுதி செய்வதற்காக பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 12%-லிருந்து 9% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழக அரசுதான் பயிர்க் கடன் மீதான வட்டியை இந்த அளவிற்கு குறைத்துள்ளது. இதே போல இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழக அரசுதான் நபார்டு வங்கியின் விதிமுறைகளின்படி 31-3-2004 அன்று நிலுவையிலிருந்த பயிர்க் கடன் மற்றும் அதன் மீதான வட்டியை, 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றியமைத்து (reschedulement) அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு கடனைக் கட்ட வேண்டியதில்லை என்றும் அடுத்த மூன்று ஆண்டுகளில் அக்கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இதன்மூலமாக



2005 மார்ச் 17]

ரூ.2,598 கோடியளவில் நிலுவையிலிருந்த கடன் மற்றும் வட்டி 5 ஆண்டுக் கடனாக மாற்றியமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**நிதியுதவியை நெறிமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

2.4. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் உரிய முறையில் அவர்களைச் சென்றடையவும், விவசாயிகளுக்கு செய்யும் உதவிகளை வெளிப்படையான முறையில் அறிந்துகொள்வதற்கும் கீழ்க்கண்ட முறைகள் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன:

1. கடன் பெறத் தகுதியுள்ள அனைத்து விவசாயிகளின் பெயர்களடங்கிய பட்டியல் ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலும், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் தகவலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

2. ஒரு முறை சரிக்கட்டுதல் திட்டம். 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டு வட்டி தள்ளுபடி திட்டங்கள், மத்திய காலக் கடனாக மாற்றியமைத்தது. 1999 ஆம் ஆண்டிற்குமுன் வழங்கப்பட்ட கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றியமைத்தது, தள்ளிவைத்தது போன்ற அரசு அறிவித்துள்ள அனைத்து சலுகைகளையும் பெறத் தகுதியுள்ள விவசாயிகளின் பட்டியலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைக்கப்பட்டுள்ளன.

3. கலைக்கப்படும் நிலையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைச் சார்ந்த கடன் பெறத் தகுதியுள்ள விவசாயிகள் அண்மையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சேர்க்கப்பட்டு அவ்விவசாயிகளின் பட்டியல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படுகிறது. இப்பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பத்திரிகைச் செய்திகளிலும் வெளியிடப்படும்.

4. பொதுவாக நிதி சமமின்மை மற்றும் நிதிப் பற்றாக்குறை உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கடன்கள் வழங்குவதில்லை. ஆனால், சிறப்பு நிகழ்வாக, இந்நிபந்தனை தளர்த்தப்பட்டு, இவ்வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

5. ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக பயிர்க் கடன் பெறுவதற்கு நிலத்தை அடமானம் வைக்க வேண்டும். இருந்தபோதிலும், தங்க நகை அடமானத்தின்பேரில் ஒரு இலட்ச ரூபாய்க்கும் அதிகமாக பயிர்க் கடன் வழங்க கூட்டுறவு வங்கிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராலும், அரசாலும், பயிர்க் கடன் வழங்குதல் முறையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**கூட்டுறவு வங்கிகளுக்கான கடன்களை திரும்பச் செலுத்துவதற்கான ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டம்**

2.5. கூட்டுறவு வங்கிகளுக்கு வசூலாக வேண்டிய தவணை தவறிய மற்றும் நீண்ட காலக் கடன்களை வசூலிப்பதே ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் அசல் தொகையை செலுத்துபவர்களுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

2.6. ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் 31-10-2004 வரையிலும், நகரக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் 31-3-2005 வரையிலும் கால நீட்டிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற 13,612 நபர்களுக்கு ரூ. 819.30 இலட்சமும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் கடன்பெற்ற 14,363 நபர்களுக்கு ரூ. 2,654.93 இலட்சமும் வட்டித்தொகை நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.



# அத்தியாயம்-3

## கூட்டுறவுக் கடன்

### அ. குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன் கட்டமைப்பு

3.1. மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை அல்லாத பிற திட்டங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக), கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கூட்டுறவு கடன் கட்டமைப்பு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றது.

**தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி**

3.2. மாவட்ட அளவில் இயங்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905 ஆம் ஆண்டு முதல் அதன் உறுப்பினர் சங்கங்களின் வாயிலாக வேளாண் மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்கி வருகிறது. இவ்வங்கி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியை வேளாண்மை நோக்கங்களுக்காக குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக வழங்கி வருவதுடன், தனது சொந்த நிதியிலிருந்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அவற்றின் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு காசுக் கடன் வழங்குகிறது. இந்த வங்கி, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை/சர்க்கரை ஆலைகளுக்கும் கடன் நிதியுதவியும், ஏனைய தலைமை கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி நிதியுதவியும் அளித்து வருகிறது.

3.3. 31-12-2004 ஆம் நாளன்று தலைமை வங்கியின் பங்கு மூலதனம் அரசின் பங்குத் தொகையான ரூ.0.26 கோடியுடன் சேர்த்து ரூ.38.57 கோடியாகவும், ஒதுக்கீடுகள் ரூ.424.32 கோடியாகவும், வங்கியின் வைப்புத் தொகை ரூ.2879.44 கோடியாகவும் உள்ளது. 2004-2005 (31-12-2004 வரை) ஆம் ஆண்டில் இவ்வங்கி ரூ.2565.09 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் மாநில வங்கி ரூ.39.35 கோடி அளவில் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

3.4. மாநிலத்திலுள்ள தொடக்க கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி" ஒன்றினை தலைமை வங்கி, பராமரித்து வருகிறது. இதுகாறும் இந்நிதியிலிருந்து தொடக்க கூட்டுறவுச்

சங்கங்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்காக மொத்தம் 17.98 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

3.5. மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கிளைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவை கூட்டுறவுகளுக்கும் கிராம மக்களுக்கும் பெரும் பணியாற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி பெற்றும், வேளாண் தேவைகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடம் மறு நிதியுதவி பெற்று வழங்குகின்றன.

3.6. மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண் சாரா தொழில்களுக்கு லாரிகள், பேருந்துகள், கணினிகள், மண்வாரும் இயந்திரங்கள் வாங்கவும், வீடுகட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், உறுப்பினர்களின் குழந்தைகள் மருத்துவம், பொறியியல் தொழிற்கல்வி பயிலவும் கடன் உதவி அளித்து வருகிறது.

3.7. 31-12-2004 ஆம் நாளன்று மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், ரூ.412.26 கோடியளவிற்கு பங்குத் தொகை கொண்டுள்ளன. மேலும் இவ்வங்கிகளில் ஒதுக்கிய நிதிகள் (Reserves) ரூ.622.08 கோடியாகவும், வைப்புத் தொகைகள் ரூ.6875.90 கோடியாகவும் உள்ளது. இவற்றின் நடைமுறை மூலதனம் ரூ.8918.95 கோடி அளவை எட்டியுள்ளது.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

3.8. தற்போது மாநிலத்தில் 4,510 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் குறுகிய காலக் கடன்களை வழங்கி வருகின்றன. பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக் கூடிய குறுகிய காலக் கடன்களையும், 3 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய பால்பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல் முதலான வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தர காலக் கடன்களையும் இவை வழங்கி வருகின்றன. பயிர் சாகுபடிக்கான கடன்கள் சொந்த ஜாமீன் பேரிலும், நகை



அடமானத்தின் பேரிலும் வழங்கப்படுகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வழங்கக்கூடிய பயிர்க் கடனின் அதிக அளவு ரூ.1 இலட்சமாகும். கரும்பைப் பொறுத்தவரை குறிப்பிட்ட பயிர்க் காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட கடன் அளவுகளின் அடிப்படையில் 10 ஏக்கர் வரை கடன் வசதி அளிக்கப்படும். நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், பூச்செடிகள் மற்றும் பழவகைகள் முதலான இதரப் பயிர்களுக்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு பயிரிடுவதற்காக வழங்கும் கடன், கடன் அளவுகளுக்கேற்ப நில அடமானத்தின் பேரிலும், பிற பயிர்களுக்கு ரூ.1,00,000 வரையில் நில அடமானத்தின் பேரிலும், நகை அடமானத்தின் பேரிலும் வழங்கப்படுகிறது.

3.9. இவ்வங்கிகள், வேளாண் தொழில்களுக்கு மட்டும் அல்லாது டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கின்றன. இவ்வங்கிகள், நுகர்வோர் பொருட்கள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள், இரு சக்கர வாகனங்கள், டிரக்குகள், வீட்டுமனைகள் வாங்கவும் வீடுகளைப் பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் துவக்கவும், தமது வைப்புத் தொகைகளைப் பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

**கடன் வழங்கு பணிகளின் முன்னேற்றம்**

3.10 கடந்த 2003-2004 ஆம் ஆண்டு மற்றும் நடப்பு ஆண்டில் வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் மத்திய கால பயிர்க் கடன்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | குறுகிய கால பயிர் சாகுபடி கடன்கள் | | துணை தொழில்களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்த கடன்கள் |
|---|---|---|---|---|---|
| | திட்டம் | முன்னேற்றம் | திட்டம் | முன்னேற்றம் | |
| 2003–2004 | 1251.45 | 616.59 | 194.88 | 72.15 | 688.74 |
| 2004–2005 (28–2–2005 முடிய) | 1037.69 | 955.31 | 94.37 | 34.41 | 989.72 |

[2005 மார்ச் 17

3.11. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பண்ணை சாரா திட்டங்களுக்காக 26.77 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

3.12. 30-11-2004 ஆம் நாளன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ.2669.03 கோடி வைப்புத் தொகை சேகரித்துள்ளன.

### ஆ) நீண்டகாலக் கடன்

### தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

3.13. நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பு இரண்டு அடுக்குகள் கொண்ட ஒரு அமைப்பாகும். மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்டம் அல்லது ஊராட்சி ஒன்றிய அளவில் 181 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் கொண்டது. இந்த நிதி நிறுவனங்கள் தனது உறுப்பினர்களுக்கு சிறு பாசனத்திட்டம், தோட்டப் பயிர் மற்றும் மலைப்பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்ற திட்டக் கடன்கள் வழங்குகின்றன. மேலும், மக்களின் நலத்தினைக் கருத்தில் கொண்டு சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கிணற்றினைப் பழுதுபார்த்தல், பாசனத்திற்கு பாசனக் குழாய் பதித்தல், பண்ணை இயந்திரமாக்குதல், கால்நடை கொட்டகை கட்டுதல் மற்றும் பண்ணை வீடு கட்டுதல் போன்ற காரியங்களுக்கு கடன் வழங்குகின்றன. மேற்கண்ட கடன்களை திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை ஆகும்.

3.14. சாதாரண கடனீட்டுப் பத்திரம் மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரம் ஆகியவற்றை வெளியிடுவதன் வாயிலாக தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கடன் வழங்கத் தேவையான நிதியினைத் திரட்டுகிறது. மாநில மற்றும் மத்திய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத வங்கி மற்றும் அதன் கிளைகள் மற்றும் வணிக வங்கிகள், தமிழ்நாடு கூட்டுறவு தலைமை வங்கி மற்றும் மற்ற மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சாதாரணக் கடனீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்து நிதி உதவி அளிக்கின்றன. தேசிய வங்கி, மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்பு வளர்ச்சி கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்து நிதி உதவி அளிக்கின்றன.



2005 மார்ச் 17]

### நிதி ஆதாரம்

3.15 31-12-2004 அன்றுள்ளபடி இவ்வங்கியின் நிதி ஆதாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1 | பங்கு மூலதனம் | 42.16 |
| 2 | சட்ட ரீதியான காப்பீடு | 38.87 |
| 3 | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்கான காப்பீடு உட்பட) | 364.02 |
| | மொத்தம் | 445.05 |

3.16. இவ்வங்கி சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களின் தொகுதிகள் முதிர்வடையும்போது அதனை மீட்க ஏதுவாக கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி ஒன்றினைப் பேணுகிறது. அந்நிதியில் 31-12-2004 அன்றுள்ளபடி நிலுவை ரூ.26.25 கோடி உள்ளது.

3.17. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையைக் கட்டத் தவறினால், தேசிய வங்கி, ரிசர்வ் வங்கியை அணுகி அத்தொகையை அரசுக் கணக்கில் தானாகவே வரவு வைக்கலாம் என்ற நிபந்தனையை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவதால், நடப்பு ஆண்டில் தமிழ்நாடு மாநில வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் ஏதும் வெளியிடவில்லை. இதன் காரணமாக, மாநிலத்திலுள்ள நீண்ட காலக் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் நிலவி வந்த வறட்சியின் காரணமாக தமிழ்நாடு மாநில கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வசூல் செய்த கடன் தொகை குறைவாயிற்று எனவும், அவ்வங்கி விதித்துள்ள நிபந்தனைகள் நியாயமற்றவை எனவும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு எடுத்துரைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2005 மார்ச் 17

**தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

3.18. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ஆதாரத்தை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கிறது.

3.19. நமது மாநிலத்தில் 181 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இயங்கி வருகின்றன. மற்ற நிறுவனங்கள் கடன் வழங்குவதனால் மாறிவரும் போக்கினைச் சமாளிக்க தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கீழ்க்கண்ட திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**பண்ணைசாரா திட்டங்களுக்கு நிதி உதவி**

3.20. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் கிராம கைவினைஞர்கள், கைத்தொழில் வல்லுநர்கள் மற்றும் சிறு தொழில் செய்வோருக்கு 1990-91 முதல் பண்ணைசாரா திட்டங்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்திற்கு தேசிய வங்கி தனது மறு நிதி வழங்கும் தகுதிக்கான நெறிமுறைகளைப் பொருட்படுத்தாமல் 100 சதவிகிதம் மறு நிதி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சம் வரை கூட்டமைப்புக் கடனும், ரூ.15 இலட்சம் வரை ஒருங்கிணைந்த கடனும் வழங்கப்படுகின்றன.

3.21. நடப்பு ஆண்டில், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் வரை தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் பண்ணைசாரா திட்டங்களுக்காக ரூ.3.89 கோடி கடனாக வழங்கியுள்ளன.

3.22. 2005-2006 ஆம் ஆண்டில் பண்ணைசாரா திட்டத்தின்கீழ் ரூ.92.61 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கிராமப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குவோர்களுக்கு கடன் உதவி அளித்தல்**

3.23. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தனியாருக்கும், பலபேர் கொண்ட குழுக்களுக்கும் கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கும் 16.2 டன்னுக்கு மேல் எடையில்லாத சரக்கு வாகனங்கள் மற்றும் ஆட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வாங்குவதற்கு கடன் வழங்குகின்றன. அதனால்



2005 மார்ச் 17]

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பொதுசரக்கு அல்லது பயணிகள் வாகனமாக பதிவு செய்யப்பட்டுள்ள சிறு சரக்குப் பேருந்து, சரக்குப் பேருந்து, வேன், கார், ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங்களுக்கு பண்ணைசாரா கடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்கலாம். அத்திட்டத்தின்கீழ் வாகனத்தின் அடித்தளம், மேல்பகுதி மற்றும் வரிகளை உள்ளடக்கிய செலவு மதிப்பீட்டில் 85 சதவிகிதம் கடனாக அளிக்கப்படுகிறது.

**நகரக் கூட்டுறவு வங்கிகள்**

**முன்னுரை**

3.24. தற்போது தமிழகத்தில் 124 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளும் தங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை பொதுமக்கள் மற்றும் தங்களது உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்றும் திரட்டுகின்றன. இந்த நகரக் கூட்டுறவு வங்கிகள், இந்நிதியினை குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக கடன் வழங்குவதற்கு பயன்படுத்துகின்றன. சிறு வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களுக்குத் தேவைப்படும் கடன்கள், நடுத்தர வருவாய் குடும்பத்தினருக்கு வீட்டினை விரிவுபடுத்தவும் மற்றும் பழுதுபார்க்கவும் தேவைப்படும் கடன் மற்றும் சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடத் தேவைப்படும் கடன் போன்றவற்றிற்கும் நிதியுதவி வழங்குகின்றன.

**நிதி நிலைமை**

3.25. இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை துறைகளுக்கு வழங்கிட வேண்டும். 1-4-2004 முதல் 31-12-2004 வரை இவ்வங்கிகள், 1309.81 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன. 31-12-2004 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளிடமுள்ள மொத்த வைப்புத் தொகை ரூ.2586.10 கோடியாகும்.

**நகரக் கூட்டுறவு வங்கிகள்மூலம் பண்ணைசாரா திட்டங்களுக்குக் கடன் வழங்குதல்**

3.26. நகரக் கூட்டுறவு வங்கிகள் பண்ணைசாரா பிரிவின்கீழ் சிறு குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு கடன்களை வழங்கி

வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 224.19 கோடி அளவிற்கு வழங்க திட்டமிடப்பட்ட தொகையில் ரூ.110.34 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 46,150 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**குறிப்பிட்ட சில பிரிவினருக்கு வழங்கப்படும் சிறப்பு நிதி உதவி**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்**

3.27. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட இன மக்கள் அதிக அளவில் அங்கத்தினர்களாவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கு மூலதனம் செலுத்துவதற்கு ரூ. 200 மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் |
|---|---|---|
| 2002-2003 | 8.88 | 4444 |
| 2003-2004 | 20.00 | 10,000 |

3.28. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு அவர்களது கடன் வாங்கும் திறனை அதிகரிப்பதற்காக பங்கு மூலதன உதவியாக 250 ரூபாய் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகையை ஐந்தாண்டுகளில் சரிசமமான தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டு வரை 1,04,000 உறுப்பினர்களுக்கு 2.60 கோடி ரூபாய் உதவி வழங்கப்பட்டுள்ளது.

3.29. கடன் நிறுவனங்களில் பின்பற்றப்படும் நெறிமுறைகளைப் போலவே நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களின் கடன் அளவு அவர்கள் செலுத்தும் பங்குத் தொகை அளவுடன் தொடர்புடையதாகும். நகரக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லா பங்குத் தொகை கடனாக ரூ.500 வழங்கப்படுகிறது. இவ்வாறான நிதியுதவியால் அவர்களது கடன் வாங்கும் திறன் அதிகரிக்கப்படுகிறது. இக்கடன் ஐந்தாண்டு சம தவணைகளில் வசூலிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 2002-2003 ஆம் ஆண்டு



வரை நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 18,000 நபர்களுக்கு ரூ.90 இலட்சம் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது.

**நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்**

3.30. மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்ய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/ பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 67 விழுக்காடு அளவிற்கும் நடுத்தர காலக் கடனில் 95 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.31. கடந்த இரண்டு ஆண்டுகளில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட குறுகிய கால, நடுத்தரக் கால மற்றும் நீண்ட காலக் கடன்களின் அளவுகள் பின்வருமாறு:—

| வ. எண் | விவரங்கள் | ஆண்டு | சாதனை | |
|---|---|---|---|---|
| | | | நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் கோடியில்) | வழங்கப்பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
| 1 | குறுகிய காலக் கடன் | 2003 - 2004 | 329.94 | 53.5 |
| | | 2004 - 2005 (31-12-2004 வரை) | 516.88 | 63.57 |
| 2. | நடுத்தர காலக் கடன் | 2003 - 2004 | 45.37 | 62.9 |
| | | 2004 - 2005 (31-12-2004 வரை) | 28.11 | 81.69 |
| 3. | நீண்ட காலக் கடன் | 2003 - 2004 | 31.51 | 24.50 |
| | | 2004 - 2005 (31-12-2004 வரை) | 1.94 | 19.10 |

**விவசாயி கடன் அட்டை திட்டம்**

3.32. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயி கடன் அட்டை திட்டத்தைச் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் விவசாயி கடன் அட்டை திட்டத்தை தற்போது செயல்படுத்தி வருகின்றன. 31-12-2004 அன்று வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 13,20,773 விவசாயிகளுக்கு கடன் அட்டைகளை வழங்கி, அவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் ரூ.1447.99 கோடி கடன் நிலுவை உள்ளது.

**தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்**

3.33. மத்திய அரசு, பயிர்க் காப்பீடு செய்வதற்காக, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை 1999 ஆம் ஆண்டு ராபி பருவத்திலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. மாநில அரசு மேற்படி திட்டத்தினை 2000 ஆம் ஆண்டு காரீப் பருவத்திலிருந்து கடைப்பிடித்து வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் எவையேனும் இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சிகளாலோ, நோயினாலோ அழிந்துவிடும் நிலையில், அப்பயிர்களுக்கு காப்புறுதியும் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. மேலும், நவீன விவசாய முறைகளைப் பின்பற்றவும், விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தவும், விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கும் இத்திட்டம் வழி வகுக்கிறது. சாதாரணமாக காப்பீடு செய்யும் தொகை உத்தரவாத மகசூலுக்கு 100 சதவீதமும் கூடுதல் காப்பீடாக 150 சதவீதம் வரை காப்பீடு செய்யப்படுகிறது. கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் அடங்குவர்.

3.34. 2000-2001 ஆம் ஆண்டிற்கு, பயிர்களைக் காப்பீடு செய்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்திய பிரிமியம் தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. அதற்கடுத்த ஆண்டுகளில் மானியத் தொகை படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியம் 40 சதவீதம், 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியம் 30 சதவீதம் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியம் 20 சதவீதம் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டிற்கான மானியம் 10 சதவீதம் ஆகும். இம்மானியத் தொகையினை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பகிர்ந்துகொள்கின்றன.





3.35. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டிய பயிர்களின் விவரங்கள் மற்றும் வட்டாரங்கள் ஆகியன மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1,50,355 விவசாயிகளுக்கு 60.03 கோடி ரூபாய் (மாநில அரசின் பங்கு ரூ. 26.68 கோடி ரூபாய்) மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**கடன் வசூல் செய்தல்**

3.36. தாம் வழங்கிய கடன்களை தவணை தேதிக்குள் வசூல் செய்வதே கடன் நிறுவனங்களின் தலையாய கடமையாகும். கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதைப் பொறுத்துத்தான் கடன் நிறுவனங்களின் நிதி நிலைமை அமையும். தவணை தவறிய கடன் அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதிச் சுழற்சி செய்து வணிக விரிவாக்கம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக் கூடும். தாம் பெற்ற கடனை தவணை தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அவர்களால் பருவகால வேளாண்மை தேவைகளுக்கு தொடர்ந்து மேலும் கடன் வசதி பெற இயலும். மேலும், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்தில் இயங்கவும், நிலைத்து நிற்கவும் தவணை கடந்த கடன்களை அதிக அளவு வசூலிப்பது தேவையான ஒன்றாகும். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி நேருவதும் கடனை அப்போதைக்கப்போது செலுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களுக்கு தோன்றாததும் தவணை கடந்த கடன்கள் அதிகமாவதற்கு முக்கிய காரணங்களாகும்.

3.37. கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

[2005 மார்ச் 17

(ரூபாய் கோடியில்)

| தேதியன்று | கடன் நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை தவறிய நிலுவையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-2000 | 3985.15 | 974.99 | 28.80 |
| 30-06-2001 | 4443.05 | 1157.70 | 31.40 |
| 30-06-2002 | 4861.49 | 1156.18 | 26.40 |
| 30-06-2003 | 5112.58 | 1855.88 | 36.30 |
| 30-06-2004 | 5478.96 | 1856.39 | 39.42 |

*3.38.* கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் தவணை கடந்த நிலுவைத் தொகைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| தேதியன்று | கடன் நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை கடந்த நிலுவைத் தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-2000 | 998.34 | 278.63 | 53.0 |
| 30-06-2001 | 1057.14 | 339.60 | 50.0 |
| 30-06-2002 | 1093.03 | 376.51 | 56.5 |
| 30-06-2003 | 1192.56 | 461.70 | 63.7 |
| 30-06-2004 | 1170.59 | 549.29 | 69.90 |



2005 மார்ச் 17]

## அத்தியாயம்-4

### கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பலவகைக் கடன்கள்

*4.1.* கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மக்களின் அவசரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பல்வேறு கடன்கள் வழங்கி உதவி புரிந்து வருகின்றன.

**1. நகைக் கடன்**

*4.2.* நலிவுற்ற மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புற மக்களின் அவசரத் தேவைகளுக்காக அதிக வட்டிக்கு அடகு வணிகர்களிடம் கடன் பெற்று அவதியுறும் நிலையைக் களையும் நோக்கத்தில், அவர்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட நகைக் கடன்களின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | நகைக் கடன் வழங்கப்பட்ட அளவு (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|
| | இலக்கு | வழங்கியது |
| 2000-2001 | 4400.00 | 3656.21 |
| 2001-2002 | 5000.00 | 3977.27 |
| 2002-2003 | 5207.65 | 4717.07 |
| 2003-2004 | 5708.44 | 5053.37 |
| 2004-2005 (31-12-2004 வரை) | 3889.38 | 2867.40 |

*24-12-2004* முதல் வேளாண்மை நோக்கங்களுக்காக வழங்கப்படும் நகைக் கடன்களுக்கு வட்டி விகிதம் 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**2. தொழில் கடன்**

*4.3* இவ்வகைக் கடன்கள் மருத்துவர்களுக்கும், பொறியாளர்களுக்கும் தங்களுக்குத் தேவையான மையங்களை நிறுவி தொழில் நடத்துவதற்காக

[2005 மார்ச் 17

வழங்கப்பட்டு வருகின்றன. கடன்பெறத் தேவையான அனைத்து தகுதிகளும் இருக்குமானால் அதிக அளவாக ரூ. 1 கோடி வரை கடன் வழங்கப்படும். இவ்வகைக் கடன்கள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கடந்த 2004-2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 2.36 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**3. சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்**

4.4. இத்திட்டத்தினை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்தல் மற்றும் பெட்டிக் கடை நடத்துதல் போன்ற தொழில்க்ள் செய்யும் மகளிர் அவர்களது வியாபாரத் தேவைக்குத் தகுந்தவாறு ரூ.100, ரூ.200, ரூ.500, ரூ.1,500 என்ற அளவில் அதிக அளவாக ரூ.5,000 வரை கடன் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

- இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் சேவைக் கட்டணம் கைவிடப்படுகிறது.
- பயனாளி திரும்பச் செலுத்தும் தொகையை சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதைத் தவிர்த்து அவருடைய கடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- வட்டியைக் கணக்கிடுவதற்கு குறைந்துவரும் நிலுவை முறை (Reducing Balance)) கடைப்பிடிக்கப்படும்.
- கடன் தொகையை தினந்தோறும் செலுத்துவதைவிட அவர்கள் விரும்பினால் வாரத்தில் ஒருமுறை செலுத்தலாம்.
- வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தும் காலம் தற்போதுள்ள 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்படி 1,000 ரூபாய் கடன் வாங்கியிருந்தால் பயனாளிக்கு ரூ.146.80 நிகர சேமிப்பாக இருக்கும்.

4.5 இத்திட்டத்தின்கீழ் 31-12-2004 அன்றுள்ள நிலவரப்படி மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளில் உள்ள 1,67,996 நபர்களுக்கு 63.74 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 17]

4.6. இச்சிறு வணிகக் கடன் திட்டம், ஊரகப் பகுதிகளில், தேசிய ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி பெறப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சுய உதவிக் குழுக்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வங்கிகளில் 31-12-2004 வரை 75,344 சுய உதவிக் குழுக்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு மாதங்களுக்கு மேல் அங்கத்தினர்களாக உள்ள 64,395 சுய உதவிக் குழுக்களுக்கு 232.40 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**4. மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

4.7. இத்திட்டத்தின்கீழ் மகளிர் தொழில் முனைவோருக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் 10 இலட்சம் ரூபாய் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 11 சதவீதம் வட்டிவீதத்தில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்க, கடன் வழங்கி வருகின்றன. இந்தப் புதிய கடன் திட்டம் 19-10-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடன் திட்டத்தின்கீழ் 31-12-2004 வரை 4,268 மகளிர் தொழில் முனைவோருக்கு 18.57 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**5. பணிபுரியும் மகளிருக்கான கடன் திட்டம்**

4.8. இத்திட்டத்தின்கீழ் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும், ரூ.1,00,000 வரை கடனாக அளித்து வருகின்றன. இக்கடன் 36 மாதத் தவணைகளில் 12 சதவீத வட்டி வீதத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். 31-12-2004 வரை 13,038 மகளிருக்கு 30.61 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**6. பேறுகாலக் கடன் திட்டம்**

4.9 இத்திட்டத்தின்கீழ், மகளிருக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன ரூ.2,000 வரை 11 சதவீத வட்டி வீதத்தில் பேறு கால கடன் வழங்குகின்றன. 31-12-2004 வரை 19,956 பெண்களுக்கு 3.96 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 17

## அத்தியாயம்-5

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

5.1. ஒருங்கிணைந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள அனைத்து கூட்டுறவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயம் மற்றும் அது சார்ந்த மீன்வளம், கோழி வளர்த்தல், பால்வளம், கைத்தறி, ஊரகத் தொழில் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த கூட்டுறவுகளின் உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும், அனைத்து நிலைகளிலும் கூட்டுறவுகள் கட்டுக்கோப்பாக இயங்கவும், கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவை ஏற்படுத்தி அவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காக ஏற்கெனவே நிதியுதவி அளிக்கப்படும் இனங்கள் அல்லாது, உறுதியான உள்கட்டமைப்பினை வளர்ச்சியடையச் செய்தல், நடைமூலதனத்தை அதிகரித்தல் மற்றும் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்காகவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கூட்டுறவுகளுக்கு மிகவும் பயனுள்ள ஒரு திட்டமாகும்.

5.2. புதுதில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக நிதியுதவி (கடன்) வழங்குகிறது. இக்கழகம் பணியமைப்பு, பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாடு போன்றவற்றிற்காக ஆகும் செலவில் 50 சதவீதத்தை மானியமாக அளிக்கிறது.

5.3. தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது:



2005 மார்ச் 17]

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | காலம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் | 1989–1995 | 862.51 |
| 2. | கடலூர் (ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டம்) | 1992–1997 | 1506.97 |
| 3. | விழுப்புரம் | | |
| 4. | கோயம்புத்தூர் | 1995–2001 | 1080.99 |
| 5. | தருமபுரி | 1995–2001 | 1160.25 |
| 6. | திருவண்ணாமலை | 1996–2001 | 816.58 |
| 7. | காஞ்சிபுரம் | 1998–2005 | 1123.88 |
| 8. | இராமநாதபுரம் | 2000–2004 | 687.03 |
| மொத்தம் | | | 7238.21 |

5.4. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், 2002 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| | | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | 1216.98 |
| 2. | தஞ்சாவூர் | 1101.09 |
| 3. | பெரம்பலூர் | 937.81 |
| 4. | திருவாரூர் | 1222.44 |
| மொத்தம் | | 4478.32 |

5.5. கீழ்க்கண்ட இரண்டு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த தேசிய கூட்டுறவு

வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டத்தின் பெயர் | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவி | மாநில அரசின் மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| தேனி | 884.145 | 103.585 | 987.73 |
| தூத்துக்குடி | 826.735 | 115.345 | 942.08 |
| மொத்தம் | 1710.880 | 218.930 | 1929.81 |

5.6. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை சேலம், ஈரோடு, மதுரை, திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2005-2006 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கைகள் தயார் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



## அத்தியாயம்–6

## கூட்டுறவு விற்பனை பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

### 1. கூட்டுறவு விற்பனை

6.1 1959 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தலைமை நிறுவனமான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் இயங்கி வரும் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக விவசாயிகளுக்கு சேவை செய்து வருகிறது. முந்தைய ஒருங்கிணைக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளின் தேவைகளை திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் நிறைவு செய்து வருகின்றன.

### 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

6.2 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை விநியோகித்து, மொத்த விற்பனை அமைப்பாகச் செயல்படுகின்றது. 1970 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்தால் உரக்கலவை ஆலை நிறுவப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 26,640 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 சொந்த கிடங்குகளையும், 6,400 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 13 வாடகைக் கிடங்குகளையும், சென்னையில் பேசின்பாலம் என்னுமிடத்தில் 1,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்பதனக் கிடங்கினையும், சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ள கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் 2,500 மெ.டன் கொள்ளளவுள்ள மற்றொரு குளிர்பதனக் கிடங்கினையும் நடத்தி வருகிறது.

6.3 2004-2005 ஆம் ஆண்டில் (31-12-2004 வரை) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்ற நிறுவனங்களும் விற்பனை செய்த வேளாண் இடு பொருட்களின் விவரம் பின்வருமாறு:—

[2005 மார்ச் 17

| வ. எண் | பொருள் | கூட்டுறவு விற்பனை இணையம் | | மற்ற நிறுவனங்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு மெ. டன் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | இரசாயன உரங்கள் | 56565.000 | 7105.44 | 16260.939 | 2062.47 | 727825.939 | 9167.91 |
| 2. | பாமணி உர உற்பத்தி (மெ.டன்னில்) | 4512.550 | 349.27 | – | – | 4512.550 | 349.27 |
| 3. | பாமணி உர விற்பனை 17:17:17 (மெ.டன்னில்) | 5047.600 | 412.02 | – | – | 5047.600 | 412.02 |
| 4. | பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கியது | – | 3.80 | – | 63.63 | – | 67.43 |
| 5. | விதைகள் வழங்கியது | – | 3.20 | – | 148.70 | – | 151.90 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது | – | – | — | 20.59 | – | 20.59 |

**வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை**

*6.4* கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய அங்கத்தினர்களுக்கு விவசாய விளைபொருட்களைப் பதனிடுதல், சேமித்தல் மற்றும் இடைத்தரகர்களின் தலையீடின்றி நல்ல விலைக்கு அவர்களது வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு உதவி புரிகின்றன. வேளாண் பொருட்களை பொது ஏலம் மூலமாக விற்பனை செய்யும் பணியிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியிலும் இச்சங்கங்கள் ஈடுபடுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விள்ள பொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அவற்றை விற்பனை செய்வதுடன், சந்தை விலை



2005 மார்ச் 17]

சாதகமாக அமையும்போது வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கிறது. ஆகவே, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகின்றன.

*6.5 2004-2005* ஆம் ஆண்டில் டிசம்பர் *2004* வரை (தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்/தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் உட்பட) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்த வேளாண் விளைபொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | பொருள் | 2004–2005 ஆம் ஆண்டில் 31–12–2004 வரை எய்திய முன்னேற்றம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நெல் மற்றும் அரிசி | 1469.51 |
| 2. | உணவு தானியங்கள் | 453.50 |
| 3. | பருத்தி | 5324.72 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 1078.83 |
| 5. | பருப்பு வகைகள் | 291.81 |
| 6. | மிளகாய் மற்றும் புளி | 197.31 |
| 7. | வாசனைப் பொருட்கள் | 3079.91 |
| 8. | காய்கறிகள் | 1883.48 |
| 9. | மற்றவை | 1191.07 |
| 10. | கரும்பு | 2778.22 |
| | கூடுதல் | 17748.36 |

**விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

*6.6* இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைக்கு பொது ஏலம்மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. அவ்வாறு

பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்குச் செலுத்தி விடுகின்றன. இத்திட்டத்தின்மூலம் டிசம்பர் 2004 முடிய ரூ.158.4 இலட்சம் கடன் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

### நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு

6.7. ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன.

6.8. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ.1380.50 இலட்சம் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

### விளைபொருட்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்

6.9. சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2004-2005-ல் (டிசம்பர் 2004 வரை) வேளாண் விளைபொருட்களை ஈடாகக் கொண்டு ரூ.1051.60 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

### பதனிடும் அலகுகள்

6.10. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி அரவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மாவு ஆலைகள், பருப்பு ஆலைகள் போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இவ்வலகுகள் பதனிடும் வசதிகளை விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் செய்து வருகின்றன. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில அரசு ஆகியவற்றின்மூலம் இவ்வலகுகளுக்கு பங்கு மூலதனமாகவும், கடனாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் (டிசம்பர் முடிய) 24235.895 மெட்ரிக் டன் பொருட்கள் பதப்படுத்தப்பட்டுள்ளன.



## அத்தியாயம்-7

### நுகர்வோர் கூட்டுறவு அமைப்பு

7.1. தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பானது மூன்று அடுக்கு அமைப்பாகத் தொடர்கிறது. இக்கட்டமைப்பு தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் 2,955 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,550 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளையும் கொண்ட ஓர் அமைப்பாகும்.

### தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

7.2. வேளாண் விளைபொருட்களை அவை உற்பத்தியாகும் இடத்திலேயே கொள்முதல் செய்து அவற்றை நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதே தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இவ்விணையம், மொத்த விற்பனை மற்றும் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்மூலம் விற்பனை செய்வதற்கு பெருமொத்த அளவில் உற்பத்தியாளர்களிடமிருந்து பட்டாசு கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்வதுடன் காகிதக் கொள்முதல் பணியும் செய்து வருகிறது. மாநிலத்திலுள்ள கூட்டுறவு அச்சகத்தில் காகிதக் கொள்முதலானது ஒருங்கிணைக்கப்பட்டு இவ்வியாபாரத்தில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

### கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

7.3. தற்போது மாநிலத்தில் 34 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் உள்ளன. இப்பண்டகசாலைகளுக்கு சிறப்பங்காடிகள், சுயசேவை மையங்கள், சிறு சிறப்பங்காடிகள், பெரிய மற்றும் சிறிய சில்லறை அங்காடிகள், நவீன சில்லறை அங்காடிகள் ஆகிய பல கிளைகள் உள்ளன. இப்பண்டகசாலைகள் மாநிலத்தின் அனைத்து நுகர்வோர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டுவரும் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் பொதுமக்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்கி வருகின்றன. மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கி

வருகின்றன. பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிந்து "கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு" என்னும் கொள்கை கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இண்ட்கோசர்வ் மூலம் பதப்படுத்தப்பட்ட தேயிலையும், காதிப்பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 8,835 டன்கள் ஊட்டி தேயிலையும், ரூ.421.62 இலட்சம் மதிப்புள்ள காதிப்பொருட்களும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இப்பண்டகசாலைகள்மூலம் 2004-2005 ஆம் ஆண்டில் (31-12-2004 வரை) ரூ.1720.42 கோடி அளவில் நுகர்பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





# அத்தியாயம்-8

## தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

8.1. நம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் சில தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

### கூட்டுறவு அச்சகங்கள்

8.2. நம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் மொத்தம் 26 அச்சகங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும், அரசு அலுவலகங்கள், அரசு சார் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான அச்சுப் பணிகளையும் மேற்கொள்கின்றன.

8.3. 31-3-2004 அன்றுள்ளபடி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 11,610 உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின் செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ.1.88 கோடி ஆகும். 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.14.89 கோடிக்கு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

8.4. ஏழை உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கிவரும் 9 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 4 சங்கங்கள் தனியாக ஆதிதிராவிட மக்களுக்காக மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

8.5. இச்சங்கங்களால் செயல்படுத்தப்படும் அயோடின் உப்பு தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு 'தாட்கோ' திட்டத்தின் கீழ் அரசால் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

### தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

8.6. தமிழ்நாட்டில் 144 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம்

[2005 மார்ச் 17

ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. ஒப்பந்த வேலைகளை உருவாக்கி, வேலைவாய்ப்பினை அளிப்பதன்மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அதிக அளவிலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை மானியம் முதலான பல்வேறு இனங்களுக்கு மைய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

**இதர தனி வகைச் சங்கங்கள்**

8.7. முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் போன்ற நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு**

8.8. பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தற்போது 19 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் 79,370 பழங்குடியினரும், 7,248 பழங்குடியினரல்லாத மற்றவர்களும் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர். பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியம் அளித்து வருகிறது. இச்சங்கங்கள் பயிர் செய்தல் மற்றும் பிற நோக்கங்களுக்காக வட்டியில்லா கடன்களை அளித்து வருகின்றன. இப்பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் பங்கு மூலதன மானியம், (அரசால் அளிக்கப்படும்) எல்லாக் கடன்களுக்குமான வட்டி மானியம், போக்குவரத்து மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பு மானியம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து மானியம் வழங்கி வருகிறது.



2005 மார்ச் 17]

8.9. பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த நான்காண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | கடன் வழங்கிய தொகை | வேளாண் விளை பொருள் கொள்முதல் | வேளாண் விளை பொருள் விநியோகம் | சிறுவனப் பொருள் சேகரம் | நுகர்பொருள் விநியோகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2001–02 | 506.99 | 100.19 | 120.51 | 63.21 | 774.90 |
| 2002–03 | 662.83 | 116.39 | 138.15 | 62.37 | 901.92 |
| 2003–04 | 753.55 | 115.23 | 131.16 | 28.54 | 833.55 |
| 2004–05 (2004 டிசம்பர் வரை) | 925.69 | 113.66 | 100.11 | 10.59 | 606.15 |

8.10. கடந்த மூன்றாண்டுகளில் அரசால் வழங்கப்பட்ட மானியம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு | அரசால் வழங்கப்பட்ட மானியம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2001–2002 | 90.00 |
| 2002–2003 | 60.00 |
| 2003–2004 | 75.00 |

8.11. 2004-2005 ஆம் ஆண்டிற்கு மானியமாக வழங்குவதற்கு ரூ.90 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 17

## அத்தியாயம்-9

## கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

9.1. தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கமானது பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட நிலைகளில், கடந்த பல ஆண்டுகளில், குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைந்துள்ளது. பொருளாதாரத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கூட்டுறவுகள் அங்கம் வகிக்கின்றன. மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகியன கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளை விளம்பரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

### கூட்டுறவு பயிற்சி

9.2 தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு பயிற்சி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் 11 நிறுவனங்கள் தன்னாட்சி பெற்றவை. மீதமுள்ள 9 நிறுவனங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மாணவர்களுக்கு கூட்டுறவுப் படிப்பில் பட்டயம் வழங்குவதற்காக 36 வாரங்களுக்கு கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சிகளை அளிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, அனைத்து வகையான கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் பயன்படும் வகையில் அஞ்சல் வழிக் கல்வியும் நடத்தப்படுகிறது. இவற்றின்மூலம் ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் பணியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிறுவனங்கள் மற்றைய செயற்பதிவாளர்களின் (Functional Registrars) கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. மேலும், நடப்பாண்டு முதல் தேனி மற்றும் திருச்சிராப்பள்ளி கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களில் கணினி தொடர்பாக பட்டயப் பயிற்சியும், குறுகிய காலப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. மேலும், 2004-2005 முதல் அனைத்து கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களிலும், நகை மதிப்பீடும் அதன் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியும் நடத்தப்படுகின்றன.

### கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி

9.3. தமிழ்நாட்டில் தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தால் இரு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் சென்னையிலும், மதுரையிலும் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனங்கள் பட்டம் பெற்ற



2005 மார்ச் 17]

மாணவர்களுக்கு, 36 வாரங்களுக்கு கூட்டுறவு மேலாண்மைப் பாடத்திட்டத்தில் உயர் பட்டயப்படிப்பு பயிற்சிகளை அளிக்கின்றன. ஆண்டுதோறும் 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சியினைப் பெற்று வருகின்றனர்.

### தொழிற்கல்வி

9.4 தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று கூட்டுறவு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்கள் படித்து வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கின்றன. இக்கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலமாக ஆண்டுதோறும் சராசரியாக 250 மாணவர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடியில் கூட்டுறவு பல்தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

### கூட்டுறவு ஆராய்ச்சி

9.5 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை, மதுரை காமராஜர், பாரதியார் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சம் வைப்பீடு செய்து தனியே நிதியம் ஒன்று ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் கூட்டுறவுப் பாடத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குகின்றன.

### நிதி ஆதாரம்

9.6 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கீழ்க்கண்ட இரு நிதிகளை நிர்வகித்து வருகிறது:

1. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி
2. கூட்டுறவுக் கல்வி நிதி

அங்கத்தினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆண்டுச் சந்தா, பத்திரிகைகள் விற்பனை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் இலாபப் பங்கு ஆகியவற்றின் வாயிலாக இவ்வொன்றியம் தனது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்கிறது.

[2005 மார்ச் 17

## அத்தியாயம்-10

## 2005-06 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

*10.1* கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெண்கள் அதிக அளவு கடன் பெறுவதற்கு ஏதுவாக அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. இவற்றைத் தவிர குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில் சில திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், விற்பனைச் சங்கங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்த அச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. அரசு மட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணித்திறனை அதிகரிக்க கணினிகள் வாங்கும் திட்டம் ஒரு முக்கியமான திட்டமாகும். நுகர்பொருள் வழங்கல் துறையின் மாவட்ட அலுவலகங்களை கணினி மயமாக்கும் திட்டமும் 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### (i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்

*10.2* கிராமப் புறங்களில் உள்ள நலிந்த பிரிவினரிடையே உள்ள பெண்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் கடன் வசதியைப் பெறுவதற்குத் தேவையான பங்கு மூலதனத்தைச் செலுத்துவதற்குக்கூட சிரமப்படுகின்றனர். எனவே, அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கலாம் என கருதப்படுகிறது. இதனால், இவர்கள் வங்கிகளுக்குச் செலுத்தும் மூலதனம் அதிகமாவதால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அதிகத் தொகைகள் கடன்பெற வழிவகுக்கும். சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் 2,000 பெண் உறுப்பினர்களுக்கு, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வீதம் நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவும்.

### (ii) நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்கள் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்

*10.3* நகர்ப்புறம் மற்றும் புறநகரைச் (Semi-Urban) சார்ந்த பல்வேறு தரப்பட்ட மக்களுக்கு வீட்டினைப் பழுதுபார்த்தல் அல்லது



2005 மார்ச் 17]

விரிவுபடுத்துதல், சிறிய அளவிலான வியாபாரங்கள், பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துதல், குழந்தைகளின் கல்வி, சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் அமைத்தல் போன்றவற்றிற்கு நகரக் கூட்டுறவு வங்கிகள் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. இவ்வாறு கடன்கள் வழங்குவது உறுப்பினர்கள் செலுத்தும் பங்கு மூலதனத்துடன் தொடர்புடையதாக உள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்கள் தேவையான அளவிற்குக் கடன் பெறுவதற்கு உரிய பங்கு மூலதனத்தைச் செலுத்த மிகவும் சிரமப்படுவதைக் கருத்திற்கொண்டு, இவ்வங்கிகளில் கூடுதலாக பங்குகள் செலுத்தி தங்கள் கடன் வாங்கும் சக்தியினை அதிகரிக்க ஏதுவாக நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா மூலதனக் கடன் வாயிலாக நிதியுதவி அளிக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1,000 பெண் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.500/- வீதம் கடன் வழங்க ஏதுவாக 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை மேம்படுத்த ஏதுவாக அவர்களுக்கு பங்கு மூலதனத்தை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்

*10.4* கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளைப் பொறுத்தவரை, அவ்வங்கிகளில் கடன் பெறுபவர்கள் அவர்கள் பெறும் கடன் தொகையில் 5 விழுக்காட்டினை பங்கு மூலதனமாகச் செலுத்த வேண்டும். வட்டம்/வட்டார அளவில் செயல்பட்டு வரும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் நீண்டகால கடன் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள் பெரும்பாலும் வேலை இல்லாதவர்களாகவும், பொருளாதார நிலையில் நலிவடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் மேற்படி வங்கிகளிலிருந்து கடன் வசதியைப் பயன்படுத்துவதற்கு பங்கு மூலதனத்தைச் செலுத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுவதால் அதனை அவர்கள் அவ்வங்கிகளில் பங்கு மூலதனமாகச் செலுத்தி அவர்களது கடன் வாங்கும் சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம். எனவே, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 500 பெண் உறுப்பினர்களுக்கு

[2005 மார்ச் 17

ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- வீதம் கடன் அளிக்க ரூ.5 இலட்சம் 2005-2006 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(iv) கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு ஏதுவாக ஊனமுற்ற பெண்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

10.5 மாநில அரசு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வணிக வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட அனைத்து வங்கிகள் வாயிலாக உடல் ஊனமுற்றோருக்குப் பொருளாதார ரீதியான மறுவாழ்வினை ஊக்குவிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. உடல் ஊனமுற்ற பெண்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வதால், அவர்களின் பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லை. இந்நிலையில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனுதவி வழங்குதல் மிகவும் அவசியமான ஒன்று. இவர்களுக்கு வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படும். இதனை இவர்கள் 5 ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.100 வீதம் திரும்பச் செலுத்த வேண்டும். கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடனுதவி பெற இத்தொகையினை அவர்கள் வங்கிகளில் மூலதனமாகச் செலுத்த வேண்டும். 1,000 உடல் ஊனமுற்ற பெண்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் நிதியுதவி அளிக்க 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(v) நியாய விலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்குவதற்கு மானியம் அளித்தல்**

10.6 தற்போது, வட்ட அளவில் செயல்படும் முதன்மைச் சங்கங்கள் (Lead Societies) அரிசி மற்றும் சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து, இணைப்புச் சங்கங்களால் (Link Societies) நடத்தப்பட்டு வரும் தொலை தூரத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு விநியோகித்து வருகின்றன. ஆனால், இந்நடைமுறை மண்ணெண்ணெய் விநியோகத்தில் பின்பற்றப்படுவதில்லை. இதற்குப் பதிலாக நியாயவிலைக் கடைகளை நடத்தும் சங்கங்களே மண்ணெண்ணெயை எடுத்து, அவற்றை கடைகளுக்கு விநியோகித்து வருகின்றன.

10.7 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் 15,966 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு



2005 மார்ச் 17]

வருகின்றன. இக்கடைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இவை வட்டத் தலைமையகத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்ளன. எனவே, மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகளிடம் அதனை எடுத்து கடைகளுக்குக் கொண்டு செல்ல இச்சங்கங்கள் பெரிதும் சிரமப்படுகின்றன. மேலும், மண்ணெண்ணெயை போதுமான அளவு எடுத்து, இருப்பு வைக்க ஏதுவாக அதிக எண்ணிக்கையில் மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்க இச்சங்கங்களின் நிதி நிலைமை இடம் கொடுப்பதில்லை. போதுமான அளவு இருப்பு இல்லாதிருந்தால் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில் பாதிப்பு ஏற்படும்.

10.8 இச்சிரமங்களை நிவர்த்தி செய்து மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்குவதற்காக நியாயவிலைக் கடைகளுக்கு மானியம் அளிக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ. 34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(vi) விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்த கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிதியுதவி**

10.9 மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாய இடுபொருட்களான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை சங்க எல்லைக்குட்பட்ட விவசாய அங்கத்தினர்களுக்கு வழங்குவது மற்றும் அங்கத்தினர்களுக்கு பயன்படும் வகையில் அவர்களுடைய விவசாய விளைபொருட்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல், பதப்படுத்துதல், தரப்படுத்துதல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு உதவுதல் ஆகியவற்றிற்கு இவ்விற்பனைச் சங்கங்கள் ஏற்பாடு செய்கின்றன. மேற்கண்ட கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விற்பனைக்கூடம், ஏலக்கூடம், உலர்கூடம், விவசாயி ஓய்வு இடம், வண்டிகள் நிறுத்தும் இடம், லாரிகள் நிறுத்தும் இடம் ஆகியவை அமைப்பதற்கும், லாரி மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் அரசு நிதி உதவி அளிக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டில் 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் கடனாக தலா ரூ.2.10 இலட்சம் மற்றும் மானியமாக தலா ரூ.2.20 இலட்சம் என்ற வீதத்தில் மொத்தம் ரூ.21.50 இலட்சம் தொகைக்கு ஒப்பளிக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 17

**(vii) தலைமைச் செயலக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உபயோகத்திற்காக கணினி மற்றும் இதர பாகங்கள் வாங்குதல்**

10.10 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தலைமைச் செயலகத் துறைகளில் முக்கியமான ஒரு துறையாகும். இத்துறை பொதுமக்கள் நலன் காக்கும் பல முக்கிய கோப்புகளைப் பரிசீலிக்கும் ஒரு துறையாகும். இத்துறையின் கணினி அறையில் நான்கு கணினிகள் உள்ளன. இவை துறைத் தலைவர்களிடமிருந்து கடனாகப் பெற்றவையாகும். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உபயோகத்திற்காக கணினிகள் வாங்குவதற்காக 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க 7 கணினிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் 'எல்காட்' நிறுவனத்தின் மூலமாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், 'tn.gov.in' இணையதளத்தை அவ்வப்போது புதுப்பிக்கவும், துறையின் செயல்பாடுகளை கணினிப்படுத்தவும் மேலும் 12 கணினிகள் மற்றும் உதிரிபாகங்கள் இத்துறைக்கு மிகவும் அவசியமாகும். எனவே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உபயோகத்திற்காக கணினி மற்றும் உதிரிப் பாகங்கள் வாங்குவதற்கு 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(viii) சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் செயல்பட்டு வரும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு நவீன எடை இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவித்தொகை வகையிலான நிதி உதவி**

10.11 கூட்டுறவுத் துறை அலுவலர்களாலும் மண்டல இணைப் பதிவாளர்களால் அமைக்கப்பட்ட பறக்கும் படைகளாலும் நியாயவிலைக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டபோது, மிக அதிக இனங்களில் எடை குறைவு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது தவிர இன்றியமையாப் பொருட்கள் எடை குறைவாக வழங்கப்படுவதாக பொதுமக்களிடமிருந்து அடிக்கடி புகார்கள் பெறப்படுகின்றன. இந்தக் குறைபாட்டை களைவதற்கும், இன்றியமையாப் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுவதை உறுதி செய்யவும் நியாயவிலைக் கடைகளுக்கு நவீன எடை இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவித்தொகை வகையிலான நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருமுறையில் 10 கிலோ வரை எடையுள்ள



2005 மார்ச் 17]

பொருட்களை எடையிடுவதற்கு இந்த நவீன எடை இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் 879 நியாயவிலைக் கடைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஆகவே, நவீன எடை இயந்திரம் ஒன்றின் விலை ரூ.8,250/- என்ற வீதத்தில், 879 நவீன எடை இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் தொகை ரூ.72.52 இலட்சமாகும். சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு, தலா 1 நவீன எடை இயந்திரம் வீதம் வழங்குவதற்கு ஏதுவாக 879 நவீன எடை இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது

**(ix) உணவுப்பொருள் வழங்கல் துறையை கணினிமயமாக்குதல்**

10.12 பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் உணவுக்கு பாதுகாப்பு என்ற குறிக்கோள் எய்தப்பட வேண்டும் என்பதே அரசின் கொள்கை ஆகும். இத்திட்டத்தைச் சரிவர கண்காணித்து அதனுடைய பயன் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிதல், சரிவரப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யாதது அல்லது ஒதுக்கீடே செய்யாதது, குறைவாக நுகர்வு செய்தல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அவசியமாகும். மேற்கண்ட குறைபாடுகளைச் சரிசெய்யும் விதமாக சில அடிப்படைத் தகவல்கள் அடங்கிய (Basic Models) தகவல் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக நுகர்வோர், பொது விநியோகத் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு ஆகியோரிடையே நேரடி நிர்வாகத் திட்டம் (Online Management System) செயல்படுத்த இயலும்.

10.13 எனவே, 2005-2006 ஆம் ஆண்டில் துணை ஆணையர், சென்னை (வடக்கு) அலுவலகத்தினையும் திருவள்ளூர் மாவட்ட வழங்கல் அலுவலகத்தினையும் கணினி மூலம் ஒருங்கிணைக்க ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(x) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அலுவலர்களுக்கு கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 10 புதிய வாகனங்கள் வாங்குதல்**

10.14 உணவுப்பொருள் வழங்கல் துறை தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கும் பணியில் 'முழுவீச்சாக ஈடுபட்டுள்ளது. இவை தவிர நியாயவிலைக் கடைகளை அடிக்கடி

ஆய்வு செய்தல், அத்தியாவசியப் பொருட்கள் முறையாக விநியோகம் செய்யப்படுவதைக் கண்காணித்தல், கள்ளச் சந்தையில் பொருட்கள் விற்பனை செய்வதைத் தடுத்தல், போலி குடும்ப அட்டைகளைக் களைதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படவேண்டி உள்ளன. இவ்வாறான முக்கியத்துவம் மற்றும் நுண்ணுணர்வுப் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வாகனங்கள் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, 2005-2006 ஆம் ஆண்டில் 10 புதிய வாகனங்கள் வாங்குவதற்கு, வாகனம் ஒன்றுக்கு ரூ. 4.00 இலட்சம் என்ற வீதத்தில் ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம்-11

## பொது விநியோகத் திட்டம்

11.1 தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் சிறப்பு வாய்ந்ததாகும். இம்மாநிலத்தில் குடும்ப மாத வருமானத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், விருப்ப அடிப்படையில் குடும்ப அட்டைகளுக்கு அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகிறது. மைய அரசு வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு வழங்கும் அரிசியின் விலையை விட குறைவான விலையில் அட்டைதாரர்களுக்கு இம்மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி வழங்கப்படுகிறது. இது தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவு பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்கிறது.

11.2 அனைத்துத் தரப்பினர்களும் பயன்படுத்தத்தக்க பொது விநியோகத் திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட அளவுகளில் அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விலையில் அரிசி (மக்களது அத்தியாவசியமான உணவு) கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தேவையான அளவுகளில், அனைவருக்கும், எப்பொழுதும், எளிதில் அணுகத்தக்க இடங்களில், அனைத்துத் தரப்பினர்களது வாங்கும் சக்திக்கும் உட்பட்ட விலைகளில் இன்றியமையாப் பொருட்களை வழங்குதல் போன்ற உணவுக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்களை நமது பொது விநியோகத் திட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

11.3 திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தை வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டமாக 1-6-1997 முதல் மைய அரசு மாற்றியமைத்தது. மைய ஒதுக்கீட்டிலிருந்து பொருளாதார விலையில் உணவு தானியங்களை (அரிசி மற்றும் கோதுமை) வழங்குவதற்காக வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவை /வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவை என்ற வகையில் மைய அரசு வகைப்படுத்தியுள்ளது. மைய அரசாலும், மற்ற மாநில அரசுகளாலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவை / வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ளவை என்று பிரிக்கப்பட்டுள்ளதைப் போன்று நமது மாநிலத்தில் வகைப்படுத்தப்படவில்லை.

[2005 மார்ச் 17

11.4 வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 25-12-2000-லிருந்து அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தை மைய அரசு துவக்கியது. இவ்வரசு மேற்கண்ட திட்டத்தை நவம்பர் 2001-லிருந்து அறிமுகப்படுத்தியது. மைய அரசு விரிவாக்கப்பட்ட அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தை 2003-ல் அறிமுகப்படுத்தியது. மொத்தம் 14,76,500 பேர் பயன்பெறும் வகையில் 2004-ல் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தியது. மேற்கண்ட திட்டத்தின்கீழ் இதுவரை கண்டறியப்பட்ட பயனாளர்களின் எண்ணிக்கை 14,49,631 ஆகும். இத்திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றிற்கு ரூ. 3 என்ற விலையில் மாதமொன்றிற்கு 3.5 கிலோ அரிசி பயனாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மைய அரசின் இத்தகைய திட்டங்களும் நமது மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**11.5 குடும்ப அட்டைகள் வழங்குதல்**

இம்மாநிலத்தில் வருமானத்தினடிப்படையில் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவை / வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவை என்று வகைப்படுத்தாமல், விருப்பத்தினடிப்படையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகள் மூலம் இன்றியமையாப் பொருட்களை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 1998 ஆம் ஆண்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெற விரும்பும் குடும்பங்களுக்கு இளஞ்சிவப்பு நிற குடும்ப அட்டைகளும், அரிசி பெற விரும்பாத குடும்பங்களுக்கு மஞ்சள் நிற குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. மஞ்சள் நிற குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது விருப்பத்தினடிப்படையில், ஒவ்வொரு மாதமும் அரிசிக்குப் பதிலாக 3 கிலோ சர்க்கரையோ அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெயோ கூடுதலாகப் பெற தகுதியுடையவர்கள். ஏற்கெனவே புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளில் மண்ணெண்ணெய் விருப்பம் தெரிவித்தவர்களுக்கு மண்ணெண்ணெய் 30-6-2005 வரை வழங்கப்படும்.

11.6 வருமானத்தினடிப்படையில் பல நிறங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட போதிலும், 1998 ஆம் ஆண்டு துவக்கத்தில் குடும்ப அட்டை வழங்கப்படும்போதே பல முறை, நடைமுறை மாற்றப்பட்டதால், இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமே நிறைவேறாமல் போனது. ஆகவே, வருமானத்திற்கும், வழங்கப்படும் பொருட்களுக்கும் மற்றும் அட்டையின் வண்ணத்திற்கும் எந்தத் தொடர்பும் தெளிவாக இல்லை. எனவே, அரிசி உட்பட அனைத்து



2005 மார்ச் 17]

இன்றியமையாப் பொருட்களையும் பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு இளம் பச்சை நிறத்திலும், அரிசியைத் தவிர ஏனைய இன்றியமையாப் பொருட்களை பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு வெள்ளை நிறத்திலும், குடும்ப அட்டைகள் வழங்க முடிவெடுக்கப்பட்டது. வெள்ளை நிற குடும்ப அட்டைதாரர்கள் அரிசிக்குப் பதிலாக கூடுதல் சர்க்கரை பெறலாம். சமீபத்தில் புதிய குடும்ப அட்டைகள் இத்திட்டத்தினடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்போதும் இந்த முறையே பின்பற்றப்படும்.

**11.7 விடுபட்ட குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்**

இதுவரை குடும்ப அட்டைகள் இல்லாத விடுபட்ட குடும்பத்தினர்கள் தங்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டதனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவர்களது கோரிக்கையைக் கருத்தில் கொண்டு 18-5-2004 அன்று இதுவரை குடும்ப அட்டைகள் பெறாமல் விடுபட்டவர்கள் புதிய குடும்ப அட்டைகளைப் பெற 1-6-2004 முதல் 30-6-2004 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவித்தார்கள். அதன்படி 49,31,757 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை அளித்தனர். இவற்றில் 37,70,446 விண்ணப்பங்கள் தகுதியானவை என கண்டறியப்பட்டன. தகுதிவாய்ந்த குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை கிடைக்கப்பெறாதவர்கள், அவர்களது விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணம் ஏற்புடையதாக இல்லையென்று கருதினால், தொடர்புடைய வட்ட வழங்கல் அலுவலர் / உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்முறையீடு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**குடும்ப அட்டைகளுக்கான விண்ணப்பதாரர்கள் வழங்கிய விருப்பம் பற்றிய விவரம்**

| | |
|---|---|
| அரிசி விருப்ப அட்டைகள் | 34,71,569 |
| சர்க்கரை விருப்ப அட்டைகள் | 2,84,436 |
| காவலர் அட்டைகள் | 14,441 |
| **மொத்தம்** | **37,70,446** |

**11.8 புழக்கத்திலிருக்கும் குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல்**

தற்போது புழக்கத்திலிருக்கும் குடும்ப அட்டைகளில் உள்ள தகவல்கள் ஆறாண்டுகளுக்கு மேற்பட்டதாகும். எனவே, புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை 2005 ஆம் ஆண்டு புதுப்பிக்கும் வகையில் புதிய புகைப்படத்துடன் கூடிய புதிய விண்ணப்பப் படிவங்கள் பெற முடிவெடுக்கப்பட்டது. இப்பணிக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை மேலும் ஆறு மாத காலத்திற்கு, செல்லதக்க வகையில் 30-6-2005 வரை புதுப்பிக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் புழக்கத்தில் உள்ள 152 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் டிசம்பர் 2004 மற்றும் ஜனவரி 2005-ல் நியாய விலைக் கடைகளுக்குச் செல்லும்போது குடும்ப அட்டைகளில் 1-1-2005 முதல் 30-6-2005 வரைக்கான காலத்திற்கு உள்தாள் இணைத்து புதுப்பிக்கப்பட்டது.

**11.9 புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்**

தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகள் 30-6-2005 வரை செல்லத்தக்கதாகும். இக்குடும்ப அட்டைகளிலுள்ள தகவல்கள் ஆறாண்டுகளுக்கு மேற்பட்டதாகும். எனவே, புதிய புகைப்படத்துடன் கூடிய புதிய விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டன. குடும்ப அட்டைகள் வைத்திருந்தும் 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் மீண்டும் முறைப்படுத்திக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த நியாயவிலைக் கடைக்கு அருகில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மையங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டன. குடும்ப அட்டை அச்சடிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு, அச்சடிக்கப்பட்ட புதிய குடும்ப அட்டைகள் அட்டைதாரர்களுக்கு ஜூன் 2005-ல் வழங்கப்பட உள்ளது.

தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்க செய்யப்பட்டுள்ள வழிவகைகளின்படி, குடும்ப அட்டைதாரர்களது விருப்பத்திற்கிணங்க புதிய குடும்ப அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். உரிய காலத்தில் அரிசி கூப்பன் பெறாததால் அரிசி பெறும் வாய்ப்பினை இழந்த குடும்ப அட்டைதாரர்கள் மீண்டும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விருப்பத்தின் பேரில் அரிசியினைப்





பெற்றுக்கொள்ளலாம். குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கத் தவறியவர்கள், தற்போது புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் சர்க்கரை அல்லது கூடுதல் மண்ணெண்ணெய் விருப்ப அட்டைதாரர்கள் அரிசி பெற விரும்பினால், அரிசி குடும்ப அட்டையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**விடுபட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் உட்பட புழக்கத்திலுள்ள மொத்த குடும்ப அட்டைகள் விவரம் (31-1-2005 நிலவரப்படி)**

| | | |
|---|---|---|
| அரிசி அட்டைகள் (அரிசி கூப்பன் பெற்றுக் கொண்டவர்கள்) | 1,44,91,043 | |
| அரிசி அட்டைகள் (அரிசி கூப்பன் பெறாதவர்கள்) | 15,96,047 | 1,60,87,090 |
| சர்க்கரை அட்டைகள் | 11,05,451 | |
| மண்ணெண்ணெய் அட்டைகள் | 13,09,552 | |
| காவலர் அட்டைகள் | 31,217 | |
| மொத்தம் | 1,85,33,310 | |

விரிவான விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**11.10** இவ்வரசு, சுனாமி ஆழிப் பேரலை தாக்குதலால் பாதிப்படைந்து குடும்ப அட்டைகளை இழந்த குடும்பத்தினர்களுக்குத் தற்காலிக குடும்ப அட்டைகளை வழங்கவும் உத்தரவிட்டது. இதற்காக இதுவரை 18,401 தற்காலிக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2005 மார்ச் 17

**11.11 ஒவ்வொரு மாதத்திற்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் அளவு**

**அரிசி**

| குடும்ப அட்டைகளில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்படும் அரிசியின் அளவு |
|---|---|
| வயதுவந்த ஒருவருக்கு (ஒரு யூனிட்) | 12 கிலோ |
| வயதுவந்த ஒருவர் + ஒரு குழந்தை (1 1/2 யூனிட்) | 14 கிலோ |
| வயதுவந்த இருவர் அல்லது வயதுவந்த ஒருவர் மற்றும் இரு குழந்தைகள் (இரண்டு யூனிட்) | 16 கிலோ |
| வயதுவந்த இருவர் மற்றும் ஒரு குழந்தை அல்லது வயதுவந்த ஒருவர் மற்றும் மூன்று குழந்தைகள் (2 1/2 யூனிட்) | 18 கிலோ |
| வயதுவந்த மூவர் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு (மூன்று யூனிட் மற்றும் அதற்கு அதிகமாக) | 20 கிலோ |

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட வழங்கல் அளவுப்படி பெறத் தகுதியுடைய அளவைவிட கூடுதலாக 4 கிலோ அரிசி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தியோதயா அன்னயோஜனா திட்டக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல் மாதமொன்றிற்கு 35 கிலோ அரிசி மைய அரசு நிர்ணயித்தபடி வழங்கப்பட்டு வருகிறது.

**கோதுமை**

குடும்ப உறுப்பினர்களைக் கணக்கில் கொள்ளாமல் நகரம் மற்றும் மாவட்டத் தலைமையிடங்களில் உள்ளவர்களுக்கு 10 கிலோ, பிற பகுதிகளில் உள்ளவர்களுக்கு 5 கிலோ கோதுமை வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 17]

**சர்க்கரை**

நபர் ஒருவருக்கு 500 கிராம் வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு அதிகபட்சம் 2 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது.

**மண்ணெண்ணெய்**

| வ. எண். | இடங்கள் (நீலகிரி மாவட்டம் நீங்கலாக) | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் | இரண்டு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| | | | (லிட்டரில்) | |
| 1 | சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள், மாவட்டத் தலைமையிடங்கள் | 10 | 3 | – |
| 2 | ஏனைய நகராட்சிகள் | 6 | 3 | – |
| 3 | சிறப்பு ஊராட்சிகள் | 5 | 3 | – |
| 4 | ஊரகப் பகுதிகள் | 3 | 3 | – |
| 5 | நீலகிரி மாவட்டம் | | | |
| 6 | மாவட்டத் தலைமையிடம் | 15 | 3 | – |
| | ஏனைய நகராட்சிகள் | 15 | 3 | – |
| 7 | சிறப்பு ஊராட்சிகள் | 10 | 3 | – |
| 8 | கிராமப் பகுதிகள் | 5+5** | 3 | – |

** தற்காலிக ஒதுக்கீடாக வழங்கப்படுகின்றது.

ஊட்டி தேயிலை : வரம்பு இல்லை.

அயோடின் உப்பு : வரம்பு இல்லை.

[2005 மார்ச் 17

## 11.12 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டிய இன்றியமையாப் பொருட்களின் தேவையும் / இருப்பும்

### அரிசி

பொது விநியோகத் திட்டத்திற்கும் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்திற்கும் சேர்த்து ஒரு மாதத்திற்கு 2,17,222 மெட்ரிக் டன் அரிசி தேவையாகும். மைய அரசு மாதம் ஒன்றுக்கு வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு 1,31,050 மெட்ரிக் டன்னும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு 3,05,665 மெட்ரிக் டன்னும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்திற்கு 39,148 மெட்ரிக் டன்னும் அரிசி ஒதுக்கீடு செய்கிறது. தற்சமயம் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தினையும் சேர்த்து நுகர்வு செய்யப்படும் அரிசியின் அளவு 2,06,473 மெட்ரிக் டன் ஆகும். மைய அரசு வழங்கும் அரிசி ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கான அரிசி ஒதுக்கீடு முழுவதையும் மாநில அரசு பயன்படுத்துகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கான அரிசி ஒதுக்கீட்டை தேவைக்கு ஏற்ப மாநில அரசு பயன்படுத்துகிறது. மாநிலத்தில், பொது விநியோகத் திட்டத்தில் அரிசி வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

### சர்க்கரை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சராசரியாக 21,000 மெட்ரிக் டன் சர்க்கரை மாதந்தோறும் வழக்கமாக தேவைப்படுகிறது. ஆனால், மைய அரசு சராசரியாக மாதம் ஒன்றுக்கு 10,828 மெட்ரிக் டன் லெவி சர்க்கரை மட்டுமே ஒதுக்கீடு செய்கின்றது. இந்த இடைவெளியினை ஈடுகட்ட, தமிழக அரசு, லெவி அல்லாத சர்க்கரையினை தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து ஒவ்வொரு மாதமும் தேவையான அளவு கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், வெளிச்சந்தையில் சர்க்கரை விலை குறைவாக இருந்ததாலும், வெளிச்சந்தையில் தாராளமாகக் கிடைப்பதாலும், டிசம்பர் 2002 முதல் ஜூன் 2004 வரை பொது விநியோகத்திற்காக வெளிச்சந்தையிலிருந்து சர்க்கரை பெருமளவில் வாங்கப்படவில்லை. ஜூலை 2004 முதல் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மக்கள் வாங்கும் சர்க்கரையின் அளவு கூடியதால், மைய அரசு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையின் அளவுக்கு மேல் கூடுதலாகத் தேவைப்படும் வெளிச்சந்தை



2005 மார்ச் 17]

சர்க்கரையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து வாங்கி வருகின்றது.

### கோதுமை

மைய அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கோதுமை ஒதுக்கீட்டை 'கூடுதல் ஒதுக்கீடு' வகையின்கீழ் வழங்கி வருகிறது. நமது மாநிலத்திற்குத் தேவையான உணவுத் தானிய ஒதுக்கீடு முழுவதையும் அரிசியாகப் பெற மாநில அரசு விருப்பம் தெரிவித்ததன் பேரில் கோதுமை ஒதுக்கீடு செய்யப்படுவது, மைய அரசால் ஏப்ரல் 2000 முதல் நிறுத்தப்பட்டது. தற்பொழுது மைய அரசு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள விலையில் ஜூன் 2002 முதல் மாதம் ஒன்றுக்கு 10,000 மெட்ரிக் டன் கோதுமையை நமது மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது.

### மண்ணெண்ணெய்

மைய அரசு இம்மாநிலத்திற்கு 2000 ஆம் ஆண்டு சராசரியாக மாதத்திற்கு 77,108 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் பொது விநியோகத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்ததை, 2004 ஆம் ஆண்டு 58,392 கிலோ லிட்டராக படிப்படியாகக் குறைத்துவிட்டது. மைய அரசு இம்மாநிலத்திற்கு உருளை எரிவாயு இணைப்பு வழங்குவதைக் கணக்கில் கொண்டு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டைக் குறைக்கின்றது. இவ்வொதுக்கீடு ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு முழுவதுமாக வழங்கப் போதுமானதாக இல்லை.

மைய அரசின் அறிவுரைக்கிணங்க எரிவாயு உருளை இணைப்பு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவும் வரையறுக்கப்பட்டுள்ளது. விருப்பத்தின் அடிப்படையில், குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதால் மண்ணெண்ணெய் விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு, அவர்களுக்குரிய மண்ணெண்ணெய் அளவுடன், கூடுதலாக 5 லிட்டர் மண்ணெண்ணெய் பெறுகின்றனர். இக்கூடுதல் மண்ணெண்ணெய் 30-6-2005 வரை வழங்கப்படும். இம்மாநிலத்தில் தற்பொழுது விடுபட்ட குடும்பங்களுக்குப் புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு, மண்ணெண்ணெய் வழங்குவதற்காக இம்மாநிலத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மைய அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மைய அரசின் கூடுதல் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும், புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

இது குறித்த மாவட்டவாரியான விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 11.16 மகளிர் குழுக்களால் நடத்தப்படும் கடைகள்

எங்கெங்கு மக்கள், நியாயவிலைக் கடைகளுக்காக 2 கி.மீ.-க்கு மேலாகச் செல்ல வேண்டியுள்ளதோ அல்லது எங்கு அளவுக்கதிகமாக குடும்ப அட்டைகளைக் கொண்ட நியாயவிலைக் கடைகள் உள்ளதோ, அப்பகுதிகளில் பொது விநியோகத் திட்டப் பொருட்களை விநியோகிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களால் சில்லறை அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, நியாயவிலைக் கடைகள் ஒதுக்கீடு செய்வதற்கும் வழிகாட்டுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மகளிர் குழுக்கள் சமூகப் பணிகளில் காட்டும் மிகுதியான ஆர்வத்தினைக் கணக்கில் கொண்டும், மக்கள் நலப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தும் பொருட்டும், மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

*11.17* கிராமப் பஞ்சாயத்துக்களும், நியாயவிலைக் கடைகள் நடத்தும் வகையில் தேவையான வழிகாட்டுமுறைகள் ஊரக வளர்ச்சித் துறை மூலமும் வெளியிடப்பட்டுள்ளன.

*11.18* ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடையாவது செயல்பட வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். வரையறுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, புதிய நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்கள் இன்றியமையாப் பொருட்களைப் பெற இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் செல்லும் நிலை இல்லாதிருக்க வேண்டும் என்பதும், நகர்ப்புறக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், கிராமப்புறக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்பதும் அரசின் நோக்கங்களாகும். இருப்பினும், நெடுந்தொலைவில் உள்ள மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் சென்று சேரும் வகையில், இவ்வெண்ணிக்கையை விட குறைந்த அட்டைகளைக் கொண்டு 20,000-க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. நெடுந்தொலைவில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 36 நடமாடும் நியாயவிலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.





### 11.19 வழங்கு விலையும் உணவு மானியமும்

#### அரிசி

வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் (Targeted Public Distribution System) மைய அரசு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் அரிசி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.830/-க்கும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் அரிசி குவிண்டாலுக்கு ரூ.565/-க்கும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரிசி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.300/-க்கும் வழங்குகிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் குடும்ப அட்டை பெற்றிருப்பவர்களைத் தவிர மற்ற அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ அரிசி ரூ.3.50 வீதம் ஒரே சீரான விலையில் வழங்கப்படுகிறது. பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசியின் அடக்க விலைக்கும், அந்த அரிசிக்கு மைய அரசால் நிர்ணயித்துள்ள பொருளாதார விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையையும், மைய அரசு பொது விநியோகத் திட்டத்திற்காக வழங்கும் அரிசியின் வழங்கல் விலைக்கும், அதனை மாநில அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்யும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தினையும் மாநில அரசே மானியமாக வழங்குகிறது.

அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் குடும்ப அட்டை பெற்றவர்களுக்கு அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3/- வீதம் மைய அரசு நிர்ணயம் செய்த விலையில் வழங்கப்படுகிறது.

#### சர்க்கரை

1-3-2002 முதல் சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 என்று மைய அரசு நிர்ணயித்துள்ளபடி, குடும்ப அட்டைதாரர்களுக்கு மாநில அரசு சர்க்கரை வழங்கி வருகிறது. இந்த வழங்கல் விலைக்கும், லெவி அல்லாத சர்க்கரையின் அடக்க விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையினை மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

#### கோதுமை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 1 கிலோ கோதுமையின் விலை ரூ.7.50 ஆகும். இதற்காகும் போக்குவரத்துக் கட்டணத்திற்கும், நிர்வாகச் செலவினத்திற்கும் மாநில அரசு மானியம் வழங்குகிறது.

**மண்ணெண்ணெய்**

பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெயின் மொத்த விற்பனை விலையை மைய அரசு உயர்த்தியதை அடுத்து, பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலையை 1-3-2002 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 8.40 முதல் ரூ.9.00 வரை (எண்ணெய் நிறுவனத்திற்கும் நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரத்தைப் பொறுத்து) அரசு நிர்ணயம் செய்தது. 1-1-2001 முதல், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு 60 காசுகள் மானியமாக அரசு வழங்கி வருகிறது. இவ்வாறாக மாதமொன்றுக்கு சுமார் ரூ.3.36 கோடி அரசு மானியம் வழங்கி வருகிறது. உணவு மானியம் சம்பந்தப்பட்ட ஆண்டுவாரி விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்காகவே, நிதி நெருக்கடியிலும் கூட இந்தச் செலவை அரசு மேற்கொண்டு வருகிறது. உணவு மானியத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000/- கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**11.20 ஆய்வு நடைமுறை**

பொது விநியோகத் திட்டத்தினை மிகவும் பயனுள்ளதாகவும், திறனுள்ளதாகவும், வெளிப்படையானதாகவும் செயல்படச் செய்யவும், பொறுப்புத் தன்மை உடையதாக உருவாக்கவும், உணவுப் பொருள் வழங்கல், வருவாய் மற்றும் கூட்டுறவுத் துறைகளைச் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்குமான ஆய்வுகால அட்டவணைகள் நிர்ணயித்து அமல்படுத்தப்படுகின்றன. அவ்வாறான ஆய்வுகளின்போது, நியாய விலைக் கடைகளில் விநியோகமாகும் இன்றியமையாப் பொருட்களின் தரம், எடை மற்றும் அளவு சரியாக உள்ளதா என்றும், உரிய நேரங்களில் நியாயவிலைக் கடைகள் திறந்து சுமூகமாக இயங்குகின்றனவா என்றும் சரிபார்க்கப்படுகிறது. அத்துடன் மொத்த மண்ணெண்ணெய் வணிக வளாகங்களும் பார்வையிடப்படுகின்றது.

பொது விநியோகத் திட்டம் குறித்த ஆலோசனைக் குழுக்கள் மாவட்ட / வருவாய்க் கோட்ட அளவில் நிறுவப்பட்டு அவற்றில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.





பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள், மாநகராட்சிக் குழு உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர், மாவட்ட / ஒன்றிய / சிறப்பு ஊராட்சிகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் அவரவர் எல்லைக்குட்பட்ட நியாயவிலைக் கடைகளைப் பார்வையிடவும், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை மாவட்ட / வருவாய்க் கோட்டக் குழுக்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் செய்யலாம்.

குடும்ப அட்டைதாரர்களின் நன்மைக்காக, வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்திற்கான மக்கள் சாசனம் வெளியிடப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தின்கீழ், பொது மக்களின் குறைகளைப் போக்குவதற்கான அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோரிடம் பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து தேவைப்படும்பொழுது ஆய்வு செய்கின்றார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளரால், மாதமொருமுறை எனும் அடிப்படையில், பொது விநியோகத் திட்டத்துடன் தொடர்புடைய துறைத் தலைவர்களுடன், உணவுப் பொருள் வழங்கல் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் தேவைப்படும்பொழுது நடத்தப்படுகின்றன. அவ்வப்போது ஏற்படும் குறைபாடுகளைச் சீர்செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலாளர், ஒவ்வொரு வாரமும் விலை நிலவரங்களை ஆய்வு செய்கின்றார்.

**11.21 கட்டுப்பாட்டு ஆணைகளின் செயலாக்கம்**

குறிப்பிட்ட இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம் அவற்றின் வணிகம் ஆகியவற்றை பொதுமக்கள் நலனுக்காக கட்டுப்படுத்துவதற்கு வகை செய்யும் முறையில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மைய அரசால் கொண்டு வரப்பட்டது.

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மைய அரசு மற்றும் மாநில அரசு சில இன்றியமையாப் பொருட்களின் வணிகத்தை முறைப்படுத்த கீழ்க்கண்ட கட்டுப்பாடு ஆணைகளை வெளியிட்டுள்ளன:—

1. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
2. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை.
3. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தரம் நிர்ணயம்) ஆணை.
4. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டைமூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
5. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.
6. 1993 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்சவிலை நிர்ணயம்) ஆணை.
7. 1998 ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.
8. 2000 ஆம் ஆண்டு நாப்தா (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.
9. 2000 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
10. 2000 ஆம் ஆண்டு சால்வென்ட், ரேபினேட் மற்றும் சிலாப் (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.



**11.22** மைய அரசு 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில், குறிப்பிட்ட உணவுப் பண்டங்களுக்கான உரிமத் தேவை, இருப்பு அளவு மற்றும் இயக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றை நீக்கி ஆணைகள் பிறப்பித்தது. அந்த ஆணைகளில் நெல், அரிசி, கோதுமை, சன்ன ரக தானியங்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள், பருப்புகள், வெல்லம், கோதுமைப் பொருட்கள் மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட தாவர எண்ணெய் அல்லது வனஸ்பதி இடம்பெற்றுள்ளன. மைய அரசின் இந்த ஆணைகளை மாநில அரசு மறு பிரசுரம் செய்ததைத் தொடர்ந்து இன்றியமையாப் பண்டங்களான நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், சமையல் எண்ணெய் வித்துக்கள், பருப்புகள், வெல்லம் மற்றும் கோதுமைப் பொருட்களுக்கு உரிமத் தேவை, இருப்பு அளவு மற்றும் இயக்கக் கட்டுப்பாடு ஆகியவை நீக்கப்பட்டுவிட்டன.

உணவுப் பொருள் வழங்கு துறைப் பணியாளர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறைப் பணியாளர்கள் எஞ்சிய இன்றியமையாப் பொருட்களுக்கான கட்டுப்பாடு ஆணைகளின் செயலாக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

உணவுப் பொருள் வழங்கு துறைப் பணியாளர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறைப் பணியாளர்கள் 2004 ஆம் ஆண்டில் கைப்பற்றிய இன்றியமையாப் பொருட்களின் அளவு மற்றும் அரசுக்கு ஆதாயம் செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விவரம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**11.23 பொது விநியோகத் திட்டத்தில் மின்னணு நிர்வாகம்**

இன்றைய தேதியில் மாநிலத்தில் உள்ள 185 இலட்சம் குடும்ப அட்டைகளைக் கொண்ட பொது விநியோகத் திட்டத்தினை முறைப்படுத்தி மேலாண்மை செய்ய கணினிமயமாக்கப்பட்ட பொது விநியோகம் மற்றும் குடும்ப அட்டை விநியோக நிர்வாக முறை தயாரிக்கப்பட்டு, சென்னை (வடக்கு) மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இதனை முன்னோடி திட்டமாக (Pilot Project) ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மென்பொருள் தயாரித்து, மேற்குறிப்பிட்ட 2 மாவட்டங்களில் சோதிக்கப்பட்டபின், இது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (ELCOT)

இத்திட்டத்தினைச் செயல்படுத்தும்படி ஒப்படைக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் உணவுப் பொருள் வழங்கு துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றிற்கிடையே மின்னணு இணைப்பு ஏற்படுத்தவும் (Networking) இயலும். இத்திட்டத்தின்மூலம் குடும்ப அட்டை விநியோகம், மாற்றங்கள், பெயர் நீக்கம், இடமாற்றம் ஆகியவற்றை நேரடியாக கணினி இணைப்புமூலம் செயல்படுத்துவதனால், குடிமக்களின் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கு இதன்மூலம் வழங்கப்படும் சேவையின் தரமும் உயரும்.



## அத்தியாயம்-12

## நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

*12.1* மாநில அரசு, நுகர்வோர்க்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி, உள்ளூர் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் உதவியுடன் நுகர்வோருக்குப் போதுமான ஆர்வத்தை ஏற்படுத்தி வருகிறது. கிட்டத்தட்ட 400 தன்னார்வ அமைப்புகள் (அதில் 350 FEDCOT-ன் உறுப்பினர்கள், இது ஒரு நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பாகும்) மாநிலம் முழுவதும், குறிப்பாக ஊரகப் பகுதிகளில் நுகர்வோர் இயக்கத்தைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளன. மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்த தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், பல்வேறு பல்கலைக்கழகங்களிலுள்ள நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு நிதி உதவித் திட்டமொன்றை மாநில அரசு வகுத்துள்ளது. ஊரகப் பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி நுகர்வோர்ப் பாதுகாப்பில், நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நுகர்வோர் நலத் திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நிதியுதவியாக ரூ.13.20 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. அரசு, ஒவ்வோர் ஆண்டும் இந்த இயக்கத்தில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு மாநில அளவில் ரொக்கப் பரிசாக ரூ.5,000/-, ரூ.3,000/-, ரூ.2,000/- வழங்கி வருகிறது.

*12.2* மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஒரு மாவட்டத்தில் மாநில அளவிலான கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய கருத்தரங்குகளும், கண்காட்சிகளும் பொதுமக்கள் கலந்து கொள்ளக் கூடியதாக, நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நடத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 24 ஆம் நாள் அன்று தேசிய நுகர்வோர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கப்படும் "நுகர்வோர் செய்தி மடல்" உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்ப் பாதுகாப்புத் துறையால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது.

*12.3.* ஊரகப் பகுதிகளில் நுகர்வோர் தங்கள் உரிமைகளை அறியவும், விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தவும், இந்திய அரசு "ஜக்ரிதி ஷிவிர் யோஜனா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த இந்திய அரசு, நுகர்வோர் நலவாழ்வு

[2005 மார்ச் 17

நிதியிலிருந்து ரூ.3,00,000/-ஐ ஒதுக்கியுள்ளது. இத்தொகையிலிருந்து வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வசித்துவரும் பெரும்பாலான வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழும் (BPL) குடும்பங்களுக்கு மார்ச், 2004-ல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த மாவட்டம் ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

*12.4* மேற்காணும் திட்டத்தின்கீழ், நுகர்வோர் மன்றங்களை உருவாக்கி பல்வேறு நுகர்வோர் நலவாழ்வு மற்றும் நுகர்வோர்ப் பாதுகாப்புச் செயல் திட்டங்களில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்த வேண்டி, தற்போது நுகர்வோர் கல்வியானது கற்பிக்கப்படுகிறது. மாநிலத்தில் நுகர்வோர் இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான ஒருபடியாக நுகர்வோர் உரிமை பற்றிய அறிவை இளைஞர்களுக்கு உண்டுபண்ண, நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986-ல் உள்ளவாறு நுகர்வோர் உரிமைகளை மாணவர்களுக்கு கற்பிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நுகர்வோர் மன்றங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நடுநிலை/உயர்நிலை/ மேனிலைப் பள்ளிகளில் அமைக்கப்படும். இதில் குறைந்தபட்சம் 50 உறுப்பினர்கள் இருப்பர். ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் ஆண்டொன்றிற்கு மத்திய அரசால் ரூ.10,000/- நிதியுதவியாக வழங்கப்படும். தமிழகத்திலுள்ள பள்ளிகளில் இதுவரை 1,400 நுகர்வோர் மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 12.5 முன்னேற்றப்பாதை: நுகர்வோர் செயல் திட்டம்

இம்மாநிலத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் செயற்பாட்டின் பங்கை வலுப்படுத்த, 'நுகர்வோரே உயர்ந்தவர்' என்ற நோக்கத்தினை நிலை நிறுத்தும் வகையில் நுகர்வோர்ப் பாதுகாப்புக்கென ஒரு மாநில செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986 (2002-ல் திருத்தப்பட்டது), பிரிவு 6-ன்கீழ் நுகர்வோரின் ஆறு உரிமைகளைக் கடைப்பிடிக்கும் வகையில் சட்டபூர்வமாக தீட்டப்பட்டுள்ளது.

### 12.6 நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள்

தொழில், வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்புகளின் வளர்ச்சிக்கு நிகராக நம் சமுதாயம் நுகர்வோர் நலன் சார்ந்த ஒன்றாக மாறி வருகிறது. தற்போது பின்பற்றப்படும் தாராளமயமான வர்த்தகக் கொள்கைகளினால் அங்காடிகளில் பல்வேறு வகையான நுகர்பொருட்கள் பெருகியுள்ள நிலை பாராட்டுக்குரியது.



2005 மார்ச் 17]

பொதுமக்களும், இவ்வகையான நுகர்வோர் சார்ந்த வியாபார நடவடிக்கைகளினால் கிடைக்கப்பெறும் பல்வேறு வகையான பயன்பாடுகளால் மகிழ்ந்துள்ளனர். பல்வேறு அரசுத் துறைகளும் அரசின்கீழ் இயங்கும் நிறுவனங்களும் மக்களுக்கு பெரும் பணியாற்றி வருகின்றன. இத்தகைய முயற்சியால் உத்தரவாதமளிக்கப்பட்ட தரம், சேவை, ஆகியவற்றில் குறைபாடுகள் நிகழாதவண்ணம், நுகர்வோருக்கு ஏற்படும் தேவையற்ற துன்பங்களும், நஷ்டமும் களையப்படுகின்றன.

*12.7* நுகர்வோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நடைமுறை விதிகளை ஏதும் பயன்படுத்தாமல், பணச் செலவின்றி துரிதமாக நுகர்வோரின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மைய அரசின் நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986-ல் உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் தேசிய / மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*12.8* நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986-ன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடங்களிலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் இரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில், 18 மன்றங்கள் தனித்தியங்கக் கூடியவை. 12 மன்றங்கள், அருகருகே உள்ள இரண்டு மன்றங்களை இணைத்து 6 சேர்ந்தியங்கும் மன்றங்களாகச் செயல்படுகின்றன. தனித்தியங்கும் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரைத் தலைவராகவும், வேறு இருவர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். அருகருகே அமைந்துள்ள இரு மாவட்டங்களுக்கும் சேர்ந்தியங்கும் மன்றத்திற்கு ஒருவர் தலைவராக இருப்பார்.

தனித்தியங்கும் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மற்றும் சேர்ந்தியங்கும் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

[2005 மார்ச் 17

| தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் | | | |
|---|---|---|---|
| 1 | சென்னை– தெற்கு | 10 | கடலூர் |
| 2 | சென்னை–வடக்கு | 11 | தஞ்சாவூர் |
| 3 | திருச்சிராப்பள்ளி | 12 | நாகப்பட்டினம் |
| 4 | ஈரோடு | 13 | தேனி |
| 5 | மதுரை | 14 | திருவள்ளூர் |
| 6 | விருதுநகர் (இருப்பிடம்) ஸ்ரீவில்லிப்புத்தூர் | 15 | பெரம்பலூர் |
| 7 | கன்னியாகுமரி (இருப்பிடம்) நாகர்கோவில் | 16 | கரூர் |
| 8 | கோயம்புத்தூர் | 17 | திருவாரூர் |
| 9 | நீலகிரி | 18 | நாமக்கல் |
| **சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள்** | | | |
| 1 | வேலூர் மற்றும் திருவண்ணாமலை | 4 | திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை |
| 2 | சேலம் மற்றும் தருமபுரி | 5 | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| 3 | காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் | 6 | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |

இந்த நீதிமுறைச் சார்புடைய அமைப்புகளுக்கு, இயற்கை நீதிமுறைகளைக் கடைப்பிடிப்பதோடு நுகர்வோருக்கு எந்தெந்த வகையில் உதவவேண்டுமோ அவ்வகையில் உதவி புரியவும் நஷ்டஈடு வழங்கவும் அதிகாரம் உண்டு. இச்சட்டத்தில், நீதிமுறைச் சார்புடைய குறைதீர் மையங்களால் ஆணையிடப்பட்டதை நிறைவேற்றாத பட்சத்தில் தண்டம் (Penalties) விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு சனவரி முதல் அக்டோபர் மாதம் வரை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர்



2005 மார்ச் 17]

மன்றங்களிலும் பதியப்பெற்ற மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்பு-5 மற்றும் இணைப்பு-6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

*12.9* நுகர்வோரின் நலன் கருதி உருவாக்கப்பட்ட மைய அரசின் நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986-ல் 15-3-2003 முதல் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின்படி, மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் ரூ.5 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணம் கோரும் வழக்குகளும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரூபாய் 20 இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரையிலான மதிப்புள்ள நிவாரணம் கோரும் வழக்குகளும், தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணம் கோரும் வழக்குகளும் தொடரலாம்.

*12.10* உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்ப் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கூட்டம் நடத்தப்படுகிறது. பொதுத் துறை நிறுவனங்களிலும் வேறு பல துறைகளிலும் நுகர்வோருக்கு ஏற்படும் இன்னல்கள், குறைகள் கண்டறியப்பட்டு அவை களையப்படுவதற்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் இக்கூட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன. நுகர்வோர்ப் பாதுகாப்புச் சட்டம், 1986-ன்படி மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகள் சேர்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில நுகர்வோர்ப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பிரச்சினைகள் குறித்து இக்குழு விவாதித்து தீர்வு காண்கிறது. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த செய்திகள், விளக்கங்கள் அடங்கிய சிறு கையேடுகள், மற்றும் புத்தகங்கள் அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 15 ஆம் நாளில் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர்ப் பாதுகாப்புக் குறித்த கருத்தரங்குகள், பொருட்காட்சி ஆகியவை மைய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. 2005-2006 ஆம் ஆண்டிற்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புப் பணிக்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 17

## அத்தியாயம்-13

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

**13.1** மாநில அரசு நிறுவனமாகிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு, நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் ஒரு தனியார் நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டு இது ஒரு பொதுத் துறை நிறுவனமாக மாற்றப்பட்டது. கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவு தானியம், இன்றியமையாப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான மூலதன நிதி ஆதாரங்களைத் தேடுதல், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை சேவைகள், அறிவுரை உதவி போன்ற பணிகளைச் செய்தல் இந்நிறுவனத்தின் நோக்கங்களாகும்.

### 13.2 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தலைமையில் மூத்த அதிகாரிகள் அடங்கிய இயக்குநர்கள் குழுமத்தால் நிர்வகிக்கப்படுகிறது. நிர்வாக வசதிக்காகவும் பன்முகப்படுத்துதலுக்காகவும் மாவட்டத்திற்கு ஒரு மண்டலம் வீதம் 31 மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை நகரில் மட்டும் சென்னை (தெற்கு) மற்றும் சென்னை (வடக்கு) என இரு மண்டலங்களாக இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள முதுநிலை மண்டல மேலாளர் அல்லது மண்டல மேலாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 30-11-2004 அன்றைய நிலவரப்படி, கழகத்தின் மொத்த நிரந்தரப் பணியாளர்கள் எண்ணிக்கை 8,926 ஆகும்.

### 13.3 செயல்திறன்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்திற்கான இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்தல் மற்றும் விநியோகித்தலில் தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக செயல்படுகிறது. இது அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்களை பொது விநியோகத் திட்டத்தில் அரசு நிர்ணயம் செய்த விலையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்கிறது.



2005 மார்ச் 17]

மேற்கூறிய செயல்பாடுகளைத் தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மற்ற முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:—

(அ) பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்படின் அவ்வப்போது நியமிக்கப்படும் சுமார் 300 தனியார் அரவை முகவர்கள்மூலம் நெல்லை அரைத்தல்.

(இ) மைய அரசால் மத்தியத் தொகுப்பிலிருந்து பொது விநியோகத் திட்டத்திற்கென ஒதுக்கப்படும் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகிய இன்றியமையாப் பொருட்களை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சரிநிகர் பகிர்தலுக்காக எடுத்தல்.

(ஈ) தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை விடுதிகள், காவல், தீயணைப்பு மற்றும் சிறைத் துறை அலுவலர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் பொருட்கள் வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் சென்னை மற்றும் சில பகுதிகளில் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளில் பொருட்களை விற்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்கான, பொது விநியோகத் திட்டத்தில் சேராத, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை வாங்குதல்.

(உ) 3 பெட்ரோல் / டீசல் பங்குகள் மற்றும் 6 எரிவாயு அலகுகளை (யூனிட்டுகளை) நடத்துதல்.

(ஊ) 1,145 நியாயவிலைக் கடைகளை நடத்துதல்.

(எ) பொது விநியோகப் பொருட்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகித்தல், பொது விநியோகத் திட்டத்தில் சாராத பொருட்களை அரசு நலத் திட்டங்களுக்கு அளித்தல் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளுக்குப் பொருட்களை விநியோகித்தல்.

(ஏ) மத்திய அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களான பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (சம்பூர்ண கிராமீன் ரோஜ்கார் யோஜனா), அன்னபூர்ணா திட்டம், அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் போன்ற திட்டங்களுக்காகத் தேவைப்படும் உணவு தானியங்களை இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து எடுத்து விநியோகித்தல்.

(ஐ) தேயிலைப் பயிரிடும் சிறு விவசாயிகளின் துயர் துடைக்க "இன்ட்கோசர்வ்" நிறுவனத்திடமிருந்து தேயிலையைக் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்தல்.

(ஒ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது வெளிச் சந்தையில் கேழ்வரகு, மக்காச்சோளம், கடலைப் பருப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் ஊட்டச்சத்து உருண்டை தயாரிக்கும் கூட்டுறவு இணையங்களுக்கு வழங்குதல்.

### 13.4 கொள்முதல்

1-10-2002 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசின் அதிகாரபூர்வ முகவராக கரீப் பருவ காலம் 2002-2003 ஆம் ஆண்டிற்கான பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ளது.

நடப்பு சம்பா 2005 பருவத்தில் 1,012 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 6,99,732 மெ.டன் நெல் 01-03-2005 நிலவரப்படி இக்கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நெல்கொள்முதல் செய்யும் விதம் மற்றும் விலை போன்ற விவரங்கள் இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**13.5** கொள்முதல் செய்யப்படும் நெல் பல மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்பட்டால் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்படும் தனியார் அரவை முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைத்து அரிசியாக்கப்படுகிறது.





### 13.6 சேமிப்பு வசதிகள் / கிடங்குகள் கட்டுமானம்

2003-2004-ல் ஆண்டிப்பட்டி மற்றும் கும்மிடிப்பூண்டியில் இரு விஞ்ஞானமுறை செயல்முறைக் கிடங்குகள், ஒவ்வொன்றும் தலா 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் மொத்தம் ரூ. 66 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இதற்கு அரசு மானியமாக ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து செலவிடப்பட்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவு விவரங்கள் (30-11-2004 நிலவரப்படி) பின்வருமாறு:—

மொத்தக் கிடங்குகள் : 138 வருவாய் வட்டங்களில் அமைந்துள்ள 168 கிடங்குகள்

கொள்ளளவு : 6,36,845 மெட்ரிக் டன்

### 13.7 அமுதம் பல்பொருள் அங்காடி

அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி, பங்கீட்டிற்குட்படாத பொருட்களின் விலைகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, தமிழக அரசு எடுத்த முடிவின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமுதம் பல்பொருள் அங்காடி என்ற பெயரில், பங்கீட்டிற்குட்படாத பொருட்களை விற்பனை செய்யும் அங்காடிகளை 1976 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

தற்போது சென்னை மற்றும் கடலூர் மண்டலங்களில் கீழ்க்கண்டவாறு 30 அமுதம் பல்பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன:

| | |
|---|---|
| **சென்னை** | 24 |
| கடலூர் | 6 |
| **மொத்தம்** | 30 |

2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 15.00 கோடி விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது.

[2005 மார்ச் 17

2005-2006 ஆம் ஆண்டில் இவற்றின் மொத்த விற்பனை ரூ.16 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**13.8 நவீன அரிசி ஆலையில் உருளை வடிவ அடுப்பு நிர்மாணித்தல்**

தற்பொழுது உபயோகத்தில் உள்ள பழமை வாய்ந்த படி வடிவ அடுப்பில் இருந்து வெளியாகும் சாம்பல் மற்றும் தூசுகளினால் சுற்றுச்சூழல் மாசுகள் சூழ்ந்து நிலவுகிறது. இதன் காரணமாக மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாததோடு, பொது மக்களின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் உயர்ந்த மற்றும் சீரான வெப்ப நிலையை உலர்த்திகளுக்கு அளிக்கும் வகையிலும், பராமரிப்புச் செலவினத்தைக் குறைக்கும் நோக்குடனும் உருளை வடிவ அடுப்புகள் திருக்கோயிலூர், பட்டுக்கோட்டை, அடவத்தூர், அம்மன்பேட்டை, கடச்சனேந்தல், சுந்தரக்கோட்டை, எருக்கூர் - I, II மற்றும் சித்தர்காடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள நவீன அரிசி ஆலைகளில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் திருநாகேஸ்வரத்தில் ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில் நவீன அரிசி ஆலை உருளை வடிவ அடுப்பு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

உருளை வடிவ அடுப்புகளில் மாசில்லாத தன்மையும், சிக்கனமும், சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

**13.9 போனஸ்**

2003-2004 ஆண்டிற்கான போனஸ் 8.33 சதவிகிதமாகவும் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்கு 2004-2005-ல் வழங்கப்பட்டது.

**13.10 நிதி நிலைமை**

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.35 கோடியாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.33.39 கோடியாகும். 1972-73 ஆம் ஆண்டில் ரூ.12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வர்த்தக அளவு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.2,046 கோடியை எட்டியுள்ளது. (மானியத் தொகையும் சேர்ந்து)



2005 மார்ச் 17]

## அத்தியாயம்-14

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

**14.1** தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வேளாண் உற்பத்தி நிறுவனச் சட்டம் 1956-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. பிறகு மேற்படி சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் 1962 என மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 02-05-1958 முதல் சேமிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது.

**14.2 நிறுவனக் கட்டமைப்பு**

இந்நிறுவனம் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு அதன் தலைவரின் நிர்வாகத்தின்கீழ் செயல்படுகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னை கிண்டியில் அமைந்துள்ளது. மேலும் இந்நிறுவனம் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏழு மண்டலங்களாக மண்டல மேலாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**14.3 செயல்பாடுகள்**

1. இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் 65 இடங்களில் சேமிப்புக் கிடங்குகளைக் கொண்டுள்ளது.
2. சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து சேமிப்புக் கிடங்கு தேவைப்படும் இடங்களை உறுதி செய்து, அதற்கேற்ப நிலங்களை வாங்கி இழப்பினைக் குறைப்பதற்காக அறிவியல் ரீதியாக கிடங்குகளை இந்நிறுவனம் உருவாக்குகிறது.
3. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச் சீட்டுகள் வழங்கி வங்கிகளில் கடன் வசதியினைப் பெற ஏற்பாடு செய்கிறது.
4. சரக்குகளை ஏற்றி இறக்கும் பணிக்குப் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களை நியமித்து சரக்கு வைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.
5. இந்நிறுவனம் பூச்சித் தடுப்புப் பணியினையும் மேற்கொண்டு வருகிறது.

[2005 மார்ச் 17

**14.4 இருப்பு வைப்பு கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாடு**

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் 65 சேமிப்புக் கிடங்குகளின் இடவசதி இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை மையம் (NAFED), தொலைத் தொடர்புத் துறை, சர்க்கரை ஆலைகள், கனிமம் மற்றும் உலோகங்கள் வர்த்தகக் கழகம் (MMTC), உர உற்பத்தி நிறுவனங்கள், சிமென்ட் உபயோகப்படுத்தும் அரசுத் துறைகள், தேர்தல் துறை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு இணையம் மற்றும் தனியார் வைப்பீட்டாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**31-10-2004 நிலவரப்படி சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு மற்றும் பயன்பாடு பின்வருமாறு:—**

மொத்தக் கிடங்குகள் 65

| | மெ.டன் |
|---|---|
| சேமிப்பு இடவசதி (சொந்தம்) | 600210 |
| சேமிப்பு இடவசதி (வாடகை) | 22748 |
| மொத்தம் | 622958 |

சேமிப்பு இட வசதியின் (ஏப்ரல் 2004 முதல் செப்டம்பர் 2004 வரையிலான மாதங்கள்) ஒரு மாதத்திற்கான சராசரி பயன்பாட்டு விழுக்காடு 54 விழுக்காடு.

**14.5 புதிய சரக்கு வைப்பாளர்கள்**

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக சேமிப்பு இடவசதியின் பயனீட்டளவு குறைந்து கொண்டு வருவதால், தனியார் சரக்கு வைப்பாளர்களிடமிருந்தும் வணிகம் பெற தொடர்ந்து முயற்சி எடுக்கப்பட்டு, 10 தனியார் சரக்கு வைப்பாளர்கள் இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்கு வசதியை உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய முயற்சியாக இந்நிறுவனம் மும்பையிலுள்ள இந்திய தேசிய பண்ட மாற்று (National Commodity and Derivatives Exchange Ltd.,)



2005 மார்ச் 17]

நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி ஈரோடு மற்றும் கோபிசெட்டிப்பாளையத்திலுள்ள சேமிப்புக் கிடங்குகளை அந்நிறுவனம் மஞ்சள் சேமித்து வைப்பதற்கு உபயோகப்படுத்த உள்ளது.

மேலும், நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தேவைப்படுகின்ற சேமிப்பு இடவசதி, போக்குவரத்து, கையாளும் முறை மற்றும் தொடர்பான இதர பணிகளுக்காகக் கோரும் ஒப்பந்தப்புள்ளிகளை பால்மர் & லொரி நிறுவனம், சென்னை உர நிறுவனம் மற்றும் இந்திய எண்ணெய்க் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது.

**14.6 புதிய / கூடுதல் கிடங்குகள் கட்டுதல்**

தற்போது கள்ளக்குறிச்சியில் உள்ள சேமிப்புக் கிடங்கு வாடகை இடத்தில் செயல்பட்டு வருகிறது. வாடகைச் செலவைக் குறைக்கவும் மற்றும் கூடுதல் சேமிப்பு இடவசதித் தேவையினைப் பூர்த்தி செய்யவும் கள்ளக்குறிச்சியில் 4800 மெ.டன் கொள்ளளவுள்ள கிடங்கு கட்டப்பட உள்ளது. மேலும், இந்திய உணவுக் கழகம் மற்றும் பொது விநியோகத் திட்டத்திற்கான கூடுதல் சேமிப்பு இடவசதி தேவையைப் பூர்த்தி செய்திட தருமபுரியில் கூடுதலாக 6,250 மெ.டன் கொள்ளளவிற்கு கிடங்கு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**14.7 நிதி நிலவரம்**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.800 இலட்சமாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் 50 : 50 என்ற விகிதத்தில் பங்குதாரர்களாக உள்ளனர்.

**14.8 ஈவுத் தொகை**

இந்நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.117.85 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இதில் ரூ.30.44 இலட்சம் ஈவுத் தொகையாக பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**14.9 பயிற்சி**

இதுநாள் வரையில் எந்த ஒரு பயிற்சியும் பெறாது இந்நிறுவனத்தில் பணியாற்றிடும் 214 "டி" (D) பிரிவு ஊழியர்களுக்கு தனித்தன்மை வாய்ந்த வகையில் தங்குமிட வசதியுடன் கூடிய 'பணியாளர் செயல் திறன் வளர்ப்புப் பயிற்சி' அளிக்கப்பட்டது.

**14.10 கணினி மயமாக்குதல்**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் செயல்பாடுகளை கணினி மயமாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கணக்குப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு மற்றும் பிற பிரிவுகளுக்குத் தேவையான கணினி மென்பொருளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தில் காகித உபயோகத்தைக் குறைத்திட தன்பதிவேட்டினை கணினிமூலம் பராமரிக்கும் முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்னஞ்சல் வசதி அனைத்து மண்டலங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் அனைத்துச் சேமிப்புக் கிடங்குகளுக்கும் இணையதள வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் முழுவதும் மின்னஞ்சல் மூலம் நடைபெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**14.11 இதர இனங்கள்**

**1. சுய ஈட்டுறுதித் திட்டம் அறிமுகம்**

சரக்குகளுக்குக் காப்பீடு செய்வதற்காக காப்பீட்டுக் கட்டணம் அதிகரித்துக் கொண்டு வருவதால், இதனை ஆய்வு செய்து, 01-04-2004 முதல் காப்பீடு வசதிக்குப் பதிலாக சுய ஈட்டுறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்களின் சேமிக்கப்பட்ட பொருள்களின் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு சுழல் நிதி ஒன்று உருவாக்கப்பட்டு, துவக்கமாக ரூ.50 இலட்சம் வங்கியில் வைப்பு நிதியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**2. சுய உதவிக் குழு**

இந்நிறுவனத்தின் 9 சேமிப்புக் கிடங்குகளில் ஏற்றுதல் / இறக்குதல் பணிபுரியும் தொழிலாளர்கள் தாங்களே ஒரு குழு அமைத்து கையாளும் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் தடங்கலின்றி நடைபெற ரூ.4,000/- முதல் 60,000/- வரை சுழல் நிதிமூலம் நிதி உதவியும் அளிக்கப்படுகிறது.





## அத்தியாயம்-15

### நிறைவுரை

*15.1* கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கீழ்க்காணும் முக்கியமான பணிகளை நிறைவேற்றி வருகிறது:

(அ) விவசாயிகளுக்கும், கிராம மக்களுக்கும் நியாயமான வட்டி வீதத்தில் கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல், நுகர்பொருட்கள் விற்பனை, பொது விநியோகத் திட்டத்தின்மூலம் இன்றியமையாப் பொருட்கள் விநியோகித்தல், கூட்டுறவு, கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றின் வளர்ச்சி போன்ற பணிகளைக் கண்காணித்து வரும் கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகித்தல்;

(ஆ) பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பசிப்பிணி தீர்ப்பதற்காக போதுமான அளவு உணவுப் பொருட்களை வழங்கி மக்களுக்கு "உணவுப் பாதுகாப்பு" அளிக்கும் கொள்கையை உறுதி செய்தல்;

*15.2* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆக்கப்பூர்வமான தலைமையின்கீழும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடும் இத்துறை பலதரப்பட்ட மக்களின் நலனுக்காக, அதிலும் குறிப்பாக நலிந்த பிரிவினரின் நலனுக்காக தான் ஆற்றும் பணிகளில் இன்னும் கூடுதலான ஆர்வத்தோடு பாடுபடும் என்று இப்பேரவைக்கு உறுதியளிக்கப்படுகிறது.

| வ எண் | மாவட்டத் பெயர் | ட்டைகள் | | சுற்றில் உள்ள மொத்த குடும்ப அட்டைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்த காவலர் அட்டைகள் | % | நடைமுறையில் உள்ள கு.அட்டைகள் | விடுபட்ட குடும்பங்களுக்கான குடும்ப அட்டைகள் | மொத்த அட்டைகள் |
| 1 | சென்னை வட | 2751 | 0% | 723098 | 245576 | 968674 |
| 2 | சென்னை தெ | 2151 | 0% | 652728 | 203937 | 856665 |
| 3 | காஞ்சிபுரம் | 734 | 0% | 448559 | 115768 | 564327 |
| 4 | திருவள்ளூர் | 506 | 0% | 361637 | 82618 | 444255 |
| 5 | வேலூர் | 1622 | 0% | 759669 | 154572 | 914241 |
| 6 | திருவண்ணா | 625 | 0% | 511585 | 88413 | 599998 |
| 7 | விழுப்புரம் | 145 | 0% | 709069 | 158513 | 867582 |
| 8 | கடலூர் | 933 | 0% | 525446 | 134011 | 659457 |
| 9 | தருமபுரி | 545 | 0% | 290000 | 107395 | 397395 |
| 10 | சேலம் | 1178 | 0% | 742721 | 221736 | 964457 |
| 11 | நாமக்கல் | 428 | 0% | 408192 | 76495 | 484687 |
| 12 | ஈரோடு | 1059 | 0% | 746084 | 112761 | 858845 |
| 13 | கோயம்புத்தூ | 1743 | 0% | 1130738 | 241692 | 1372430 |
| 14 | நீலகிரி | 705 | 0% | 206637 | 25446 | 232083 |
| 15 | கரூர் | 365 | 0% | 261757 | 49157 | 310914 |
| 16 | பெரம்பலூர் | 329 | 0% | 300502 | 40627 | 341129 |
| 17 | திருச்சி | 662 | 0% | 591107 | 100805 | 691912 |
| 18 | தஞ்சாவூர் | 840 | 0% | 526711 | 109172 | 635883 |
| 19 | திருவாரூர் | 642 | 0% | 276079 | 53015 | 329094 |
| 20 | நாகப்பட்டினா | 649 | 0% | 332197 | 75243 | 407440 |
| 21 | புதுக்கோட்டை | 1094 | 0% | 315441 | 84124 | 399565 |
| 22 | திண்டுக்கல் | 637 | 0% | 442398 | 100958 | 543356 |
| 23 | தேனி | 580 | 0% | 282948 | 90498 | 373446 |
| 24 | மதுரை | 2889 | 0% | 699446 | 153162 | 852608 |
| 25 | சிவகங்கை | 880 | 0% | 291326 | 69541 | 360867 |
| 26 | விருதுநகர் | 1282 | 0% | 437531 | 88780 | 526311 |
| 27 | இராமநாதபுர | 1040 | 0% | 292877 | 66197 | 359074 |
| 28 | தூத்துக்குடி | 812 | 0% | 369869 | 89795 | 459664 |
| 29 | திருநெல்வே | 1551 | 0% | 663205 | 156218 | 819423 |
| 30 | கன்னியாகுப | 1329 | 0% | 423689 | 56850 | 480539 |
| 31 | கிருஷ்ணகிரி | 511 | 0% | 330797 | 126192 | 456989 |
| | **மொத்த** | **31217** | **0%** | **15054043** | **3479267** | **18533310** |

[2005 மார்ச் 17

**இணைப்பு–3**

**1980–1981 முதல் 2004–2005 ஆம் ஆண்டு வரையிலான மொத்த உணவு மானிய விவரம்**

| வ.எண். | ஆண்டு | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | 1980-1981 | 1.81 |
| 2. | 1981-1982 | 23.99 |
| 3. | 1982-1983 | 51.68 |
| 4. | 1983-1984 | 79.00 |
| 5. | 1984-1985 | 83.90 |
| 6. | 1985-1986 | 79.00 |
| 7. | 1986-1987 | 65.00 |
| 8. | 1987-1988 | 117.61 |
| 9. | 1988-1989 | 184.53 |
| 10. | 1989-1990 | 208.79 |
| 11. | 1990-1991 | 219.31 |
| 12. | 1991-1992 | 316.00 |
| 13. | 1992-1993 | 361.00 |
| 14. | 1993-1994 | 335.00 |
| 15. | 1994-1995 | 317.00 |
| 16. | 1995-1996 | 615.00 |
| 17. | 1996-1997 | 874.00 |
| 18. | 1997-1998 | 905.00 |
| 19. | 1998-1999 | 907.00 |
| 20. | 1999-2000 | 1145.00 |
| 21. | 2000-2001 | 1540.00 |
| 22. | 2001-2002 | 1240.00 |
| 23. | 2002-2003 | 1240.00 |
| 24. | 2003-2004 | 800.00 |
| 25. | 2004-2005 | 835.00 |

04 – டிசம்பர் 2004)

| வ எண் | | மாளை திப்பு (ரூ) | மற்றவை (மதிப்பு) ரூ. | மொத்தம் (மதிப்பு) ரூ. | மேற்கொண்ட சோதனைகள் | கைது செய்யப்பட்ட நபர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சனவரி | 22250 | 560 | 1425921 | 258 | |
| | | 252500 | 138561 | 3372081 | 615 | 15 |
| 2 | பிப்ரவரி | 79100 | 52241 | 686127 | 382 | |
| | | 328000 | 32503 | 5154405 | 651 | 4 |
| 3 | மார்ச் '( | 2290 | 81680 | 361439 | 314 | |
| | | 845000 | 28150 | 4431459 | 693 | 25 |
| 4 | ஏப்ரல் ' | 5010 | | 292508 | 228 | |
| | | 981000 | 963944 | 4454352 | 668 | 5 |
| 5 | மே'04 | 780 | | 166308 | 132 | |
| | | 241000 | 786502 | 3165717 | 582 | 6 |
| 6 | ஜீன் '04 | 29040 | 9711 | 215956 | 134 | |
| | | 550000 | 66445 | 2896209 | 630 | 19 |
| 7 | ஜுலை | 6228 | | 1294679 | 191 | |
| | | 488000 | 274581 | 5822997 | 538 | 42 |
| 8 | ஆகஸ் | 18301 | 1648 | 1205501 | 282 | |
| | | 107000 | 2200 | 32104231 | 616 | 23 |
| 9 | செப்டம் | 338161 | | 2007162 | 489 | |
| | | 282000 | 106600 | 5323701 | 637 | 27 |
| 10 | அக்டோ | 378531 | 41048 | 1824066 | 364 | |
| | | 378000 | 185600 | 5526837 | 637 | 28 |
| 11 | நவம்பர் | 67459 | 32535 | 906409 | 299 | |
| | | 017000 | 64000 | 5499683 | 743 | 22 |
| 12 | டிசம்பர்' | 82353 | 1040 | 1082137 | 375 | |
| | | 568000 | 592000 | 4860181 | 737 | 34 |
| மொத்த | | 029503 | 220463 | 11468213 | 3448 | 0 |
| | | 037500 | 3241086 | 82611853 | 7747 | 250 |
| | | 067003 | 3461549 | 94080066 | 11195 | 250 |